தனவணிகர் தன்மை

The Nature of Thanavanigar

Radio Talks

by RM. SM. Kathiresan

at the Colombo Broadcasting Station

கதிரேசனார்

நிகழ்த்திய

வானொலி விரிவுரை

செட்டிநாடு நூற்பதிப்புக் கழகம்
தேவகோட்டை

1940

பதிப்புரிமை]

[விலை அணா 12

First Printed: *August 1940.*

Published by
CHETTINAD PUBLISHING HOUSE
DEVAKOTTAH,
AUGUST 1940.

SHAKTI PRESS LTD., (SHANTI PRESS), MADRAS.

தமிழ்த்தாய் வாழ்க

என் கருத்து

பதிப்புரை

தனவணிக மரபின் அன்பர்களே!
தமிழ்நாட்டு நண்பர்களே!

அன்பு வணக்கம்

யான் இலங்கை நகரிலே இருக்கின்றபோழ்து கொழும்பு நகர் வானொலி வழியாகப் பல விரிவுரைகள் வழங்கினேன். தனவணிகரைக் குறித்த வானுரை வழங்கியமைக்குக் காரணம் புலனாகுமாறு பொருளுரையிலே புகன்றுளேன். ஆண்டவனுண்மை அறிந்து, அறத்தாறு பற்றி நின்று, அன்பு நெறி வளர்த்து வந்த பண்டைத் தனவணிக மரபினர் தன்மைகளைத் தற்போதைய தமிழன்பர் குழுவிற்குச் சொல்ல வேண்டுவது எனது கடமை என்றெண்ணலானேன். வளமார்ந்த வணிகரின் பழமைப் பண்பினையும் இடைக்கால இனிய இயல்பினையும் இந்நூற்கண் இயன்றவாறு எடுத்துச் சொல்லப் பெற்றிருக்கின்றன.

தனவணிக மரபினர் தமிழர் சமுதாயத்திலே தலைசிறந்தாராய் நின்று தமிழ்த்தொண்டு புரிதல் வேண்டுமென்பது என் கருத்து. முடியுடை மூவேந்தர் புரந்த முற்காலத் தமிழகத்தில், தமிழன்னையின் வாணிபச்

சிறப்பை யெல்லாம் தனவணிகரே தாங்கிக் கப்பல் விட்டுக் கனகங் குவித்தனர்—நாட்டில் பொன் னுறு பாய்ச்சி, அரும் பொருள் திரட்டிப் பல்வகைச் செல்வம் பெற்றுத் திகழ்ந்தனர். எனினும் இன்றைய தமிழகம் வளம் பொன்றிப் பொலிவிழந்தன்றோ நலிவுறுகின்றது. ஆதலினால் அன்பர்களே! பழம் பெருமை வாய்ந்த தமிழகத்தின் அறிவையும், ஆண் மையையும், வளத்தையும் வாணிபத் திறத்தையும், அருஞ் செயல் ஆற்றுகின்ற உயரிய உரத்தையும், உயி ரனைய உரிமையுறும் விழுமிய திண்மையையும் தமிழ் வீறு பெற்ற தனவணிகர் மீண்டும் இந்நாளில் பெற் றுதல் வேண்டுமென்பதும் என் ஆசை. எனவே, தமிழ் மொழியும் தமிழர் உரிமையும், தமிழ் நாட்டு நலமும் மணிசிறக்க இற்றை நாள் தனவணிகர் இயன்றவாறு செயலாற்றத் துணிதலும், தொழிலாக்கங்கொண்டு பொருளாக்கம் பெருக்கவும், சகோதர நேயம் சால் புறத் தழைக்கத் தக்க பணி புரியவும் வேண்டு மென் னும் கருத்துரை இவ் விரிவுரை நூற்கண் ஆங்காங்கே மிளிர்தல் காணலாம்.

தனவணிகர் நல்லியல்களை உலகினர் உணர்தற் பொருட்டு ஒல்லும் வகையில் உரைத்தல் சாலவும் நன்றென்னும் கருத்துக்கொண்டே வானுரை வழங்கி யமையால் அவ்வுரைகளை ஈண்டு இந்த நூலாக உரு வாக்கி உவந்தளிக்கலானேன் என்று தமிழ் நாட் டார்க்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

தேவகோட்டை
விக்கிரம ஆனி, உசவ

மெ. கதிரேசனுர்.

உள்ளுறை

பக்கம்

என் கருத்து	....	௩
இரண்டு பாமலர்கள்	....	௭
இரண்டு கடிதங்கள்	....	௯
இரண்டு கும்மிகள்	....	௧௭
அடிகளார் விபுலாநந்தர்—அணிந்துரை		௨௫
ஆர். பி. சேதுப்பிள்ளை—முன்னுரை	....	௨௮
வெ. இராமலிங்கர்—சிறப்புப்பாயிரம்	....	௩௧
நன்றியுரை	....	௩௩
வானொலி விரிவுரை (ஒன்று)	....	௧
இரண்டாவது விரிவுரை	....	௯0
மூவேந்தர் நாடுகளிலும் தனவணிகர் செழித்தனர்	....	௧௧௨

இரண்டு பாமலர்கள்

அருளைக் காக்கும் அன்பினையும்,
ஆன்ற வேதம் அத்தனையும்,
பொருளைக் காக்குந் தொழில்களையும்,
பூத வுலகிற் பொதிந் தட்டும்,
இருளைப் போக்கும் அறிவினையும்,
இனிய தமிழ்நா டெங்கிலுமே,
கருணை கொண்டு வளர்த்தார்கள்,
காக்குந் தகை வணிக ரம்மா!

— சுவாமி சுத்தானந்த பாரதி.

சீனா பர்மா சிங்க புரம்,
செல்வம் பொழியு மிலங்கை முதல்,
நானா திசையும் தமிழ்க் கொடியை,
நாட்டிப் பரத நாட்டினிலே,
ஆனாப் பொருளும் புகழும் நல
லறமும் வளர்க்கும் தனவணிகர்;
தேனார் கொன்றைச் சிவனருளால்,
சிறந்து தினமும் வாழுகவே.

— எஸ். தேசிகவிநாயகம் பிள்ளை.

⟶ இரண்டு கடிதங்கள் ⟵

ஈண்டு வெளியிடப்பட்டிருக்கும் இரண்டு அன்புக் கடிதங்களும், புதுவையிலுள்ள அரவிந்த நிலயத்தில் வீற்றிருந்துகொண்டு, தவப்பொலிவு தாங்கி ஒப்பில்லாத் தமிழ்ப்பணி புரியும் சுவாமி சுத்தானந்த பாரதியாரால், எளியேனுக்கு எழுதப் பெற்றது. சுவாமி சுத்தானந்தர் தமிழன்னையின் இன்னுயிரனைய தவப் புதல்வரில் ஒருவர்; இளம் பிராயத்திலேயே சுவாமிஜீ பராசக்தியின் அருளிற்கு இலக்காகி, கவிதா சக்தி பெற்று, யோகத் தனிமையிலே நிலவி தெய்வத் தன்மை வாய்ந்த திருப்பணியிலே ஈடுபட்டு, மக்கள் வாழ்வு நலமுற அறநெறி வழிக்குப் பண்படுத்த முயன்று வருகிறார்.

பேரன்புப் பெரியார் சுத்தானந்த பாரதியாரின் திரிகரணங்களும் அவற்றால், இயங்கும் இயல்பு சான்ற எண்ணங்களும் எதுவெனில், தமிழும், தமிழர் கூட்டமும், தமிழ் நாடும் உலகில் ஒப்பற்ற பெருமை பெற்று விளங்கவேண்டும் என்பதேயாம். சுவாமிகள் என்பால் விடுத்திருக்கின்ற இரு கடிதங்களிலும், தமிழ்மொழி வீறு பெறவும், தமிழர் வீராவேச உள்ளுணர்ச்சி உறவும், தமிழகம் எழுச்சி கொண்டு நல்லறத்தில் நின்று, நலமெய்தவும் வேண்டுமென்ற செம்மை வாய்ந்த சீரிய கருத்துகள் பொலிவுறுதலைக் காணலாம்.

தனவணிகர் பால் அறவோர் சுவாமி சுத்தானந்தர் பேரன்பு மிக்கவர். நம் மரபினர் முன்னேறுதற்

கான பல அரும் பணிகளை இக் கடிதத்திலும், 'தன வணிகர் தன்மை' பொருளுரையிலும் சுவாமிகள் துலக்கியிருக்கின்றார்கள். தெய்வத்தன்மை வாய்ந்த திருப்பணியிலே ஈடுபட்டு, தியாகத்தால், புதுமை பெற்ற தமிழகத்தை உருவாக்க முனைந்து நிற்கும் சுவாமி சுத்தானந்த பாரதியாரின் செந்தண்மை நெறிவழி நின்றொழுக தமிழ் நாட்டாரும், தனவணிக மரபினரும் எழுச்சி யடைந்து, இன்னே மலர்ச்சி யுறுதல் இன்றியமையாத கடமையென மிக வற்புறுத்தி வழுத்துகின்றேன்.

தமிழ்நாட்டின் பழங்குடி மரபினரான தனவணிகர், தவத்திற் பெரியோரான சுவாமி சுத்தானந்தரிடமிருந்து மலர்ந்துள்ள இரு கடிதத்தின் உள்ளுறையிற் உற்றிருக்கும் பொருளினைக் கருத்தூன்றிப் படித்துத் தமிழகத்தைப் பண்டை நிலைக்குக் கொணர ஊக்கங் கொண்டு, கூட்ட வுணர்ச்சியில் தொண்டு புரிய முற்படவேண்டுமெனப் பெரிதும் யான் வேண்டுகின்றேன்.

RM. SM. கதிரேசன்.

ஓம் சுத்த சக்தி
அருளறம் நிறைந்த அறிவோர்
சுவாமி சுத்தானந்த பாரதியாரின்

அன்புக் கடிதம்

(க)

அன்புக் கதிருக்கு,

அன்புப் படம் வந்தது....நன்றி, திருவருள் துணை செய்க.

தமிழ்த்தாய் தங்கள் முயற்சியால் ரேடியோ உலகில் உலாவுவது கேட்டு மனமகிழ்ந்தது. தங்கள் முயற்சி மேன்மேலும் வெற்றி பெறுக!

தனவணிகர் தன்மையைப்பற்றி 'தனவணிகர் முன்னேற்றம்' என்ற நூலில் கூறியுள்ளது. அந்நூல் 1936-ம் ஆண்டில், ஆவினிப்பட்டி விவேகானந்தர் கல்விக் கழகத்தாரால் வெளியிடப் பெற்றது. அத்துடன் 'தமிழுணர்ச்சி'யிற் காணும் குறிப்புகளையும் சேர்த்துக் கொள்ளலாம்.

தனவணிகர் கடமை குறித்துச் சுருக்கமாக இங்கே சில மொழிகள் சொல்லலாம் :—

தனவணிகர், வடநாட்டு குஜராத்தி சேட்டுகள் போன்று வாணிகத் துறையில் ஈடுபட்டுச் செல்வப் பெரு மக்களாக விளங்குகிறார்கள். அவர்களிடம் செல்வத் திருவும், கல்வித் திருவும் சேர்ந்து விளங்குகின்றன. தமிழ் நாட்டிலும், இந்தியாவிலும் விளங்கும் எந்த முன்னேற்ற இயக்கத்திலும் தனவணிகர் பெரும் பங்குகொண்டு உழைக்கின்றனர்.

தமிழர் முன்னேற்றம் தனவணிகர் செல்வக் காத்திலே யுள்ளது. வருங்காலத்தில், தனவணிகர், நமது தமிழகத்தில் உழைப்பும் பிழைப்பும், செழுமையும், வளமையும், கல்வியும், கலையும் பெருகும் அற்புதமான பணிகள் செய்யப் போகின்றனர். இப் பணிக் கிசைந்த மனத்திட்பமும், வினைத்திட்பமும் அவர்களிடம் மிகுந்தோங்குகின்றன. தனவணிகர் ஈட்டுவதிலும் சலியார், ஈவதிலும் சலியாதவர். அவர் வீட்டில் செட்டும், நாட்டில் தாராளமும் கொண்டவர்.

தனவணிகரிடம் அபாரமான நிர்வாகசக்தி இயற்கையிலேயே அமைந்துள்ளது. அவர்கள் எந்தத் திருப்பணியைத் தொடங்கினாலும், எத் தொழிலை மேற்கொண்டாலும் கருத்தான்றி உழைத்து வெற்றி பெறுவர். ஆனால், இதுகாறும் தனவணிகர் ஆற்றலும் செல்வமும் இலங்கை, பர்மா, மலேயா முதலிய நாடுகளைச் செழுமை செய்வதிலேயே கழிந்தன. இப் போது அவர்களுக்குப் புதிய விழிப்பு வந்துள்ளது. தமது முதலை இனி அன்னியர் நாடுகளிற் போட்டு அவர்கள் ஏங்கமாட்டார்கள். தமிழனுக்குரியது தமிழகமே. அத் தமிழகத்தைக் குபேர நாடாக்கவே இனித் தமிழ்த் தனவணிகர் முயலுவர்.

தனவணிகச் செல்வர் கண்காணுச் சீமையில் தேயிலையும், ரப்பரும், நெல்லும், தேக்கும் விளைவிப்பதினும், தாய் நாட்டிலேயே கோடிக் கைத்தொழில்கள் வளர்க்கப் பயனுக வேண்டும். செல்வம் பெட்டியில் உறங்கக் கூடாது. அது உழைப்பும் பிழைப்புமாக மாற வேண்டும். தொழிலும்—செல்வமும் மேகமும், கட

னும் போன்றன. இரண்டையும் பொருத்தி நாட்டை வளமை செய்யும் கதிரேசர்களாக இனி வரும் தன வணிகர் விளங்குவர், விளங்குக!

நீங்களெல்லாம் நீடூழி வாழ்ந்து தமிழன்னைக்குத் தொண்டு செய்து, அவளை அரியணையில் ஏற்றிவைக்க வேண்டும். செய்தது மிகச் சிறிது; செய்ய வேண்டியது மிகப் பெரிது. சிவனருளால் இதன் ஆர்வம் உங்களைப்போன்ற வீரச் செல்வர் மூலம் நிறைவேற வேண்டும்.

செல்வ வணிகர் சீர்சிறந் தோங்குக!

அரவிந்த நிலயம்,
புதுவை,
19-4-39.

எலலாநத்தும்,
அன்பு, அன்பு, அன்பு,
சுத்தானந்த பாரதி.

இரண்டாம் கடிதம்

அன்புக் கதிருக்கு,

இன்பமுண்டாக!

* சிலம்புச் செல்வம் சாது அச்சகத்தில் விரைவாகவே நடக்கிறது. அது மிகவும் அரிய பெரிய ஆராய்ச்சி நூல். படங்களுடன் வெளிவருகிறது. அந் நூல் தமிழர் பெருமையை வானளாவ உயர்த்திக் காட்டும்.

தனவணிகரைப்பற்றி சிலம்புச் செல்வத்தில் சிறப்பாகக் கூறியுள்ளது. வணிகர் நேர்மையை அதில் காணலாம். தனவணிகரிடம் இதற்குச் சிறப்பாக உள்ளன்பும் நன்றியும் உண்டு. ஏனெனில் இன்று இந்த மோனக் கவியை முன்வந்து ஆதரித்தவர் தனவணிக மணிகளே யாவர். அவர் நலத்திற்காக யோகத்தில் இது தியானித்து வருகிறது. தனவணிகர் தாம் இனி வரும் தமிழகத்தின் சிற்பிகளாவர். அவராலேதான் நமது தமிழும், தமிழர் செல்வமும், தொழிலும், கல்வியும் வளர்ச்சி பெற வேண்டும்.

இத்துடன் சிலப்பதிகாரச் செல்வத்தினின்றும் ஒரு பகுதி அனுப்பியுள்ளது. அது தனவணிகரைப்

---

* சுவாமி சுத்தானந்தர் இயற்றித் தந்த சிலம்புச் செல்வம் என்னும் சீரிய நூல் இதுபோழ்து வெளிவந்திருக்கிறது. சிலம்புச் செல்வத்தின் சிறப்பியல்புகளைக் குறித்து இரண்டாவது நிகழ்த்திய ரேடியோப் பேச்சில் குறிப்பிட்டிருக்கின்றேன். சிலப்பதிகாரச் சிறப்பை 'சிலம்புச் செல்வத்'திலே பைந்தமிழர் காண்க.

பற்றியது. அதைத் தெளிவாக எழுதிக்கொண்டு ரேடியோவிற் பேசுக. இத்துடன் அனுப்பியுள்ள தொழிற் கும்மியை அவசியம் ரேடியோவில் இனிமையாகவும், நம்மவருக்கு உணர்ச்சி யுண்டாகும்படியும் பாட வேண்டும்.

ஐயனே, உலகம் முன்னேறும் வேகத்தையும் நமது தமிழர் உறக்கத்தையும் பார்த்தால் மனம் வருந்துகிறது. தமிழ் நாட்டில் அன்னியர் தாம் தலைத்தோங்குகின்றனர். தமிழர் முன்னேற ஒரு நிலையம் காணுவோமென்றால் அதற்கேற்ற இடங்கூடக் கிடைக்காமல் இருக்கிறது. தமிழர் தலை நிமிர வேண்டும். அதற்கே தவம் புரிவது. சும்மா வள்ளுவரையும் கம்பரையும் காட்டிப் பெருமை பேசுவதிற் பயனில்லை. தொழில், வாணிபம் ஆகிய துறைகளில் தமிழர் சென்று ராக்பெல்லராகவும், போர்டுகளாகவும், குபேரராகவும் ஆகவேண்டும். வணிகர் பணந்தானே ஐரோப்பியருக்கு இவ்வளவு செல்வாக்கீந்தது! எலிஜபெத்து காலத்தில் மங்கிக் கிடந்த இங்கிலாந்து இன்று உலகையாளுவது யாதால்? தொழில், வாணிபம் இவற்றால் வந்த செல்வத்தால். தமிழரைத் தொழிலுக்கு ஊக்கவேண்டும்.

ஒவ்வொரு ஊரிலும் எமது தமிழர் ஏதோ கொஞ்சம் பணம் சேர்த்த மட்டில் மனமகிழ்ந்து, கையைக் கட்டிக்கொண்டு சோம்பேறியாகத் திண்ணை தேய்ப்பதைக் கண்டால் பரிதாபமா யிருக்கிறது

ஐயனே, தமிழர் செல்வச் செழிப்புற வேண்டும். அருள் பொருள் இரண்டும் வாழ்வின் இரண்டு உயிரி

கள். பொருள் வேண்டும்; தொழிலோங்க வேண்டும். இக் கருத்தமைந்த தொழிற் கும்மியை ரேடியோவில் கம்பீரமாகக் கதிரேசு முழக்கட்டும்! 'போ போ' என்று கழுத்தைப் பிடித்து நம்மை அன்னியர் தள்ளுகின்றனர். அப்படி இலங்கையிலும் வேறு நாடுகளிலும் சிறுமைப்பட்டுக் கிடக்கும் தமிழருக்கு ஒரு வீரக் கனல் பிறக்கும்படியாக இக் கும்மியைப் பாடுக!

அரவிந்த ஆஸ்ரமம்,
புதுவை,
1-6-39.

அன்பு, அன்பு, அன்பு,
சுத்தானந்த பாரதி.

இரண்டு கும்மிகள்

அருங்கலைச் செல்வி தமிழம்மையை அருந்தமிழ்த் தெய்வமென அகிலத்தார் போற்றுதற்கு, அல்லும் பகலும் அயர்விலாதுழைக்கும் பைந்தமிழ்ச் செல்வர் சுவாமி சுத்தானந்த பாரதியார், எளியேனின் வாஞ்சையைப் பேச்சிற்கென இரு கும்மிகளை இயற்றி அருளினர். ஒன்று: 'தனவணிகர் கும்மி'; மற்றொன்று: 'தொழிற் கும்மி.' முதற் கும்மி, தனவணிகர்க்கு உரியது. மற்றையது, தமிழ் நாட்டார்க் குரியது. இவ்விரண்டு கும்மிகளையும் இலங்கை நகர் வானவசனியில் நிகழ்த்திய 'தனவணிகர் தன்மை' உரையோடு இணைத்துப் பாடப் பெற்றன.

தனவணிகர் கும்மி மிக நலம் பயப்பது; உயரிய கருத்தமைந்தது. தற்போதைய தனவணிகர் தன்மையைத் தமிழ் நாட்டவர்க்கு நன்கு உணர்த்துவது. இம்மரபினர் எத்தகைய தகைமையாளர் என்பதைத் தனவணிகர் கும்மியைப் படிப்பார் தெள்ளிதின் அறியலாகும். இக் கும்மியைத் தனவணிகப் பெண்பாலார் முழக்கவேண்டும்; விசேட நாட்களில் இளம் மகளிரெல்லாம் ஒன்றுகூடி இக் கும்மியை முழக்கிய பின்னரே நிகழ்ச்சி தொடங்கல் வேண்டும். தனவணிகரால் நடாத்துவிக்கின்ற பள்ளிகளிலே இக் கும்மி முதன்மையாகச் சொல்லப் பெறவேண்டு மென்பதும் என் கருத்து.

தொழிற் கும்மியில் தமிழகம் சுதந்தர முறுதற் கான தொழிலாக்க வகையினை வழுத்துகின்றார் சுவாமிஜீ. தமிழகம் சீரும், சிறப்பும், வளமும், கலையும், அருளழகும், பொருளழகும் நிறைந்து பொலிய வேண்டுமாயின், தொழிற் கும்மியில் பகர்ந்துள்ள தொழிற்கலை பலவற்றையும் தமிழர், திறமையாகப் பயின்று, பயனுக்க முயலல் வேண்டும். தமிழ் நாட்டார் பிற நாட்டாரைப்போல எல்லாத் தொழிற் துறைகளிலும் முன்னேற வேண்டு மென்னுங் கருத்தே தொழிற் கும்மியில் விரவி இனிது விளங்குகின்றது. இதனைத் தனவணிகரும் உணர்தல் நன்று.

இவ் விரு கும்மிகளையும் அமுதத் தமிழிலே அழகாக அமைத்து, தனவணிகரும், தமிழ் நாட்டாரும் தொழில் வளமுறுதற் குரிய கருத்துக்களை முழக்குகின்றார் சுவாமி சுத்தானந்தர். தமிழகப் பெரு மக்களும், தனவணிக மரபினரும் படித்துப் பயனடைதல் வேண்டுமென வேண்டுகின்றேன்.

RM. SM. கதிரேசன்.

தனவணிகர் கும்மி

எல்லார்க்கும் இன்பப் பொருளாலே—சக்தி
இறைவன் சோதி யருளாலே
செல்வமும் ஈகையுஞ் சேர்ந்துநீ டோங்குக
சேமமாய்ச் செந்தமிழ்ச் செட்டிகளே!

மன்னர்க்குப் பின்னவர், மன்னிளங் கோக்கள்
வளம்பெறு வாணிபர், இப்பர்களே;
தேன் மொழிக் கற்பகஞ் செழிக்கச் செய்திடுஞ்
செட்டிநன் னாட்டினர் வாழியவே!

கல்வி வளர்க்குந் தனவணிகர்—நல்ல
கைத் தொழில் காக்குந் தனவணிகர்
பல்வகை யான தருமப் பணிகளைப்
பாரெங்குஞ் செய்யுந் தனவணிகர்

சைவ சமயத்தைப் போற்றிடுவார்—கோயில்
திருப்பணிகளை யாற்றிடுவார்!
தெய்வ பக்தியைப் பரப்பிடுவார்—நாட்டில்
தேவார வோசை நிரப்பிடுவார்.

சத்திரஞ் சாவடி பசு மடங்களுஞ்
சாலைகள் சோலை குளங் கிணறு
வைத்திய சாலைகள் வாகா யமைத்தனர்;
மன்னுயிர்த் தொண்டு செய் மாண்பினரே!

சிங்கை யிலங்கை செய்கோன் பர்மா தேசங்கள்
சென்று தலத்தொழில் செய்திடுவார் ;
பொங்குந் திரவியம் போற்றிக் கருத்துடன்
புவியணிய நல்வினை யாற்றிடுவார் !

வீட்டினிற் செட்டாக வாழ்ந்திடுவார்—ஏதும்
வீணின்றி மிக்கக் கணக் கிடுவார் !
நாட்டிற்குத் தாராள மாய்க் கொடுப்பார்—இவர்
நல்ல பொதுநல வூழியரே !

தேச விடுதலை பெற்றிடவே—பல
தீரரைத் தந்த தனவணிகர் ;
தேசக் கலைகள் செழித்திடவே—செல்வத்
திரு விளங்குந் தனவணிகர்

வாழியவே நீடு வாழியவே——வானும்
மண்ணுமுள்ள மட்டிலும் வாழியவே !
ஏழு பிறப்பிலும் ஈகையுஞ் செல்வமும்
இலகிச் *செட்டிகள் வாழியவே !

* செட்டி = சிறந்த மேலோர்.

தொழிற் கும்மி

முத்தொழி லாளி படைத்த வுலகினை
முற்ற வளர்க்கும் உபகாரி
கைத்தொழி லாளி, களிப்புற வாழ்கெனக்
கை கொட்டிக் கும்மி யடித் திடுவோம்.

வீடு நலம்பெற வித்தை நலம்பெற
வீர விடுதலை வெற்றிபெற
நாடு நலம்பெறப் பாடு படுகின்ற
நல்ல தொழிலாளி வாழியவே!

வாருங்கள் ஆண்பிள்ளைச் சிங்கங்களா—நிலம்
வாழு வறுமையை ஓட்டிடுவோம்
பாருங்கள் பற்பல நாடுகளை—நாமும்
பாய்ந்துமுன் னேறப்பணி புரிவோம்.

நாட்டுக்கு நல்ல வளமை யுண்டாம்—உங்கள்
நாடிக்கு நல்ல திறமை யுண்டாம்
வீட்டுக்கு நல்ல விளைவு முண்டாம்—வாரீர்
வேலைக்குத் தக்கதோர் கூலி யுண்டாம்.

மேடை மினுக்குகள் செய்துவிட்டீர்—அச்சு
விளம்ப ரங்களும் எய்தி விட்டீர்
ஆடை யுணவிற்குத் திண்டாட்டம்—நாட்டில்
ஆண்பிள்ளைகாள் என்ன கொண்டாட்டம்!

அன்னியர் யந்திரம் வாங்குகின்றீர்—அதை
ஆக்குவோம் என்றுற்பின் வாங்குகின்றீர் !
பொன்மலை யைக்கடல் கொட்டுகின்றீர்—வீட்டிற்கும்
போதுபோ காதுகை கட்டுகின்றீர் !

கட்சிச் சண்டை பல போடுகின்றீர்—பின்னே
காக்காய்க் கூட்டம் போலே ஓடுகின்றீர்
உட்சினம் வைத்துற வாடுகின்றீர்—ஐயோ
ஒற்றுமை யின்றித்தள் ளாடுகின்றீர் !

காலத்தை வீணாய்க் கொலைபுரிவீர்—பழங்
கதைகள் பேசிக் கொண்டே திரிவீர் !
வேலைக்கு நாக்கை வழிக்கின்றீர்—சொன்னால்
விதியை நொந்துப் பழிக்கின்றீர் !

மண்ணில் விளைவுண்டு வானில் மழையுமுண்டு,
மனங் கொண்டுழைக்கத் தனமும் உண்டு ;
உண்ணத் தெரியாது திண்ணைகளைத் தேய்த்தே
ஊருக்குப் பாரமாய் வாழ்வீரோ ?

வித்துண்டு நாட்ட நிலமுண்டு, நீருண்டு
வெட்டி நெய்யத்தறி ஓட்ட முண்டு
சத்துள்ள மூலப் பொருளுண்டு, வேண்டிய
சாத்திரங் கற்கத் திறமை யுண்டு.

இரும்பு நிலக்கரி எண்ணெய்ச் சுரங்கம்
இயந்திர சாதன மெல்லா முண்டு
கரும்பு வெட்டிக் கடித்துண்ண மாட்டாது
கையைப் பிசைந்து கலங்கு கின்றீர் !

பாடுபட் டோருக்குத் தேடிவரும் பலன்
பத்சைப் பாட்டேனிப் பைந்தமிழீர் !
காடு மலையுங் கனிகள் குலுங்கிடக்
காணும் உழைப்பினைப் பூணுவமே.

கப்பல் விடுவோம் கனிகளைத் தோண்டுவோம்
காற்றில் மின்சாரக் கனல் பிடிப்போம்
ஒப்பரும் ரேடியோ அற்புதங்கள் செய்வோம்
ஒன்றி முயலுங்கள் வன்றமிழீர் !

பஞ்ச பூதங்களுங் கொஞ்சி யழைத்துப்
பயன்கள் வியன்பெறத் தந்துதவும்
நெஞ்சில் உரங்கொண்டு நேரத்தைப் பொன்னாக்கி
நீடு முயற்சிசெய் வீரருக்கே.

ஓங்கி யுலகம் செழிப்புறவே—மாந்தர்
ஓடும் அருவிபோல் வாழ்ந்திடுவோம்
தூங்கா தியற்கையைச் சோதித்துக் கோதற்ற
தொழில்செய் யோகத்தில் ஆழ்ந்திடுவோம் !

கையினிற் சக்தி கருத்தினிற் சக்தியிக்
கண்ணில மெங்கிலும் சக்தி மயம்
செய்கையிற் சக்தி நம் சிந்தையிற் சக்தி நாம்
சேர்ந்துழைத் தால்வரும் சக்தி வெள்ளம்.

அடிகளார் விபுலாநந்தர்

அருளிய

அணிந்துரை

●●● ●●●

தனவணிக மரபினராகிய நண்பர் கதிரேசர் ஆகாய வசனியில் வெளியிட்ட விரிவுரை ஒன்றினை அச்சுவாகன மேற்றி வெளியிடுதல் கருதி ஆங்கவ் விரிவுரைக்கு ஒரு முகவுரை யெழுதி யுதவும்படி பன்னாள் என்னைக் கேட்டனர். ஓய்வின்மை காரணமாக அப்பணி இந்நாள் வரையும் நிறைவு பெற்றிலது. இன்று மாலையிலே பெரியோரது கட்டளையின் படி தமிழகத்தினின்று புறம் போந்து இமயமலைச் சாரலிலுள்ள தவப்பள்ளி யொன்றினை (The Advaita Ashrama, Mayavati, Via Lohaghat, Dt. Almora, Himalayas) நாடிச் செல்கின்றேனாதலினாலே, நட்புரிமையினாலே ஏற்பட்ட பணியினை இன்றே நிறைவிப்பது இன்றியமையாத தாயிற்று.

விரிவுரை முழுவதையும் ஆக்கியோன் படிக்க ஒருமுறை கேட்டேன். நாட்டுக்கோட்டை நகரத்தார் இந்நாளிற் செய்து வருகின்ற அறப்பணிகளும், அவர் தமது அறிவாற்றலும், தொழில் வன்மையும், மேல்வருங் காலத்திலே தமிழகம் பொலிவுறுமாறு இம் மரபினர் செய்து நிறைவேற்ற வேண்டிய தொழிற் றுறைகளும் இவ்விரிவுரை யகத்தே நன்கு விளங்கக் கண்டேன்.

தனவணிகரது பழமையைக் குறித்த பாகம் இன்னும் நிறைவுற எழுதப்பட வேண்டுமென நண்பர் கதிரேசருக்குக் குறிப்பிட்டேன். தமிழ்ப் பெருங் காப்பியங்களுள்ளே கண்ட சிறந்த பொருளொன்று இவ் விரிவுரையிற் சேர்க்கப் பட வேண்டுமென்பது எனது கருத்து.

தனவணிகரது சீர்மையினைக் குறித்து அம்மரபிலுதித்த தமிழ்ப் பெரும் புலவராகிய கூலவாணிகன் சாத்தனார் மணிமேகலை யென்னும் தமிழணி கலத்தினுள்ளே விளக்கிப் போந்த ஒரு பேருண்மையுளது. மன்னர் குலத்தவராகிய திருத்தக்க தேவரும் இவ்வுண்மையினைத் தாமியற்றிய தமிழ்ப் பெருங்காப்பியத்தினுள்ளே திகழவைத்தார். தனவணிகரது உயர் குணங்களுள்ளே தலையாய உயர்குண மெதுவெனும் வினாவிற்குச் சாத்தனாரும், தேவரும் விடை பகர்ந்தனர். இவ் விடையிற் கண்ட பொருளினைச் சுருக்கமாக வீண்டுக் குறிப்பிடுகின்றேன். நண்பர் கதிரேசர் விரிவுற எழுதி இவ்வுரையுட் சேர்த்துக் கொள்வாராக.

“ நாக நன்னா டாள்வோன் றன்மகள்
பீலிவளை யென்பாள் பெண்டிரின் மிக்காள்
பனிப்பகை வானவன் வழியிற் றோன்றிய
புற்றிளங் குழவியொடு பூங்கொடி பொருந்தியித்
தீவகம் வலஞ்செய்து தேவர்கோ னிட்ட
மாபெரும் பீடிகை வலங்கொண் டேத்துழிக்
கம்பளச் செட்டி கலம்வந் திறுப்ப
அங்கவன் பாற்சென் றவன்றிற மறிந்து
கொற்றவன் மகனிவன் கொள்கெனக் கொடுத்தலும்
பெற்ற வுவகையன் பெருமகிழ் வெய்திப்
பழுதில் காட்சிப் பைந்தொடி புதல்வனைத்

தொழுதனன் வாங்கித் துறைபிறக் கொழியக்
கலங் கொண்டு பெயர்ந்தனன்''

எனச் சாத்தனார் குறிப்பிடுகின்றார்.

"தம்பொரு ளென்பதம் மக்கள்" என்பது பொய்யா மொழி. அதிலுங் கொற்றவனது குழந்தை விலைமதித்தற் கரிய மாணிக்க மன்றோ? அதனைத் தாய் யார் வசத்து ஒப்பு விக்கின்றாள்? காவிரிப்பூம் பட்டினத்து வணிகனொருவனிடம் ஒப்புவிக்கின்றாள். இப்பரிசே, சூரிய குலத்துச் சச்சந்த மன்னனது அரும்பெறற் குழந்தையாகிய சீவக நம்பியை விஜயமாதேவியார் கந்துக் கடனென்னும் வணிகனிடத்து ஒப்புவிக்கின்றார்; கலுழவேக னென்னும் வித்தியாதர மன்னன் தனது அரும் பெறன் மகளாகிய காந்தருவ தத்தையை இராசமாபுரத்து வணிகனாகிய ஸ்ரீ தத்தனிடத்து ஒப்புவிக்கின்றான். பிறர் தம்மிடத்து நம்பிக் கொடுத்த அருநிதியத்தினைப் பழுதின்றிப் பாதுகாத்து உரியாரிடஞ் சேர்க்கும் உயர்குணம் வணிகர்க்குரிய மாபெருந் துலைம் என்னும் உண்மை சாத்தனாரும் தேவரும் கூறியவற்றால் அறியப் படுவதன்றோ?

இராமகிருஷ்ண ஆஸ்ரமம்,
கொழும்பு,
18-8-39.

சுவாமி விபுலாநந்தர்.

சென்னைப் பல்கலைக் கழகத்
தலைமைத் தமிழ் விரிவுரையாளர்
திருவாளர் ஆர். பி. சேதுப்பிள்ளை அவர்கள்
பி. ஏ., பி எல்., நல்கிய

முன்னுரை

தனவணிகர் தமிழ்நாட்டுப் பழங்குடியினராவர். இவர் சிறந்து வாழ்ந்திருந்த இடம் காவிரிப்பூம்பட்டினம் என்பர்.

" கலத்தினும் காலினும் தருவன ரீட்டக்
குலத்திற் குன்றாக் கொழுங்குடிச் செல்வர் "

என்று இளங்கோவடிகளால் புகழப் பெற்றவர் இவரே. காவிரிப்பூம்பட்டினத்தில் கற்பினுக்கணியாய கண்ணகி பெருங்குடி வணிகர் மாபிற் பிறந்து சிறந்தாள். அவள் கணவன் " ஏசாச் சிறப்பின் இசை விளங்கு பெருங்குடி மாசாத்து வானுக்கு மகனாய்த் " தோன்றினன். இவ்விருவரையும் ஈன்ற தமிழ்நாடு சிலம்பின் செல்வம் பெற்றது. பத்தினி வழிபாடு பாரத நாட்டிற் பரவுதற்குக் காரணமாய் நின்ற கண்ணகியை ஈன்ற குலத்தின் பெருமையைப் பிரித்து அளவிட்டுப் பேசுதல் எளிதாமோ ?

தொன்று தொட்டுச் சிவநெறியையும், செந்தமிழையும் இருகண்ணெனக் கருதும் தனவணிக மாபில் புனிதவதியார் தோன்றினர். பண்ணார்ந்த தமிழ்ப் பாட்டால், கண்ணுதற்பெருமானைப் போற்றினர். " நம்மைப் பேணும் அம்மை " யென்று ஈசனர் ஏத்தும் பெருமை வாய்ந்த இவ்வம்மையார் தனவணிகர் குலதெய்வமாய்த் திகழ்கின்றார். இன்னும் வணிகர்குல மணிவிளக்காய் ஒளிரும் ஆதிரையின் பெருமையை அறியாதார் யாரே? அருளறம் பூண்ட மணிமேகலை ஏந்திய திருவோட்டில் அமுதளித்துப் " பாரகமடங்கலும் பசிப்பிணி யறுக " என மனமார வாழ்த்திய ஆதிரையின் சீலம் மாண்புடைய தன்றோ ?

தனவணிகர் குலத்தில் தோன்றிய ஆடவர் என்றும் சிறந்த தாளாளர்.

"தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு"

என்னும் பொருளுரையைப் போற்றி வாழ்பவர். வாணிகத்தால் மெய்ப் பொருள் படைத்த ஏலேல சிங்கர் பஞ்சத்தால் நலிந்த ஏழை மாந்தருக் கிரங்கி, தம் களஞ்சியத்தில் நிறைந்திருந்த நெல்லை அன்னார்க்கு வாரி வழங்கி அவர் திருந்திய முகங்கண்டு திளைத்தாரென்று கர்ணபரம்பரை கூறுகின்றது. இத்தகைய சீலம் வாய்ந்த ஏலேல சிங்கர் மெய்ஞ்ஞானச் செல்வராய திருவள்ளுவரோடு உறவு பூண்டிருந்தாரென்று கூறுவதும் வியப்பாமோ? இன்னும் காவிரிப்பூம் பட்டினத்தில் பெரும் பொருள் படைத்திருந்த பட்டினத்தார் "காதற்ற ஊசியும் வாராது காணுங் கடைவழிக்கே" என்றுணர்ந்து பொருளனைத்தும் துறந்து, யான் எனது என்னும் செருக்கறுத்து, உண்மைத்துறவின் பெருமையை உலகினர்க்கு விளக்கிப் போந்தார். இத்தகைய பெருமக்களைத் தோற்றுவித்த தொல்குலம் செம்மைசான்ற தென்பதில் ஐயம் ஒன்றுண்டோ?

இன்னோரன்ன சீர்மை வாய்ந்த தனவணிகர் பெருங் குலத்தின் பழுதிலாத் திறனையும், எதிர்காலத்தின் சிறப்பையும், இந்நூல் இனிது விளக்குகின்றது. தனவணிகர் நெடுங் கடல் கடந்து பிறநாடுபோந்து, திருமகள் உதவியால் நில மகளின் செழுமையை விளக்கினர். புல்வடர்ந்த புலங்களை நெல்விளையும் நிலங்களாக்கினர். அறிநெறி திறம்பாது ஈட்டிய அரும்பொருளை அறப்பணிகளில் உய்த்தனர். இக்காலத்திய தனவணிகச் செல்வரும், பண்டைக் குலநலம் குன்றாது வாழ்ந்து வருகின்றனர். தமிழ்நாடெங்கும் சிதைந்து பழுதுற்ற சிவாலயங்களிற் சிறந்த திருப்பணி புரிந்து வருகின்றனர்.

அறவோரைப் பேணும் அன்னசாலைகள் அமைக்கின்றனர். வடகலைக்கும் தென்கலைக்கும் உரிய கல்லூரிகள் அமைத்து இருகலையும் வளர்க்கின்றனர். பல்கலையும் வளர்தற்குரிய அண்ணாமலைக் கழகத்தைத் தில்லையின் எல்லையில் தனவணிகர் கோமான் நிறுவியுள்ளார். இங்ஙனம் பல்லாற்றாற் பொருளீட்டி நல்லாற்றாற் பயன்படுத்தும் பான்மை வாய்ந்த பெருங்குலத்தின் வரலாறு தனவணிக இளைஞர்க்குச் சிறந்த ஊக்கம் தருவதாகும்.

"தனவணிகர் தன்மை"யை இலங்கை வானொலியின் வாயிலாக வழங்கிய அன்பர், ராம. சி. மெ. கதிரேசன் செட்டியார் அவர்கள் ஆர்வம் வாய்ந்த அறிஞர்; பாடறிந் தொழுகும் பண்புடையார். இவர் வாக்கின் வன்மை இந்நூலால் நன்கு விளங்கும். குலநலம் பேணும் குறிக்கோள் கொண்டு வானொலி வழங்கிய அன்பர் கதிரேசரை ஆதரித்தல் தனவணிகர் கடமையாகும்.

சென்னை,
22-4-40.

ரா. பி. சேதுப்பிள்ளை.

தமிழ்நாட்டுத் தேசியக் கவி
நாமக்கல் திருவாளர்
வெ. இராமலிங்கம் பிள்ளை அவர்கள்

இயற்றித் தந்த → **சிறப்புப் பாயிரம்**

விருத்தம்

சரித்திரத்துக் கெட்டாத காலந் தொட்டு
சன்மார்க்க நாகரிக சமூகமாகி
விரித்துரைக்கப் பெருமை தரும் வீரவாழ்க்கை
வேந்தர்களின் செங்கோலில் விளங்கி நாளும்
தரித்திரத்துக் கெட்டாமல் குடிகள் வாழ்ந்த
தமிழ்நாட்டுத் 'தனவணிகர் தன்மை' யெல்லாம்
கருத்தமைந்த கட்டுரையால் வெளியிட்டந்தான்
கதிரேசன் தமிழ்த்தாய்க் கோர் காதல் மைந்
[தன்.

தமிழ்நாட்டுத் தனித் தெய்வம் முருகன் பக்தர்
'தனவணிகர் தன்மை' யெனும் தலைப்பினோடு
அமிழ்தாகும் தமிழ்மொழியில் ஆர்வம் பொங்க
ஆகாய ஒலிபரப்பில் இலங்கை நாட்டில்
கமழ்ஞானக் கலைகளிடம் காதல் மிக்கோன்
கதிரேசன் முன்னுரைத்த பேச்சைக்கூட்டி
இமிழ்ஞாலத் தெல்லாரும் என்றும் பார்த்து
இன்பமுறப் புத்தகமாய் வெளியிட்டந்தான்.

பண்டிருந்த தமிழர்களின் பெருமை வாய்ந்த
பழக்கவழக் கங்கள்பல இன்றும் பார்க்கக்
கொண்டிருந்து காத்துவரும் குலத்தின்மக்கள்
கோடானு கோடிபணம் செலவு செய்து
பெண்டிருந்த சரிபாதிப் பெருமான்கோலப்
பெருங்கோயில் திருப்பணிகள் பெரிதும் பே
[றும்
தொண்டு மிகும் ' தனவணிகர் தன்மை ' யாவும்
தொடுத்தளித்த கதிரேசன் சுகித்து வாழும்.

—*—

நன்றியுரை

தோழர்களே,

இந் நூலின் உள்ளுறையைப் படித்தற்கு முன்னர் இந் நூலுக்கு அணிந்துரை—முன்னுரை—கருத்துரை—சிறப்புக் கவி தந்த தமிழ்ப் பெருமக்கட்கு நன்றியுரை நவில்தல் எனது கடமையாகுமன்றோ! தனவணிகர் தன்மைகளைத் தமிழ் நாட்டார் அறிதற்காகத் தக்கார் பலரின் சான்றுகளும், தமிழறிஞர் சிலரின் கருத்துகளும் இந்நூற்கண் இயன்றவரை எடுத்தோதப் பெற்றிருக்கிறது.

உள்ளுறையிலே தமிழ்ப் பெரியார் மூவரின் இனிய கருத்துரைகள் இணைக்கப் பெற்று இலங்குகின்றது. புதுவையம்பதியிலே தவக்கோலந் தாங்கி தமிழ்ப்பணி புரியும், தமிழன்னையின் சால்புறு மைந்தர் சுவாமி சுத்தானந்த பாரதியார் தனவணிகர் பண்பினைத் தமது அரிய கருத்துரையில் இனிது புலனாகுமாறு புகன்றுள்ளார்கள். இரண்டாம் முறை நிகழ்த்திய வானுரையில், தமிழ்ப் பெரியார் மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் எழுதிய 'தமிழ் நாட்டு வணிகர்' என்னும் கட்டுரையின் சில பகுதி சேர்க்கப்பெற்றிருக்கிறது. பண்டைத் தமிழ் நாட்டுத் தனவணிகர் சால்பினை உ. வே. சாமிநாதையர் அவர்கள் அழகுற மொழிந்துள்ளார்கள். ஐயரவர்

களின் கருத்துரை வானுரை வழங்கிய பின்னர் சேர்க்கப் பெறலாயிற்று. செந்தமிழ்ச் செல்வர் டி. கே. சிதம்பரநாத முதலியார் தந்த கருத்துரை தற்காலத் தனவணிக மரபின் உயர்வுகளை உலகுக்கு உணர்த்தும் பெற்றி மிக்கதாகும். வானுரையில் வழங்குதற்கு வணிகரைக் குறித்த கருத்துரை தருமாறு திருவாளர் டி. கே. சிதம்பரநாதர் பால் கேட்டதும் இன்புடன் உடன் தந்து உதவினூர்கள். வணிகர் பண்பினை வளமுறக்காட்டி, சீர்மை மிக்க சீரிய கருத்துரை ஈந்த புலவர் மணிகளான மூன்று தமிழ்ப் பெரியார்கட்கும் எனது நன்றியுள்ள வணக்கத்தைச் செலுத்துகின்றேன்.

இந் நூலுக்கு அணிந்துரை அருளிய அடிகளார் விபுலாநந்தர்க்கு என் அன்பு வணக்கத்தை நன்றியுடன் உரிமையாக்குகின்றேன். சுவாமிஜீ விபுலாநந்தர் விளம்பியவாறு தனவணிக மரபின் பழமைப் பண்பிற்குச் சான்ருகச் சங்க மணிச் செல்வங்களான பழந் தமிழ் நூல்களினின்று மூன்று குறிப்புகள் இந் நூலிலே தொகுக்கப் பெற்றிருக்கிறது. அடிகளார் விபுலாநந்தரிடம் முதலில் நிகழ்த்திய வானுரை ஒன்றினையே வாசித்துக் காட்டும் வாய்ப்பு நேர்ந்ததால், இரண்டாவது பொருளுரையை அன்னூர் கண்ணுற இயலவில்லை.

அடுத்ததாக இந்நூலுக்கு முன்னுரை உதவிய சென்னைப் பல்கலைக் கழகத் தலைமைத் தமிழ் விரிவுரையாளரும் பைந்தமிழ்ச் செல்வருமான திருவாளர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கட்கு எனது அன்பு

நன்றியை இன்புடன் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். தமிழரசியின் அருந்தவப் புதல்வராய—ஆர். பி. சேதுப்பிள்ளை அவர்கள் சங்கமணிச் செல்வங்களான பழந் தமிழ் நூல்களை ஆராய்ந்து, அழகிய நடையில் இனிய நூல் பல ஈந்து தமிழ் வளர்க்கும் பான்மையைத் தமிழ் பெருமக்கள் அறிந்து, என்றும் நன்றி பாராட்டும் கடமை யுடையரன்றோ!

இந் நூலுக்குச் சிறப்புக் கவி ஈந்தவர் செந்தமிழ்க் கவிஞர், நாமக்கல்—வே. இராமலிங்கம் பிள்ளை அவர்களாவர். அன்பர் இராமலிங்கரைத் தமிழ்நாட்டார் அறிவர்; இவர் சிறந்த ஓவியப் புலவரும், தேசியக் கவிஞருமாவர், 'தனவணிகர் தன்மை' க்குப் பாயிரப்பாட்டுத் தந்த இனிய நண்பர் இராமலிங்கர்க்கு என் மெய்ந் நன்றி உரியதாகும்.

'இரண்டு பாமலர்களில்' ஒரு பாமலர் தந்த புத்தேரிப் புலவர், திருவாளர் எஸ். தேசிக விநாயகம் பிள்ளை அவர்கட்கு நலமார்ந்த நன்றி செலுத்துகின்றேன்.

'தனவணிகர் தன்மை'யை இவ்வளவு அழகாக அச்சிட்டுத் தந்த 'சக்தி' அச்சகத்தார்க்கு நன்றியுரை நவிலுகிறேன்.

அனைவருக்கும் வணக்கம்.

அன்பு,

மெ. கதிரேசர்,

தேவகோட்டை.



தனவணிகர் தன்மை

கதிரேசர் வானொலி விரிவுரை

ஈஸ்வர, தை, ஏட
20-1-38

முதற் சொற்பொழிவு

இலங்கை ஆகாய வசனியில் தனவணிக மரபின் சீர்மை குறித்து ஒரு சொற்பெருக்கு ஆற்ற வேண்டுமென என்னகத்தே எண்ணினேன். புது யுகத்தில் மலர்ந்துள்ள இந்த அற்புதமான வான்பொறி (Radio). பரப்புகின்ற ஒலியின் வழியாகத் தமிழகத்துத் தனவணிகர் தன்மைகளைத் தமிழ் நாட்டார்க்குச் சொல்ல வேண்டுமென்பதும் என்பால் அரும்பிய பிறிதொரு எண்ணம்.

‘எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்’

என்பது தேவர் திருவாக்கு ஆதலால் எண்ணத்தின் ஈட்டம் திண்மை செறியின் செயல் நிகழ்தல் இயல்பே யன்றோ? எனவே, என்னுள்ளே எண்ணிய எண்ண மெல்லாம் முயற்சிக்கு முன்னின்றமையால் இது

போழ்து இந்த வானவசனி நிலைய ஒலிக் கருவி வழியாக "இலங்கையில் செட்டியார் சமூகம்" (The Chettiar Community in Ceylon) என்னும் பொருளமைப்பில் விரிவுரை நிகழ்த்த முனைந்துளேன்.

தமிழர் சமுதாயப் பிரிவில் தனவணிகரும் சேர்ந்தனர்.

இந் நிலவுலகின்கண் நிலவுகின்ற மக்கள் கூட்டத்தார் பலபல சமுதாயப் பிரிவுகளை உண்டாக்கிக் கொண்டு வாழ்க்கை நடாத்தி வருதல் வெள்ளிடைமலை. மனித மரபின் அமைப்பு ஒரு நிலையுடையதாயினும், மனித அறிவின் நுட்பம் பலவித செயற்கை நிலையை உண்டுபண்ணி விடுகிற தன்றோ? மனித வாழ்வின் அடிப்படையில் ஒரே தன்மையதான சமரஸம், ஒற்றுமை, சகோதரத்துவம் முதலிய நன்னீர்மைகள் பொலிவதா யிருப்பினும் இற்றைய உலக வாழ்வில் மக்கள் குழாம் பலப் பல வகுப்பினராகப் பிரிந்து வாழும் இயல்பினைப் பெற்றிருக்கிறார்கள். இம் முறைபற்றிய ஜாதிப் பாகுபாட்டிலேயே தமிழகத்திலுள்ள தமிழர் சமுதாய மக்கட் பிரிவுகளிலே தனவணிக மரபும் ஒரு பிரிவாமென ஏனைய மரபினரால் அழைக்கப்பட்டு வருகிறது.

தமிழகத்தில் பிறந்தோரெல்லாம் தமிழ்த்தாயின் மைந்தர்களே!

தமிழகத் தோழர்களே! தமிழ்நாட்டிலே பிறந்தோரெல்லாம் தமிழ்த்தாயின் மக்களே, என்னும் சமரச

உணர்வைத் தொன்மைத் தமிழகத்தார் பெற்றிருந் தார்கள். அவர்கள் இதயத்திலே வகுப்பு உணர்ச்சி துளிராது சகோதரத்துவ அன்புமலர் அரும்பி மலர்ந்து ஐக்கிய மணம் கமழ்ந்து பரவியது. முற்காலத் தமிழர்கள் உலகியல் நடைமுறை ஒழுங்குற நிகழ்தற்காக நான்குவித தொழில் முறைகளை வகுத்துப் போந்திருக்கின்றனர். அந்தணர்க் குரிய தொழில்கள்—அரசருக் குரிய தொழில்கள் — வைசியருக் குரிய தொழில்கள்—தொழிலாளர்களுக் குரிய தொழில்கள் இவை இவை என நான்கு பிரிவாக வகுத்து, அவரவர் கடமையைச் செவ்வனே செயலாற்றச் செய்திருக்கின்றனர். இதினின்று நாம் அறிய வேண்டுவது ஒன்றுண்டு. அதாவது ஆதித் தமிழகத்திலேயே வாணிப வகுப்பார் என ஒரு பிரிவினர் (வைசியர்) வாழ்வுற்றிருந்தார்கள் என்பது நன்கு புலனாகிறது. இது போது வணிக மாயினிலும் ஒரு சில உட்பிரிவுகள் தோன்றியிருக்கிறது. இதற்குக் காரணம் யாது? இடைக்காலத் தமிழகத்தில் நால்வகைச் சாதிகள் பல பல சாதிகளாகப் பரிணமித்து விட்டமையால் வணிகர் வகுப்பிலும் சில சில பிரிவுகள் தோன்றலாயிற்றென்றே கருதவேண்டிய திருக்கிறது. ஒரு குலமாய் ஒன்றி வாழ்ந்த தமிழர் குலமே மிகப் பல பிரிவுகளில் நலிந்து சிதைந்து நலமிழந்து கிடக்கும்போது வணிகர் பிரிவு குறித்து வருந்துதற்கில்லை யன்றோ! நண்பர்களே! முன்னுரை நீண்டுவிட்டது. இனிச் சொல்லவந்த பொருளுரைக்கு விரிவுரை நிகழ்த்துகின்றேன்; கேளுங்கள்.

வணிகர்களின் வாழ்க்கை வரலாற்றினை வானொலி நேயர்களே கேளுங்கள் !

இலங்கை நகர் வானொலியில் பேசுவதால் இங்கு வாழுகின்ற தனவணிகர் தன்மையையும், இவர்களால் இலங்கைக்கு ஏற்பட்ட நன்மையையும் எடுத்துக் காட்ட வேண்டுவது எனது கடமை. எனினும் இப் பொழுது நிகழ்த்துகின்ற சொற்பெருக்குத் தனவணிக மரபிற்கே பொதுவானதாகையால், இலங்கையில் தன வணிகர் தொண்டு குறித்துப் பிற்பகுதியில் சொல்லு கின்றேன். வானொலி கேட்கும் (My dear Radio hearing friends) நேயர்களே! தற்காலத் தனவணி கர் தன்மையை ஈண்டு இயம்புதற்கு முன்னர் அவர் களின் முற்கால வாழ்க்கை வரலாற்றினையும்—இயல்பு களையும் இயன்றளவு மொழிதல் மிகவும் இன்றியமை யாததாகும். வெளி நாட்டார் தனவைசிய குலத் தவரின் தன்னலமற்ற பொதுநலத் தொண்டின் உயர் வையும், அப் பெருங்குடி வணிக மரபினரின் பேரறி வாண்மை நிறைந்த அறப்பெருஞ் செயல்களின், சீர்மை யினையும் அறிந்துணர்தல் வேண்டுமென்பதே அம் மரபு வழி வந்த என்னனையாரின் அவா. எனவே, தனவணிக சமூகத்தின் சரித்திரத் தொடர்பான சில பழமைச் சான்றுகளை ஈண்டு சுருங்கச் சொல்லு கின்றேன்.

தன்னரசும் தனிக்கோடியும் பெற்ற தமிழகத்தில் தனவணிகர் பிறந்தனர்.

பண்டைத் தமிழ் நாட்டு மக்களுள் தலைசிறந்து விளங்கியவர் தனவணிக மரபினரே யாவர். முடி

யுடை மன்னராய் மூவேந்தர் புரந்த முற்காலத் தமிழகத்திலே—தன்னரசும் தனிக்கொடியும் பெற்றுத் தமிழ் மன்னர் ஆண்ட தகைமைசான்ற தமிழகத்திலே தனவணிக மரபினர் பிறந்தனர்; செந்தமிழ் நாட்டு அருந்தமிழர் மரபு வழித் தோன்றிய 'தனவணிகர் சுதந்தரமே உயிரென உன்னி உரிமை பாராட்டும் பண்பினராய் வாழ்ந்தனர். தனவணிக மரபின் முன்னைய தன்மையை உணர வேண்டுமாயின் சங்கமணிச் செல்வங்களான பழந்தமிழ் நூல்களை ஆராய்தல் வேண்டும்; அதினும் செல்வத்துட் செல்வமாய் மிளிரும் சிலப்பதிகாரப் பொக்கிஷத்தைத் திறந்து பார்த்தல் மிகவும் நலம் பயக்கும். சிலம்புமணி (சிலப்பதிகாரக் காதை) தோற்றமுற்றதற்கு மூலகாரணரா யிருந்தவர்கள் எங்கள் குல இரு தனவணிக மணிகளென்பதை எண்டு பெருமையுடன் இயம்புகின்றேன். சிலப்பதிகாரம் தோன்றி இற்றைக்கு ஏறக்குறைய ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு மேலாகின்றன வென்று சரித்திராசிரியர்கள் சாற்றுகிறார்கள். சிலப்பதிகாரச் செல்வத்தில் வணிக மரபினைக் குறித்து மிக அருமையான கருத்துரைகள் பொறிக்கப்பட்டுள்ளன. இப்பர், கவிப்பர், பெருங்குடியர் என்னும் மூவகைப் பிரிவினராகப் பூம்புகார் நகரிலே, வணிக மரபினர் வாழ்வுற்றிருந்தன ரென்னும் வரலாற்றை சிலப்பதிகாரத்தால் நன்கறியப்படும்.

சிங்கக்கொடியுடைய செட்டியார்கள் வரலாறு.

சிலப்பதிகார காலத்திற்கு முன்னும் செட்டியார் மரபினர் யாண்டு வதிந்தனர் என்பதை நகரத்தார்

சரித்திரம் விளக்குகிறது. அஃது பின்வருமாறு :—
நீர்மலி கடல்சூழ் நிலவுலகத்தில் சீர்மலி சம்புத் தீவத்தின்கண், ஆதியில் நாகநாட்டிலே சாந்தியாபுரி யென்னும் நகரத்திலே, சந்திரகுல கோத்திர வைசியர்களாய் கோபதீசுவரசுவாமி ஆலய தெரிசனமும் சதாசிவகுரு பீடத்தில் தீட்சாகிரியையும், மரகத விநாயகர் பூசையும், இரத்தின வியாபாரமும் செய்து கொண்டு, மகா யோக பாக்கிய சம்பன்னர்களாய், இராசப்பிரசாதமும், மன்னிணை மரியாதையும் பெற்றுச் சிவாகம புராண சித்தாந்த, சைவதீட்சா சம்பன்னர்களாய் விபூதி, ருத்திராக்க, மாலிகாபரணராய்,சிவதரும, குல தரும பரிபாலகராய் நமது பூர்விகப் பெரியார்கள் வாழ்ந்து வந்தார்கள். பின்னர் கலியுக வருடம் இருநூற்றி நான்கிலிருந்து தொண்டை மண்டலத்துக்குத் தலைநகராக விளங்கிய காஞ்சீபுரத்திலே சத்திபுரீசுவரர் சுவாமி ஆலய தெரிசனமும், புஷ்கர நதியாடலும், அருணகிரி சிவசங்கராசாரிய பீடத்தில் தீட்சாகிரியையும், மரகத விநாயகர் பூசையும் பெற்று இரத்தின வியாபாரச் செய்கையும் உடையராய் வாழ்ந்து வந்தார்கள். பின்னர் கலியுக வருஷம் இரண்டாயிரத்து முன்னூற்றுப் பன்னிரண்டிலிருந்து, காவேரி தீரமாகிய சோழவள நாட்டிலே மநுநெறி வழுவாது செங்கோல் நடாத்திய, சோழ மன்னர்கட்கு உரியனவாகிய நகரங்களுள் செல்வச் சிறப்பின் மிக்கு விளங்கியதும், பொன்னுலகத்திலும் மேம்பட்டு சுவர்க்க வாசிகளின் இருதயங்களையும் கவரத்தக்க சுவர்ணமயமான மாடமாளிகை, கூடல் கோபுரங்கள் நிறைந்துள்ளதும், தோரணங்கள் முதலிய பல அலங்

காரங்கள் செய்யப்பட்டதாயுமுள்ள காவிரிப்பூம் பட்டினத்திலே மநுநீதிச் சோழன் காலந் தொடங்கிப் பிரதான வைசியர்களாயும்; மகுட வைசியர்களாயும் அங்கிகரிக்கப் பெற்று, சிங்கக் கொடியும், தங்கக் கலசங்கள் வைத்துள்ள மாடமாளிகைகளமைந்ததுமான இல்லங்களையும் உடையராய்......................ஜெயமங்கல சோபனமாக இரத்தினதன மகுட வைசியர்களென்ற பெரும் பெயர்ச் சிறப்போடும் சைவசமய நெறி வழுவாது குலதரும பரிபாலனஞ் செய்துகொண்டு நமது பூர்வீகப் பெரியார் நெடுங்காலம் வாழ்ந்து வந்தார்கள்.

பாண்டிய மன்னன் வேண்டியழைத்த பண்புள்ள தனவணிகர்.

இவ்வாறு சோழவளநாட்டில் இனிது வாழ்ந்து வந்த தனவணிக மரபினர் இற்றைக்கு சுமார் 1200 ஆண்டுகட்கு முன்னர் (கலியுகம் ஆண்டு 3808-ல்) அதாவது எட்டாவது நூற்றாண்டு ஆரம்பத்தில் பாண்டிவள நாட்டிற்குக் குடிபோந்தனர் என்று பூங்கொன்றை வேலங்குடிச் சிலாசாசனக் குறிப்பால் விளங்கலாகிறது. சோழவள நாட்டிலே பூம்புகார் நகரிலே வளம் மிகுந்து செல்வப் பேற்றில் சிறந்து மிளிர்ந்த வணிக மரபினர் எக்காரணத்தால் பாண்டிநாடு வரலாயினர் என்னும் எண்ணம் இவ்வுரை கேட்போரிடையே எழலாம். பழந் தமிழகத்தில் பாண்டிநாட்டைப் புரந்த சவுந்தர பாண்டியன் என்னும் அரசர் சோழவள நாடு போந்து ராசபூஷண சோழ மன்னன்பால், தன் நாட்டினை நலப்படுத்தும் தன்மை

வாய்ந்த நற்குடிகளும் வாணிப வைசியர்களும் வேண்டுமென்று விண்ணப்பித்தனராம். பாண்டிய மன்னனின் வேண்டுகோட் கிசைந்த சோழ மன்னன், தெய்வப் புலவர் செப்பிப் போந்த,

> 'வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
> பிறவுந் தமபோற் செயின்'

என்னுந் திருக்குறளுக் கிலக்காக நடுவுநிலையும் நன்னீர்மையும் நல்லறமும் காத்தோம்பும் நற்குடிகளான இரத்தின தன மகுட வைசியர்களைப் பாண்டி நாடு சென்று வாழ்வுறுமாறு வேண்டினராம். சோழமன்னன் விருப்பிற்கிசைய காவிரிப்பூம்பட்டினத்திலுள்ள வைசிய வகுப்பார் அனைவரும் பாண்டிய மன்னன் பால் அன்பு கொண்டு உடன் போந்து, வைகைக்கு வடக்கு, பிரான்மலைக்குக் கிழக்கு, வெள்ளாற்றிற்குத் தெற்குமான இந்தப் பாண்டிய நாட்டு எல்லையில் வாழ்வு நடாத்துவ தென்று கட்டுப்பாடு செய்தனர். இந் நிகழ்ச்சி நிகழ்ந்து இதுபோழ்து 1231 ஆண்டுகளாகின்றன வென்று நகரத்தார் சரித்திரத்தான் நன்கறியப்படுகிறது. இது குறித்து நமது மரபு மகா வித்துவான் பாடுவான் முத்தப்ப செட்டியார் பாடியுள்ள,

> 'வெள்ளாறது வடகாமேற் குப்பிரான் மலையாந்
> தெள்ளார் புனல்வைகை தெற்காகும்—ஒள்ளியசீ
> ரெட்டிக் கடற்கிழக்கா மிஃதன்றோ நாட்டரண்சேர்
> செட்டி நாட் டெல்லையெனச் செப்பு'

என்னும் பாவால் செந்தமிழ்ப் பாண்டிவள நாட்டில் செட்டியார் மரபினர் முன்னர் வாழ்ந்த இடம் இனிது விளங்கக் காணலாம்.

சமஸ்தானச் சரித்திர நூலில் தனவணிகர் வரலாறு.

சோழ நாட்டிலிருந்து பாண்டிவள நாட்டிற்கு வந்த தனவைசியர் எக்காரணங் கொண்டோ இடைக் காலத்தில் பாண்டி நாட்டிற்கும் புனல் நாட்டிற்கும் இடையேயுள்ள தனித் தமிழரசாகிய புதுக்கோட்டை சமஸ்தான எல்லையிலும் குடியேறி யிருக்கின்றனர். அக்காலம் தனவைசியர் வாணிபச் செழிப்பில் சிறந்து இலங்கினர். எனினும் சமூகக் கட்டுப்பாட்டினைப் பெரிதும் கடுமையாக்கி, அவ்வழி வழுவாது கடமையைச் செய்தனர். தனவைசியர் காவிரிப்பூம் பட்டினத்தினின்று பாண்டி நாடு போந்த வரலாற்றை புதுக்கோட்டை சமஸ்தானச் சரித்திர நூல் * (A general history of the Pudukkottai State) பின் வருமாறு குறிப்பிடுகிறது :—

* THE NATTUKOTTAI CHETTIS—The Nattukottai Chettis are said to have come over to these parts from Kaverippattanam, a village at the mouth of the Kaveri. They are said (See Nagarathar Kuluvai Natakam) *to have been patronised by the Chola kings* and to have enjoyed the honour of placing the crown on the head of every Chola king at the time of his installation. The story that is given to account for their emigration is that a Chola king wanted to commit an outrage on a Chetti woman and that the Chettis therefore left the Chola land in a body and settled to the south of the Vellar, the southern boundary of the Chola kingdom, vowing never to permit their women to cross the Vellar and get into Chola land again. A different account is given however by Mr. Thurston according to whom, "a Pandya king, named Sundara Pandya, is said to have asked the Chola king to induce some of the Vais-

“நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் காவிரி நதியின் முகத்துவாரத்தி லிருக்கும் காவிரிப்பூம் பட்டினத்திலிருந்து இந்தப் பகுதிகளுக்கு (பாண்டிவள நாட்டிற்கு) வந்ததாகக் கூறப்படுகிறது. அவர்கள் சோழ அரசர்களால் ஆதரிக்கப்பட்டு வந்தார்களென்றும், சோழ மன்னர்கள் ஒவ்வொருவரும் பட்டத்திற்கு வரும்பொழுது மணிமுடி சூட்டும் பெருமையும் உரிமையும் பெற்றிருந்தார்க ளென்றும் சொல்லப்படுகிறது. சோழ மன்னன் ஒருவன் செட்டியார் மரபுப் பெண் ஒருத்தியை சிறைசெய்ய விரும்பியதனால், செட்டியார் குலத்தவ ரெல்லாம் சோழ ராஜ்யத்தை விட்டு, வெளிப் போந்து இனி, தங்கள் பெண்களை வெள்ளாறு தாண்டி, சோழ நாட்டிற்குச் செல்லவிடுவதில்லை என்னும் உறுதிகொண்டு சோழ ராஜ்ஜியத்தின் தென் எல்லையான வெள்ளாற்றுக்குத் தெற்கே ஒரு தொகுதியாக வந்து குடியேறினார்கள் எனக் கூறப்படுகிறது. மற்றொரு ஆராய்ச்சி அறிஞர் கருத்து : சுந்தர பாண்டியன் என்னும் ஓர் பாண்டிய மன்னன் சோழ அரசனிடம் சொல்லி (சோழ நாட்டில்) உள்ள வைசியர்களை வைகைக்கு வடக்கு, பிரான்மலைக்குக் கிழக்கு, வெள்ளாற்றுக்குத் தெற்கு மான இந்தப் பாண்டிய நாட்டிற்குப் போய் குடியேறுமாறு தூண்டும்படி செய்ததாக திருவாளர் திரஸ்ட்டன் என்பார் வேறுவிதமாகக் கூறுகிறார்.'

---

yas in his land to settle down in the Pandya territory and allowed them to settle in the tract of country north of the river Vaigai, east of the Piranmalai and south of the Vellar."

இஃது புதுக்கோட்டை சமஸ்தான சரித்திர நூலில் குறிப்பிட்டுள்ள கருத்து. தனவணிக மரபினர் சோழ நாட்டிலிருந்து பாண்டிநாடு வந்தமைக்கு மூலகாரணம் ஆராய்ச்சி மிக்க அறிஞர் கிரஸ்ட்டன் என்பார் இயம்பியுள்ள கருத்தினை யொட்டியதே என்பதை நமது நகரத்தார் சரித்திர வாயிலாக நாமும் முன்னர் மொழிந்துள்ளமையால் அவைகளையே நல்ல சான்றாகக் கொண்டு ஐயமற அறியலாம்.

மன்னர்க்கு மகுடஞ் சூட்டும் மாண்புமிக்க தனவணிகர்.

முற்காலத் தமிழரசர்கள் காலத்து வாழ்ந்த தனவணிக மரபினர் அம் மன்னர்கட்கு மணிமுடி சூட்டும் உரிமை உடையராய் மன்னர்க்குப் பின்னராய் மாண்புற விளங்கிச் சிறந்ததை நகரத்தார் சரித்திரம் நன்கு உணர்த்துகிறது. தனவணிகரின் வியாபாரச் செழிப்பினையும், செல்வப் பெருக்கினையும், ஒற்றுமைத் தொடர்பினையும், தாராள மனப்பான்மைமிக்க தர்ம சிந்தனைச் செயலினையும், இன்ன பிற இனிய தன்மைகளையும் கண்டுணர்ந்த சோழ நாட்டு மன்னர் மநுநீதிச் சோழன் என்பார் இம் மரபினரின் வழி வழியினர்க்கு மணிமுடி சூட்டும் உரிமை ஈந்து, பெருமைப் படுத்திப் பெருமாண்பும், பேருயர்வும் நல்கியிருக்கின்ற சிறப்பினை நினைவுறும்போது என்போன்றார் உள்ளம் இணையற்ற நலத்தில் பொலிவெய்துகின்றது.

மணிமுடி-சூட்டும் தகுதியுடைய தனவணிகர் தன்மை.

மன்னர்கட்கு மகுடஞ் சூட்டும் உயர்வினை வைசியர் பெற்றமைக்கு முதற்காரணம் அவர்களின்

அந்தண்மை நெறி செறிந்த மெய்ஞ்ஞானத் தன்மைக ளென்றே சாற்றலாம். இந்த நூற்றாண்டிலே ஆங்கி லேய அரசர்களுக்குப் பாதிரிமார்கள் (Bishops) வேதம் ஓதி மணிமுடி சூட்டுவதுபோல, முற்கால முடியுடை வேந்தர்களுக்குத் தனவணிக மரபின் மெய்ஞ்ஞானியான அந்தண்மை மிக்க அறவோர் ஒருவர் முடிசூட்டும் தகுதியுடையராய் அமைவா ராயினர். சோழ பாண்டிய மன்னர்கட்கு மகுடஞ் சூட்டுகின்ற அறவோராகிய தனவணிக அந்தணர், தமது அரிய திருக்கரத்திலே மணிமுடி தாங்கி,

"மல்குக வேத வேள்வி வழங்குக சுரந்து வானம்,
பல்குக வளங்களெங்கும் பரவுக அறங்களின்பம்,
நல்குக உயிர்கட் கெல்லாம் நான்மறைச் சைவமோங்கிப்,
புல்குக உலகமெல்லாம் புரவலன் செங்கோல் வாழ்க"

என்றவாறு இனிது வாழ்த்தி, அரசகுமாரன் அறநெறி வழுவாது செங்கோல் செலுத்தி மன்பதை உலகைக் காத்தல் கடமை என்று வழுத்துவர். இவ்விழுமிய சான்று வாயிலாகப் பண்டைத் தனவணிக மரபினர் தன்மை எத்தகைய தகைமையது என்பது அறியத் தக்கதாகும்.

ஒன்பது பெயருடைய நகரத்தார் மரபினர்.

தனவணிக மரபினைப் பலபல சிறப்புப் பெயரிட்டு அழைப்பர் பழந்தமிழர். இற்றைஞான்று "நாட்டுக் கோட்டை நகரத்தார்கள்", "செட்டியார்கள்" என்றால்

தனவணிகரைத் தமிழ்நாட்டவர்க்குத் தெரியும். பழங் காலத்தில் வைசிய மரபார்க்கு, பிரதான வைசியர், மகுடவைசியர், தனவைசியர், இரத்தின தன வைசியர், உபயகுல பூபால வைசியர், சந்திர கங்காகுல வைசியர், சிவகோத்திர வைசியர், இளையாற்றங்குடி நகர வைசியர், நாட்டுக்கோட்டை வைசியர் என்னும் ஒன்பது காரணப் பெயர்கள் உண்டு. இதற்குச் 'சிவ கோத்திர வைசிய விருத்தி' நூலாசிரியர் பின்வருமாறு விரிவு செய்துள்ளார்: 'மேதக்கச் சோழவளநாடு சோறுடைத்து' என நமது ஒளவைப் பிராட்டியாரால் புகழ்ந்து கூறப்பெற்ற எந்நாட்டினுஞ் சிறந்த நன்னாடாகிய சோழநாட்டுக்குத் தலைநகராக விளங்கிய காவிரிப்பூம் பட்டினத்து, பல்வகை வைசியரினும் பெருந்தன்மையும, பேரறச் செய்கையுமுடையராய், பூரணமாக நிறைந்த செல்வப் பேறுடையோராய், பல்வகை நல்லொழுக்கங்களினுஞ் சிறந்தோராய் விளங்கினாராகலின் பிரதான வைசியர் என்றும், சோழமன் மக்கட்கு முடிசூட்டுங் கௌரவமுடையராய் அக்காலம் வாழ்ந்து வந்தவர்களாகலின் மகுட வைசியர் என்றும், இந்தக் காலத்தும் நிறைந்த செல்வப் பேறுடையராகலின் தனவைசியர் என்றும், அஃதோடு இரத்தின வியாபாரச் செய்கை யுடையராகலின், இரத்தின தன வைசியர் என்றும் 'உழவர் மேழியர் காராளரிளங்கோ புகல் பூபாலர் பூவைசியர் பெயரே' என்பது பிங்கலந்தைச் சூத்திரமாகலின், பூவைசியராகிய கெங்காகுல வேளாளப் பெண்களைத் திருமணஞ் செய்து கொண்டார்களாகலின் உபயகுல பூபால வைசியர், சந்திர கங்காகுல வைசியர்

என்றும், நமது கோத்திராதியளவைகட்கு இலக்காக வும், அடிப்பீடமாகவும், நிற்பன சிவாலயமாகலின் சிவகோத்திர வைசியர் என்றும் ஒருபோது நமது மரபார் யாவரும் ஒருங்கே இளையாற்றக்குடி நகரத் தின் மட்டும் வாசஞ் செய்து கொண்டிருந்தாராகலின் இளையாற்றக்குடி நகர வைசியர் என்றும், பாண்டி வள நாட்டின்கண் இளையாற்றக்குடி நகரம் நாட்டுக் குள் கோட்டைபோல் நடுமண்டலமாக அமைந்திருந் தமையால் அங்கே இருந்தவர்களுக்கு, நாட்டுக் கோட்டை வைசியர் என்றும் காரணச் சிறப்புப் பெயர்கள் தோன்றலாயின.

தனவணிகர்நாடு என்று தமிழ்நாட்டார் அழைப்பர்.

தோழர்களே! இதுபோழ்து தனவணிக மரபி னர் ஆங்கிலேய அரசுக்கு உட்பட்ட பாண்டிவள நாட்டின் பல ஜில்லாக்களிலும் புதுக்கோட்டை சமஸ் தானப் பகுதிகளிலும் வாழ்வு நடாத்துகின்றதை அனைவரும் அறிவர். இம் மரபினர் வாழுகின்ற இப் பகுதிகளை, 'தனவணிகர் நாடு', 'செட்டி நாடு' என் னும் பெயரால் தமிழ் நாட்டவர் அழைக்கின்றார்கள் செட்டிநாட்டின் எல்லையிலே முன்னர் 96 ஊர்கள் இருந்தன என்பர். இப்பொழுது 78 ஊர்கள்தான் உள்ளன.

தனவணிக மரபினரின் ஜனத்தோகை.

தமிழகத்திலே பிறந்துள்ள இரண்டரைக் கோடித் தமிழர்களின் ஒரு பகுதியினராகிய தன

வணிக மரபினரின் ஜனத்தொகை சற்றேறக்குறைய (ஆண் பெண் அடங்கலும்) ஐம்பது ஆயிரம் என்று கணக்கிட்டுச் சொல்லலாம். இம்மரபினர் கணிக்கும் குடும்பமுறை குறித்த கணிதப்படி எண்ணினால் இது போது 13000 புள்ளி இருக்கலாமென்று இயம்பலாம். 1921-ஆம் ஆண்டில் தனவைசிய ஊழியர் சங்கத்தாரால் எடுக்கப்பெற்ற கணிதத்தின்படி தனவணிக மரபினரின் ஜனத்தொகை 40508 என்றும் 9666-புள்ளிகள் என்றும் குறிக்கப் பெற்றிருப்பதால், இற்றைஞான்று ஐம்பதாயிரவர் இருக்கலாமென்று ஐயமற அறியலாம்.

நவ ஆலயங்களுடைய நாட்டுக்கோட்டை நகரத்தார்கள்.

தற்போதைய தமிழ்நாட்டிலே சிறுபான்மைப் பிரிவினராக வாழுகின்ற செட்டியார் சமூகத்தார் தங்களுக்குள் ஒன்பது வகுப்பும் 23-உட்பிரிவுகளும் உடையராய்த் திருமண உறவு முதலியவை நடத்துவிக்கின்றனர். இந்த ஒன்பது வகுப்பினரும் இற்றைஞான்றும் *ஒன்பது கோயிலாரெனப் பெயர்பூண்டு

* ஒன்பது கோயில்களின் பெயர்: 1. இளையாற்றக்குடி கோயில் நகரத்தார்; அம்மை—அப்பர் பெயர்: நித்திய கல்யாணி—கைலாச நாதர். 2. மாற்றூர்க் கோயில் நகரத்தார்; அம்மை—அப்பர் பெயர்: பெரியநாயகி—ஐந்நூற்றீசர். 3. வைரவன் கோயில் நகரத்தார்; அம்மை—அப்பர் பெயர்: வடிவுடையம்மை—வளரொளி நாதர். 4. இரணியூர்க் கோயில் நகரத்தார்; அம்மை—அப்பர் பெயர்: சிவபுரத்தேவி—ஆட்கொண்ட நாதர். 5. பிள்ளையார்பட்டி கோயில் நகரத்தார்; அம்மை—அப்பர் பெயர்: சிவகாமவல்லி—திருவீசர்; வாடாமலர் மங்கை—மருதீசர். 6. நேமக்கோயில் நகரத்தார்; அம்மை—அப்பர் பெயர்:

தத்தம் கோயில் உரிமையில் திகழ்ந்து வருகின்றனர். இந்த ஒன்பது கோயில் நகரத்தாரும் தங்கள் கோத்திரத்தின் வழி முன்னர் சொல்லிய 96 ஊர்களிலும் பரவி இருந்தனராகையால், சமூகத்தின் மகாசபைக் கூட்டத்தைக் கோயிலூர் மடாலயத்தில் கூட்டி, குடியரசு ஆட்சிபோல சமூக ஆட்சி புரிந்து விழுமிய நெறியில் ஒழுங்குமுறை பற்றி நீதி ஆற்றிவந்திருக்கின்றனர். முன்னைய தனவணிகரெல்லாம் உண்மை, உறுதி, அஞ்சாமை, ஒழுக்கம், வீரம் முதலிய நல்லியல்புகளில் நிலைநின்று நல்லறங் காத்து வந்தனர் என்பதற்கு முன்னர் நிகழ்த்திய குடியரசாட்சியனைய சமூக ஆட்சியின் தன்மையால் நன்கு உணரலாம்.

அரசர் அளித்த ஆலயங்கள்.

இதுபோது தனவணிக மரபிற்கு உரிமையாயிருக்கும் ஒன்பது நகரக்கோயில்களும் பாண்டிய மன்னர் ஒருவரால் இவர்கட்கு வழங்கப்பட்டது என்று நகரத்தார் சரித்திரம் கூறுகிறது. இளையாற்றக்குடியில் வாழுகின்றபோது இந் நகரத்தார்க்குள் ஒற்றுமை இன்றி ஒன்பது குழுவினராகப் பிரிந்து பண்டைத் தமிழகத்தைப் பண்புடன் புரந்த பாண்டிய மன்னனன்பால் சென்று தங்களின் ஒன்பது கூட்டத்தார்க்கும் ஒன்பது கோயில்கள் வேண்டுமென்று விண்ணப்பித்தனராம். தனவணிகரின் விருப்பினை

சவுந்தர நாயகி—செயங்கொண்ட சோளேசர். 7. இலுப்பைக்குடிக் கோயில் நகரத்தார்; அம்மை—அப்பர் பெயர்: சவுந்தர நாயகி—தான்தோன்றீசர். 8. சூரைக்குடிக் கோயில் நகரத்தார்; அம்மை—அப்பர் பெயர்: ஆவுடைய நாயகி—தேசிகநாதர். 9. வேலங்குடிக் கோயில் நகரத்தார்; அம்மை—அப்பர் பெயர்: காமாட்சி அம்மை—கண்டீசுவரர்.

நிறைவேற்றச் சித்தங்கொண்ட கொற்றவன் அவர்களின் பரம்பரை வழிபாட்டிற்கென முன்னர் குறிப்பிட்டுள்ள ஒன்பது சிவாலயங்களையும் உவகையுடன் உவந்தளித்தனன் என்று புலனாகிறது. ஆனால் அந்த ஒன்பது ஆலயங்களும் இற்றைஞான்று நகரத்தார்களால் மிகப் பொருட் செலவில் அருமையான சிற்பத் திறமையுடன் திருப்பணி செய்யப்பட்டு விளங்கப் பெறுகிறதென்று சொல்லவேண்டுவது மிக அவசியம். இந்த ஒன்பது கோயிலுமே இது போது நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் நவ ஆலயங்களாகத் தமிழ் நாட்டிலே தலை சிறந்து விளங்குகிற தென்று சுருங்கச் சொல்லலாம்.

சங்க காலத் தமிழகத்தில் தனவணிகர் தன்மை.

தமிழ் நாட்டுத் தோழர்களே! சங்க காலத் தமிழகத்திலே வாழ்வுற்றிருந்த தனவணிகரது உயர்குணங்களையும் அறப்பெருஞ் செயல்களையும் ஈண்டு விளக்க வேண்டுமாயின் விரிவுரை பெரிதாகி விடுமென் றெண்ணினேன். எனினும் தனவணிகரது பழமையைக் குறித்த பாகம் இரண்டொன்றுதல் இந் நூலிலே அமைதல் அவசியம் என்று அடிகளார் விபுலாநந்தர் என்பால் சொல்லினர். சங்க நூல்களிலே தனவணிகரது தன்மைகளெல்லாம் இனிது விளங்கக் காரணமாமென்று ஆரம்பத்தில் இயம்பலானேன். அவர்களின் அழியாப் புகழை அறிதற்குச் சங்கமணிச் செல்வங்களே சான்று தருகின்றன. முற்கால வணிகரது உயர்வினை உணர்தற்குச் சங்க நூல்களிலிருந்து

மூன்று சான்றுகள் ஈண்டு எடுத்துக் காட்டுகின்றேன்.

1. நம்பிக்கையுள்ள கம்பளச் செட்டி: நாக நாட்டரசன் மகளாகிய "பீலிவளை" யென்பாள், "நெடுமுடிக் கிள்ளி" யென்னும் சோழ மன்னனுக்குத் தான் பெற்ற குழந்தையோடு மணிபல்லவத் தீவை யடைந்து, புத்த பீடிகையை வலம் வந்து வணங்கி நின்ற பொழுது, கப்பல் வாணிபம் செய்யும் 'கம்பளச் செட்டி' என்னும் ஓர் வணிகனின் கப்பல், இத்தீவருகே வந்து தங்க, அது கண்ட பீலிவளை கம்பளச் செட்டியிடம் சென்று, "இவன் சோழ மன்னனின் புதல்வன், இவனை இவன் தந்தையிடம் சேர்ப்பாயாக" என்று கூறிக் குழந்தையை அவனிடம் கொடுத்தனள். குழந்தையைப் பெற்றுக் கொண்ட கம்பளச் செட்டி பெருமகிழ்வுடன் அரசனிடம் குழவியைச் சேர்க்கும் நினைவுடையோனாய்க் கப்பலேறினான். (மணிமேகலை : ஆபுத்திரனோடு மணிபல்லவ மடைந்த காதை—கஅஎ-ககூ௦.)

2. சீவக நம்பியைக் காத்த கருணையுள்ள வணிகன்: சச்சந்தன் மனைவியாகிய விசயை, அரசனை யிழப்படி மயிலூர்தியேறி வந்து மயானத்திற் பெற்ற குழந்தை சீவகனை, அம்மயானத் தெய்வ மொன்றின் ஆணைப்படி தனியே கிடத்திச் சென்ற காலத்தில், தனது இறந்த குழந்தையைப் புதைத்தற் கெண்ணி யங்கு வந்த "கந்துக்கடன்" என்னும் வணிகன், தனியே விடப் பட்டிருந்த சீவகச் செல்வனைக் கண்டு மகிழ்ந்து, அக்குழந்தையின் கையிலிருந்த மோதிரத்

தால் அவன் அரசனது குழந்தை யென்பதை யறிந்து அன்போடெடுத்துச் சென்று இராசமாபுரத்திலுள்ள தன் வீட்டை யடைந்து, புத்திர சோகத்தால் புலம்பி நின்ற தனது மனைவியிடம், "இறந்த குழந்தை பிழைத் தெழுந்தது" என்று இயம்பிக் கொடுத்துத் தங்கள் இல்லத்தில் வைத்து (ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் இனிய இயல்பில்) இனிதே வளர்த்து வந்தார்கள். (சீவக சிந்தாமணி: நாமக ளிலம்பகம்—உஅரு-கூ0உ).

3. ஸ்ரீதத்த னென்னும் வணிகனின் உயர்வு: வெள்ளிமலையிலுள்ள வித்தியாதர மன்னனாகிய "கலுழவேகன்" என்பான், தன் மகள் "காந்தருவதத்தை"க்கு இராசமா• புரத்தில் திருமணம் நிகழுமென்பதை நிமித்திகரா லறிந்து, அங்ஙனமே செய்விக்க எண்ணி, அந்நகரத்து வணிகர் குலதிலகனை ஸ்ரீதத்தன் அயல்நாடு சென்று வாணிபஞ் செய்து மிகுந்த பொருளீட்டித் தன்னகரடையப் பரிசனங்களோடும், கப்பலேறிக் கடலிற் செல்வதை யறிந்து, அவனை யழைத்து வரும்படி "தரன்" என்னும் வித்தியாதர னொருவனை யனுப்பினான். அவன், தன் வித்தையால் ஸ்ரீதத்தனை வசப்படுத்தி அழைத்து வந்து கலுழவேகனிடம் விட, கலுழவேகன், ஸ்ரீதத்தனுக்கு நிறைந்த உபசாரங்கள் செய்து, தனது அரும் பெறல் மகள் காந்தருவதத்தையை அவனிடம் கொடுத்து, அவள் வரலாறுகளையும் கூறி விடை கொடுத்தனுப்பினான். வித்தியாதர மன்னன்பால் விடை பெற்ற ஸ்ரீதத்தன் காந்தருவதத்தையோடு இராசமாபுரத்தை

அடைந்தான். (சீவக சிந்தாமணி-காந்தருவதத்தையாரிலம்பகம்-க-கூக.) எனவே சங்க காலத் தனவணிகரது அருங்குணங்களை அறிந்த அந்தக் காலத்து மன்னர்கள், அவர்கள்பால் பெரு நட்புக்கொண்டு, பண்புடையாளர் தொடர்பாக உயிரொன்றிய நீர்மையில் நின்று வாழ்ந்தனர் என்னும் உண்மையை மேற்சொன்ன சான்றுகளால் இனிது அறியலாமன்றோ!

அந்தண்மை மிக்க தனவணிக குலமணிகள்.

தோழர்களே! பழந் தமிழகச் சரித்திரப் பெருமைக்கு இலக்காக இலங்குகின்ற தனவணிக குலமணிகள் பலப் பலர் உள்ளனர். கடவுட் பெருமையும், கடவுளறமும், கடவுட்பேறும் பெற்றுய்ந்த தெய்வ மனிதர்கள் (God-men) முன்னைய தனவணிக மரபினிலே தோன்றினர். தெய்வத் தன்மை யடைந்து, திருவருட் பேற்றில் சிறந்து விளங்கிய தனவணிக குல மணிகளின் அந்தண்மைச் செயல்களைப் பழந் தமிழ் நூல்களிலே—புராணங்களிலே நன்கு விளங்கக் காணலாம். முற்காலத்தில் தமிழர் சமுதாயத்தில் அந்தண்மை நெறியில் நிறைந்து நின்று அன்புப்பணி செய்த அப்பர், வள்ளலார், தாயுமானவர், திருவள்ளுவர், சேக்கிழார், சாத்தனார், இளங்கோ, கம்பர் போன்ற அறவோர்களனைய சிறந்தோர் தனவணிக மரபினிலே மிகப் பல்லோர் இருந்தனர். அவர்களெல்லாம் மனித மரபு உய்யு நெறிக்கு வழிகாட்டும் கதிர்மணி விளக்குகளாக விளங்கிச் சிறந்தனர்.

சிவநெறி பரப்பிய இரு சிவனடியார் இயல்பு.

ஆண்டவன் அடிக்கு அன்பு செலுத்தி அந்தண ராகத் தலைமைப் பேறெய்திய—அதி மனிதத் தன்மை யடைந்த தனவணிக அருள் மணிகள் அநேகர் உள்ளனரெனினும் குறிப்பாக ஈண்டு இரு சிவனடி யார்களை மட்டும் குறிப்பிடுகின்றேன். முதற் பெரி யார் பட்டினத்து அடிகள், மற்றைய பெரியார் இயற் பகை நாயனுர். தலை சிறந்த துறவினர் பட்டினத்தார் என்பதைத் தமிழுலகு அறியும். கப்பல் கப்பலாகப் பொற்குவியல் திரட்டிப் பெருஞ் செல்வராய்த் திகழ்ந்த பட்டினத்தார், வாழ்க்கையின் மாயை உணர்ந்து, இல்லறத்தின் முழுநிலை எய்தி பெருந்துறவு பூண்டனரன்றே ! உலகினர் அருளொளி அறிந்து, இறைநெறி உணரச் சிவனடி சேர்ந்த தெய்வப் பெரியா ரன்றே இவர்.

தனவணிக குல சிவமணிகளில் பட்டினத்தார் ஒருவர்.

'பூவினிற் கந்தம் பொருந்திய வாறுபோல்—சீவ னுக்குள்ளே சிவ மணம் பூத்தது' என்று திருமூலர் சாற்றிப் போந்தது போல, பட்டினத்தார் நெஞ்சிலே மெய்யறிவு புலர்ந்து, ஞானமலர் அரும்பி, மலர்ந்து, சிவமணம் கமழ்ந்து பரவியது. நெஞ்சு ஆண்டவன் வயப்பட்டதும் தலைசிறந்த சிவனடியாராகத் திகழ லாயினர் பட்டினத்தார். ஆண்டவன் அடிசார வேண்டுமென்று அகிலத்தார்க்கு அறிவுறுத்தப் போந்த சிவநேசச் செல்வர்,

"முடிசார்ந்த மன்னரும் மற்று முள்ளோரும்
[முடிவிலொரு,
பிடிசாம்பராய் வெந்து மண்ணாவதும் கண்டு பின்னும்
[அந்தப்
படிசார்ந்த வாழ்வை நினைப்பதல்லால் பொன்னின்
[அம்பலவன்,
அடிசார்ந்து நாம் உய்ய வேண்டு மென்று
[அறிவாரில்லையே"

என்று பாடிய பான்மை ஈசனடியார் மனத்தைக் கவர்வதாகும். செந்தமிழ்க் கல்வியும் திருவருட் சீலமும் பெற்றுயர்ந்த பட்டினத்தார், தனவணிக குல சிவமணிகளில் ஒருவர் என்பதைத் தமிழுலகு அறியு மாதலால் அதிகம் சொல்ல வேண்டுவதில்லை.

இயற்பகையாரின் இனிய இயல்பு.

இனி எங்கள் குலத்து இயற்பகை நாயனார் இயல் பைச் சிறிது கேளுங்கள். இயற்பகையார் அறுபத்து மூவரில் ஒருவர். சீலம் நிறைந்த இச் சிவனடியார் இறைவர்க்குரிய பூரண நிலை யடைந்து, சிவம் என்னும் செம்பொருளை உணர்ந்து,

'ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த
இன்பமே என்னுடை யன்பே'

என்று அன்பு சமயவழி அகத்திலே ஆண்டவனைக் கண்டு, அருள் வல்லபத்தால் தெய்வ உருவாய் இலங்குகிறார்.

'இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்'

அன்பு நெறி வளர்த்த இயற்பகையாரின் இனிய இயல்பு குறித்து ஒருசான்று தருகின்றேன். நாயன்

மார் திறம் நவின்று போந்த நல்லிசைஞர் கலியாண சுந்தரர் இயற்பகையார் இயல்பை எடுத்துக் காட்டுகிறார் : காவிரிப்பூம் பட்டினத்தில் இயற்பகையார் என்பவர் ஒருவர் இருந்தனர். அவரது விரதம் எவர் எதைக் கேட்பினும் இல்லை என்னாது வழங்குவது. அவருடைய மனோநிலையைக் கடவுள் சோதிக்க வேண்டி, ஓரடியவர் வேடந்தாங்கி, அவர்தம் வீடு சேர்ந்து, "நாம் ஒன்று நாடி நும் இல்லம் போந்தோம்" என்றார். நாயனார், "அஃதென்பால் உளதாயின் கொடுப்பேன்" என்றார். சிவனடியார், 'உன் மனைவி வேண்டும்" என்று கேட்டார். நாயனார் மனங்கோணாது தம் இல்லக்கிழத்தியாரை வழங்கினார். இச் செயல் எவரே செய்ய வல்லார்! இது செயற்கருஞ் செய்கையன்றோ? தாம் ஏற்ற விரதத்துக்கு எவ்வழியினும் கேடு நேராவண்ணம் காத்துக்கொண்ட உண்மை நிலையையும், உறுதி பிறழாமையையும், எவர்க்கும் அஞ்சாமையையும் என்னென்று வருணிப்பது? இயற்பகை போல விரதங் காக்கவல்ல புதல்வர்களல்லவோ பாரதமாதாவின் வயிற்றில் தோன்றல் வேண்டும்? அன்பர்களே! இயற்பகையாரின் சொல்லுறுதி வழுவாத செயலுக்கு—வாய்மை காத்த உயர்விற்கு இஃதோர் சிறந்த சான்றன்றோ? இப்பெருமகனார் பெற்றி கண்ட சுந்தரமூர்த்தி சுவாமிகள் 'இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்' என்றியம்பிப் போந்துள்ளார். இத்தகைய இனிய இயல்புடைய இயற்பகையார் செயற்கரிய செய்த தெய்வப் பெரியாரன்றோ! எங்கள் வணிகர்குல வழித்தோன்றிய

வணிகர் பெருமான் இயற்பகையார் என்று சாற்றுதல் சால நன்றன்றோ ?

பெண் தெய்வங்களாய் விளங்கும் இரு பெண் மணிகள்.

பண்டைக் காலத்துச் சரித்திரப் பெருமைக்கு இலக்காக வணிகர் குல வனிதையர் பலர் இலங்கினர் ; சுதந்தரமாகவும் விளங்கினர். முன்னைய காலத்தில் செட்டியார் மரபு மங்கையர் இசையினும் இனியசொல் வைமைந்த செல்விகளாகக் காவிரிப்பூம் பட்டினத்துக் கடற்கரையிலே காதலரோடு பண்ணொலி பரப்பினர் என்று சிலம்பு நூல் கூறுகிறது. நாட்டுக்கோட்டை நகரத்தார் மரபு மாதரசிகள் சிலர் பெண் தெய்வங்களாக விளங்கிப்பெண்மையின் பெற நியை உலகினர் உணர அறிவுறுத்திப் போந்துமிருக்கின்றனர். காவிரிப்பூம் பட்டினத்து வணிகர் குல மகளான கற்புத்தெய்வம் கண்ணகியார் தன்மை குறித்து உலகத்தவர்க்குச் சொல்ல வேண்டுவதில்லை. கணவனை இழந்த கற்புடைத்தேவி கண்ணகி கடுஞ்சினங் கொண்டு, பாண்டியனைக் கடிந்து, மதுரைமா நகரை அழித்தனளெனின், அப் பெண் தெய்வத்தின் கற்பின் மாண்பு வியக்கத் தக்கதாகும். வணிக மரபின் மற்றொரு பெண் தெய்வம் அறுபான் மும்மை நாயன்மார்களில் ஒருவராய் நிலவும் காரைக்கா லம்மையார். சக்திக் கனவாகத் தோன்றிய காரைக்காலம்மையார் உண்மை, உறுதி, அஞ்சாமை, ஒழுக்கம் காத்து, புனிதவதியார் என்னும் பெயருக்கேற்ப ஞான நிலையடைந்து பெண் தெய்வமாயினர். இவ்வம்மையார்

தெய்வ மகளாகத் திகழ்ந்து உலகவாழ்வை வெறுத்துச் சித்தத்தைச் சிவன்பால் செலுத்தி, தெய்வத் தன்மை உற்றதைத் தமிழுலகம் நன்கறியும்.

வணிகர் பெரும் குலம் விளங்க வந்துதித்த புனிதவதியார்.

அன்பர்களே! அம்மையாரின் வரலாறு அறிவார் இனிது மகிழ்வர். வாணிகத்தால் வளம் பெற்றோங்கிய சோழநாட்டிலே வாழ்ந்து வந்த தனதத்தன் என்னும் பெயரமைந்த வணிகர் பெருமான் ஒருவர்க்குப் பேரழகு மிக்க புனிதவதியார் தோன்றினார். வணிகர் பெரும் குலம் விளங்க வந்து பிறந்தருளிய புனிதவதியார் இளமையிலேயே இறைவனுண்மை காணும் பேருணர்ச்சி பெற்று, பெண் வடிவினின்றும் பேய்வடிவு கொண்டு, அரனடி சேர்ந்தார். ஈசனார் அம்மையாரை நோக்கி "அம்மையே! நீ வேண்டுவது யாது?" என்று வினவியபோது, அருட்டிறம் வாய்ந்து விளங்கிய அம்மையார் இறைஞ்சி நின்று,

"இறவாத இன்ப அன்பு வேண்டிப்
பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும்; மீண்டும்
பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும்; இன்னும்
வேண்டும் நான் மகிழ்ந்துபாடி
அறவா! நீ ஆடும் போது உன்
அடியின் கீழ் இருக்க என்றார்"

என்று இறைவனார் திருவடியினையே என்றும் சிந்தித்துப்பாட அருள் வேண்டினார். இத்தகைய தெய்வப் பெண்களும், தெய்வீக அருளுடைய சிவ நெறிச் செல்வர்களும் தோன்றிய தனவணிக மரபின ரின் அறநெறிக் கொள்கை குறித்துச் சற்று சாற்றல் சால்புடைத்தாகு மன்றோ?

தருமம் தலைகாக்கு மென்பது தனவணிகர் பெருநம்பிக்கை.

தனவணிகர் அருளாளரைப் போற்றும் இயல்பினர்; அந்தண்மையாளரை ஆதரிக்கும் தன்மையினர்; ஆண்டவன் அடியவர்க்கு அன்புத்தொண்டு ஆற்றும் பண்பினர். அவர்கள் ஆற்ற நினைக்கும் எத்தகைச் செயலினும் இம்மை மறுமைப் பயன் ஏதுவென ஆய்ந்துணர்ந்த பிறகே, நன்மை பயக்கின் நலம்செய்ய முனைவர். அறத்தினும் சிறந்த ஆக்கம் உலகினில்லை யென்னும உண்மையை உணர்ந்த தனவணிகர், அந்தணர் ஆற்றும் அறநெறியைப் பின்பற்றும் பெற்றிமிக்காராய்,

> 'அறத்தான் வருவதே யின்பமற் றெல்லாம்
> புறத்த புகழு மில'

என்று வள்ளுவர் வழங்கிப் போந்த பொன் மொழிக் கிணங்க அழியாத் தன்மைவாய்ந்த அறத்திலே நின்று நிலவுகின்றனர். எதுவும் அழியும் தன்மைவாய்ந்த இவ்வுலகில் என்றும் அழியாது நிற்பது அறம் ஒன்றே ஆகுமென்றறிந்த செட்டியார் மரபினர், தரும நெறி நின்று தாம் ஈட்டிய பொருட் செல்வத்தை

ஈந்து நகர்வதே இன்ப மென்றெண்ணும் இயல் பினராய் இயன்றவரை உதவி இன்புடன் மகிழ்வர். 'தருமம் தலைகாக்கு' மென்பது தனவைசியப் பெரு மக்களின் பெருநம்பிக்கை. தருமவழி நிற்போர் ஆண்டவன் வழி நிற்போராவர் என்பது தனவணி கரின் உள்ளத்திலே எழும் இயல்பான எண்ணம். தம்மாலானதைத் தருமச் செயலுக்குத் தாராளமாகச் செலவிடும் அருங்குணம் தனவணிக மரபினர்க்கே உரியதாய் அமைந்திருக்கிற தென்று சுருங்கச் சொல்லலாம்.

அந்தணரைப் போற்றும் அருங்குல வணிகர்.

தனவணிகர் இதுவரை ஏராளமான கோயில் திருப்பணிகளைச் செய்திருக்கின்றனர்; சைவசமய வளர்ச்சிக்கும் தக்க தொண்டு ஆற்றியிருக்கின்றனர், வேதநெறி தழைத்தோங்கவும் சைவநெறி செழித்து விளங்கவும் தனவணிகர் பெருந்தொண்டு புரிந்துள்ள னர். 'வாழ்க அந்தணர், வானவர் ஆனினம்' என்று சம்பந்தர் வாழ்த்துவதுபோல, சைவசமயப் பெரி யார்களை—அந்தண்மை பூண்ட அறவோர்களைத் தன வணிகர் மிகவும் போற்றி, பக்தராய்ப் பணிந்து வணங்கி யிருக்கின்றனர். சைவசமய நெறி வழி வழுவாது வாழ்க்கை நடாத்திய முன்னைய தமிழர்களில் தனவணிகரே முதன்மையராக அமைந்து ஒழுகு வாராயினர்.

முழுநீறு பூசிய முனிவரே போல் திகழ்ந்தனர்.

முற்காலத்தில் தனவணிகரின் சமயப்பற்றின் தன்மை இத்தகையதாய் இலங்கியது என்று இன்று

சொல்லின், தற்கால நாகரிகப் போக்குடைய நண்பர்கட்கு வியப்பாக விருக்கும். ஆனுலும் அக்காலத் தனவணிக மரபினிலே தோன்றிய அந்தணர்களின் அழகைச் சிறிது வருணித்தல் பெருமையாகு மென் றெண்ணுகிறேன். சிவதரும குலமாகத் தனவணிகர் வாழுகின்றமையால் ஒவ்வொரு தனவணிகர் நெற்றியிலும் மேனியிலும் திருநீறு பொலிவுறும் ; அதற்குமேல் சந்தனப் பொட்டு இனிதாக இலங்கித் தோன்றும். தலையில் சிகை யிராது ; கழுத்தில் கண்டிகை அணிந்திருப்பார்கள். (இந் நாளிலும் வயது முதிர்ந்தவர்களில் பழமைப்பற்றுள்ள பலரும், அவர்களைச் சார்ந்த இளைஞர்களில் சிலரும், 'கெவுடு' என்னும் பெயரால் உருத்திராட்சம் அணிந்து வருகிறார்கள்.) கிட்டத்தட்ட முற்காலத் தனவணிக குலசீலர்கள் சைவசமயப் பெரியார்களைப் போன்று, முழுநீறு பூசிய முனிவரேபோல், திண்ணிய மேனியில் வெண்ணீறணிந்து அறுபத்துமூவர் கோலந் தாங்கி, சிவாகம புராணச் சீலர்களாய்த் துலங்கினுர்களென்றும், ஆண்டவன் அடியார்களாக விளங்கினுர்களென்றும், சிவஞானச் செல்வர்களாய்ச் சிறந்தார்களென்றும் 'சைவப்பழமாக' மலர்ந்து கனிந்தார்களென்றும் ஐயமின்றி இயம்பலாம்.

தமிழ்மறை சாற்றும் தனவணிகர் சால்பு.

சிவநெறிச் சீலர்களாகிய தனவணிகர் இறைவனைத் தமிழ் மறையாற் போற்றி வழிபடும் இயல்பினராய் அமைந்தனர். ஈசனுக்குரிய பூசனையை அருமறையாற் பாடிப் பக்தி பரவச முறும் தனவணி

கர் தேவாரம் ஓதுவர்; திருவாசகம் சொல்லுவர்; திருப்புகழ் பாடுவர்; திருத்தொண்டத் தொகை செப்புவர்; திருமந்திரம் செபிப்பர்; தெய்வப்பாக்களெல்லாம் இசைப்பர்; ஜெபமணி உருட்டி இறை உணர்வு கொண்டு அநுட்டானம் செய்குவர். திருவள்ளுவ நாயனுர் போன்று செந்தண்மை நெறி நின்று அந்தண்மை வளர்ப்பர்.

"தேவர் குறளுந் திருநான் மறை முடிவும்,
மூவர் தமிழும் முனிமொழியுங், கோவை;
திருவா சகமுந் திருமூலர் சொல்லும்,
ஒரு வாசக மென்றுணர்"

என்றவாறு அருந் தமிழ் மறைகள் ஓதும் ஆன்ம ஒருமைப்பாட்டை உணர்ந்து உள்ளத்திலே சிவமென்னும் செம்பொருளைக் காணுவர்.

சிவமயம் எழுதும் சீலமிக்க தனவணிகர்.

பண்டைக் காலத் தனவணிகரெல்லாம் எஞ்ஞான்றும் சிவ பக்தியும், சிவ சிந்தனையும் மிக்காராய் இருந்தனர் என்பதற்கு ஒரு சிவ உதாரணம் குறிப்பிடுதல் பொருத்தமன்றோ? இம் மரபினர் ஏதும் எழுதுதற்கு எழுதுகோல் எடுத்தார்களானல் முன்னதாகப் 'பிள்ளையார் சுழி, சிவமயம்' எழுதிய பிறகுதான் எடுத்துக் கொண்ட செய்தியை எழுதத் துவங்குவார்கள்.

"எவ்வுயிரும் நீங்கா துறையும் இறை சிவனென்று
எவ்வுயிர்க்கும் அன்பாயிரு"

என்னும் அருண்மொழிக்கு இலக்காக இலங்கி நின்ற சைவத் தனவணிகர்களின் தன்மையை இதனுல்

இனிது அறியலாகும். அன்பே சிவம் என்னும் ஆன்றோர் கருத்துணர்ந்து, யாண்டும் சிவமயப் பொலிவு கண்டு, சீலமுறும் நீர்மைவாய்ந்த தனவணிகர் சித்தம் சிவன்பாலே சென்றது வியப்பில்லையன்றோ! எனவே,

'தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி'

என வருஉம் மாணிக்கவாசகனார் மணிவாக்கைத் தமிழ் நாடெங்கும் முழக்கி அருள் நிறைந்த அன்புச் சமயத்தை ஆக்கப்படுத்த நினைக்கிறார்கள், தனவணிக மரபினரான சிவனடிச் செல்வர்கள்.

சைவத் தமிழராய்த் தனவணிகர் வாழ்ந்தனர்.

தோழர்களே! இதுவரை சைவசமயப் பற்றில் தனவணிகர் சிறந்து விளங்கினர் என்பதற்கு விரிவுரை விளம்பினேன். ஆனால், இதுபோது அன்பு சமயவழி அருமைத் தமிழகத்தார் அறவொழுக்கம் காத்து உயிரொழுக்கம் ஓம்புகின்றார்களா?........... இல்லையே! மனித மரபினர் வழி உருவெடுத்த மக்கள் பலர் ஆண்டவன் அளித்த உடம்பினைப் பாதுகாத்தற் கெனப் புலாலுணவு புசிக்கின்றார். தமிழ் மண்ணிலே பிறந்த தமிழர்—எவ்வுயிரிலும் இறைவனைக் காணுகின்ற சன்மார்க்கத் தமிழர், சைவ உணவு உண்ணலே சால்புடைத்தாகும். புலால் உண்பார் உள்ளத்திலே அன்பிற்கும், அருளிற்கும் இடனில்லை என்பதை,

'தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்'

என்னும் நாயனுர் வாய்மொழியால் நன்கு விளங்க உணரலாம். எனினும் இற்றை ஞான்றுள்ள தமிழர்களில் (தனவணிகர்களினும்) பெரும்பான்மையோர் எவ்வுணவு உண்கிறுர்?

" கொல்லா விரதம் குவலயமெல்லா மோங்க
எல்லார்க்குஞ் சொல்லுவதென் இச்சை பாபரமே "

என்கின்றுர் தமிழ்ப் பெரியார் தாயுமானுர்.

' தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான் பிறிது
இன்னுயிர் நீக்கும் வினை '

என்னும் தேவர் திருவாக்கை நினைவுகொண்டு, புலாலுணவு புசிக்காத சைவத் தமிழராய் முன்னையகாலத் தனவணிகர் இருந்து போந்தனர். பலி இடும் கொடுமை கண்டு அஞ்சினர். அன்பும், அருளும் அகத்திலே பொங்க சுத்த சைவகுல வைசியராய் வாழ்ந்தனர்.

தனவணிகர் சால்பினைப் பாரதியார் பகருகிறுர்.

அன்பர்களே! தனவைசியரின் சமயப் பற்று சாலச் சிறந்தனவும் எல்லை கடந்தனவு மாகுமென்று முன்னர் மொழிந்துள்ளேன். இந்துமத வழிபாட்டினை இம்மியும் கடவாது செயலில் கொணர்வதில் தனவணிகர் தலைசிறந்தவர்களாவர். சமய முன்னேற்றத்திற்கும், தமிழ் மொழி முற்போக்கிற்கும் தனவணிகர் செய்த—செய்கின்ற தொண்டினை நினைந்து மகிழ்ந்த செந்தமிழ்க் கவி பாரதியார் ஒரு பா பாடியுள்ளார். இந்துமதக் கொள்கையினை யாண்டும்

பரப்பும் பொருட்டு தனவணிகர் நாடான காரைக் குடியில் 'ஹிந்துமதாபிமான சங்கம்' (தமிழர் சமய வளர்ச்சிக் கழகம்) ஒன்றைத் தனவணிக நண்பர் பலர் ஸ்தாபித்தனர். அக் கழகத்திற்குக் காலஞ் சென்ற கவியரசர் சுப்பிரமணிய பாரதியார் சென்றார்! தன வணிகரின் சமயப்பற்றையும் மொழிப்பற்றையும் கண் டார்; கவிஞன் உள்ளத்திலே உணர்ச்சி பிறந்தது; உடன் தனவணிகர் தன்மை குறித்து ஒரு வாழ்த்துப் பா வழங்கினார். மஹாகவி பாரதியார் பாடலின் சில பகுதியை மட்டும் ஈண்டு இயம்புகின்றேன்.

....

"புத்தமுதாம் ஹிந்துமதப் பெருமைதனைப்
 பாரறியப் புகட்டும் வண்ணம்,
தத்து புகழ் வளப்பாண்டி நாட்டினிற்கா
 ரைக்குடியூர் தனிலே சால
உத்தமராந் தனவணிகர் குலத்துதித்த
 இளைஞர் பலர், ஊக்க மிக்கார்
உண்மையே தாரகமென் றுணர்ந்திட்டார்,
 அன்பொன்றே யுறுதி யென்பார்,
வண்மையே குலதர்ம மெனக்கொண்டார்,
 தொண் டொன்றே வழியாக் கண்டார்,
ஒண்மையுயர் கடவுளிடத் தன்புடையார்,
 அவ்வன்பின் ஊற்றத் தாலே
திண்மையுறும் ஹிந்துமத அபிமான சங்கமொன்று
 சேர்த்திட்டாரே.
பலநூல்கள் பதிப்பித்தும், பலபெரியோர் பிர
 சங்கம் பண்ணுவித்தும்,
கலமுடைய கலாசாலை புத்தகசாலை பலவும்
 நாட்டி யுந்தம்

குலமுயர நகருயர நாடுயர வுழைக்கின்றார்,
கோடி மேன்மை
நிலவுறஇச் சங்கத்தார் பல்லூழி வாழ்ந்தொளிர்க,
நிலத்தின் மீதே!"

என்று புலவர்மணி பாரதியார் தனவணிக மரபின் தன்மைகளை நலம்பட நவின்று மனமுவந்து வாழ்த்துகிறார். சமய வளர்ச்சியே தங்களின் இலட்சியமாகக் கொண்ட தனவணிகர் தன்மை இதனால் இனிது அறியலாகும்.

முத்தமிழ்த் தலைவனாய முருகனைத் தனவணிகர் போற்றுவர்.

தனவணிக மரபினர் வணங்கி வழிபடுகின்ற தெய்வ உருவங்களிலே தலையாய தெய்வம் முருகக் கடவுளே என்று இயம்பலாம். குறிஞ்சி நிலக்கடவுளாகிய முருகனிடத்துத் தனவணிகர் பேரன்பு பூண்டவர்கள்; பெரும் பக்தியுடையவர்கள். அவர்களின் அன்புத் தெய்வம் முருகக்கடவுளே. இயற்கை அழகாம் முருகனை வழிபடும் இயல்பு பழந்தமிழரிடையே இருந்தது. முருகன் தமிழர் கடவுள்; முத்தமிழ்ப் பெருமானான முருகன் மலைநிலக் கடவுளாகப் பைந்தமிழர் உள்ளத்திலே படர்ந்து, அழகுக் காட்சி அளித்து, அருவமும் உருவமாக இலங்குகிறார். இயற்கை அழகிலே கடவுட் டன்மையையும் செம்பொருளுண்மையையும் உணர்ந்த தனவணிக மரபினர் முருகனைக் குமரனாக்கி, அகத்திலே கோயில்க்கொண்டு, அருணகிரியார் பாடிப் போந்தவாறு ஆடிப்பாடித் தொழுவாராயினர். இதுபோழ்துங்கூடத் தனவணிகர்

3

முருகனை வழிபடும் இயல்பினை யாண்டும் காணலாம். குன்று தோறாடும் குமரனைக் குல தெய்வமாகக் கொண்டாடும் தன்மை சான்றவர் தனவணிகர் என்று தமிழ் நாட்டவர்க்குச் சாற்றுகின்றேன்.

> ' வீரத் திருவிழிப் பார்வையும்—வெற்றி
> வேலு மயிலுமென் முன்னின்றே—எந்த
> நேரத் திலுமெனைக் காக்குமே '

என்னும் திண்ணிய எண்ணத்துடன் திருமுருகனை இடையறாது நினைந்து, நினைந்து, உருகி உருகி, இன்ப நீர் பெருக்கி இன்னருள் வேண்டுகின்ற பான்மையர் தனவணிகர் என்று மீட்டு மொருமுறை பகருகின்றேன். விண்ணிலே எழுந்த முழுமதி போன்று யாண்டும் அருளொளி காட்ட வேல் பிடித்து விளங்கும் செந்தமிழ் முருகனைத் தனவணிகர் தங்கள் குல தெய்வமாகக் கொண்டிருத்தல் வியப்பில்லை யன்றோ !

தமிழ் முழக்கம் செய்யும் தனவணிகர் மாண்பு.

தனவணிகர் சமயப்பற்றில் ஆர்வமுற்று அருந் தொண்டாற்றியது போல, மொழிப்பற்றிலும் ஊக்கங் கொண்டு தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்தனர். தங்களின் தாய் மொழியான தன்னிக ரில்லா நன்மொழித் தமிழை, உயிரினும் உயர்வென உன்னி, உண்மையன்புடன் ஓம்பிக் காத்தனர். செழுந்தமிழ் உணர்ச்சியும், செந்தமிழ் வீறும் முற் காலத் தனவணிகர் நரம்புகளிலே உறைந்து நின்ற சீர்மையால்,

"யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல்
வள்ளுவர் போல், இளங்கோவைப் போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை, உண்மை
வெறும் புகழ்ச்சி யில்லை"

என்னும் பெற்றியை உணர்ந்தனர்; கம்பன் புகழ் பாடிக் கன்னித் தமிழ் வளர்த்தனர்; அறப்பெரியார் அருளிப் போந்த அருட்பாக்களையும், அருந்தமிழ்க் காவியங்களையும் யாண்டும் பரவச் செய்தனர். சுவாமி சுத்தானந்தர் தமிழன்புமாலையில் சாற்றியவாறு,

'தமிழே, தமிழே, தமிழர்க் குயிரே,
அமுதே, யழகே, யன்பே, யருளே,
சங்கரன் போற்றிய சங்கத் தமிழே,
மங்கலம் பொலியும் மாமணி விளக்கே,
பாண்டியன் வளர்த்த பச்சிளஞ் செல்வீ,
வேண்டிய வளங்கள் ஈண்டிய திருவே,
முருகன் மொழிந்த முழுநிறைத் தமிழே,
முனிவர்கை தவழ்ந்த மோகனத் தமிழே,
இயலிசை நாடக வியற்கைத் தமிழே,
குயிலிசை கைக்குங் குரலிசைத் தமிழே,
பண்ணார் தமிழே, விண்ணார் தமிழே,
கண்ணினு மருமைக் கண்மணித் தமிழே,
சொல்லச் சொற் சுவை சொட்டுந் தமிழே,
கொற்றவர் மணிமுடி கொண்டாடற் றமிழே,
வெற்றிவேல் பிடித்த வீரத் தமிழே'

என்று விழுமிய தமிழின் மாண்பினைத் தனவணிகர் புகழ்ந்து போற்றும் பெற்றி மிக்காராய் வாழ்ந்தனர் என்று சுருங்க உரைத்தலே போதியதாகும்.

வளமை செறிந்த வணிகர் தொழின் முறைகள்.

இனித் தனவணிகரின் முற்காலத் தொழின் முறைகளைக் குறித்துச் சற்று விளக்கலாம். இவர்களின் முன்னைய வாணிப முறைகள் பெரிதும் நாட்டு வளத்திற்கு பலம்பயப்பதா யிருந்தன. பழந்தமிழகம் செழுமையில் நிலவியமைக்கு மூலகாரணம், தனவணிகர் வாணிபப் பெருக்கின் வளச் செறிவின் விளைவென்றே இயம்பலாம். பூம்புகார் நகரில் வாழ்ந்து வந்த காலத்தில் தனவணிகர் பண்டமாற்று வர்த்தகமும் இரத்தின வியாபாரமும் செய்தனர் என்றும் உள்நாட்டு விளைபொருள் அனைத்தையும் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்து, நாடு செழிக்க நல்ல தொண்டு புரிந்தனரென்றும் சிலப்பதிகார நூலிலே நுவலப்படுகிறது.

பழந்தமிழ் நாட்டு வாணிபப் பண்பு.

புதுயுகக் கவிக்குயிலான புலவாமணி பாரதியார் தமிழ்நாட்டு வணிகரின் திறனையும், இயல்பையும் குறித்து,

"சிங்களம் புட்பகம் சாவக—மாதிய
தீவு பலவினுஞ் சென்றேறி—அங்கு
தங்கள் புலிக்கொடி மீன் கொடியும் நின்று
சால்புறக் கண்டவர் தாய்நாடு;
சீனமிசிரம் யவன ரகம்—இன்னும்
தேசம் பலவும் புகழ் வீசிக்—கலை
ஞானம் படைத் தொழில் வாணிபமும் மிக
நன்று வளர்த்த தமிழ் நாடு"

என்று கூறிப்போந்த தன்மையால் தனவணிகரின் பழங்கால வாணிப வளத்தின் நலத்தை நன்றாக உணர ஏதுவாகிறது.

அமர் நீதியார் ஈட்டிய அரும் பொருள்.

தனவணிக மரபினில் தோன்றியவரும் செந் தண்மை வாய்ந்த அறவோர் அறுபத்து மூவரில் ஒரு வருமான அமர் நீதியார் என்பவரின் வாணிப இயல் பினைக் குறித்துப் பெரிய புராணத்தில் சேக்கிழார் பெருமான் விளக்குகிறார் :

> "மன்னும் அப்பதி வணிகர்தங் குலத்தினில் வந்தார்
> பொன்னும் முத்தும்நன் மணிகளும் பூந்துகில் முதலா
> எந்நி லத்தினும் உள்ளன வருவளந் தியல்பால்
> அந்நிலைக்கண்மிக் கவர் அமர் நீதியார் என்பார்"

என்பது அச் செய்யுள். இதிலிருந்து, முற்காலத் தன வணிகர் பரவையிலூர்ந்த பாய்மரக் கப்பலில் வாணி பங் கருதி வெளிநாடு போந்தனர் என்பதும், எந்நாட் டிலும் விளைந்த பொருள்களைத் தங்கள் தாய்நாட்டிற் குக் கொண்டுவந்தனர் என்பதும் இனிது புலனாகிற தன்றோ?

ஆய்ச்சிமார்கள் அக்காலத் தமிழகத்தில் கதராடை நெய்தனர்.

தோழர்களே! இவ்விருபதாம் நூற்றாண்டில் காந்தியடிகளால் கையாண்டு பரப்பும் கதர் நூல் இராட்டினத்தில் பண்டைய நகரத்தார் சமூகத்தினர் நூல் நூற்றிருப்பதை இங்கு நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன். இடைக்காலத் தமிழகத்தில் தன

வணிகப் பெண்பாலார் (ஆய்ச்சிமார்கள்) கையால் நூற்றுத் தறி செய்து வந்திருக்கிறார்கள். இதற்குச் சான்றாக இன்றுங்கூடத் தனவணிகர் சிலரின் இல்லங்களிலே முந்தைய கைராட்டினம் பழமை உருச் சிதைந்து, கிடப்பதை நான் கண்டிருக்கின்றேன். ஆய்ச்சிமார்கள் தங்கள் கையினாலேயே நூற்று நெய்தமையால் 'நூற்று நெய்த சேலை' என்று சொல்லுவார்கள். கைத்தறி செய்வது தனவணிகரின் பரம்பரைக் கைத் தொழில்களில் ஒன்று என்பதை நினைக்கின்ற போது, அவர்களின் பண்டைய தொழின் முறை உயர்வு நமக்கு நன்கு விளங்குகிறது. இடைக் காலத்தில் தமிழகம் மாற்றார் கைப்பட்டு அடிமையில் நலிவுற்றதும் தனவணிகர் தொழில் முறையிலும் மாற்ற மேற்பட்டுப் பழமைப் பண்பும் பொன்றலாயிற்று.

வட்டித் தொழில் முறையில் வணிகர் புகுந்த காலம்.

தற்காலத்தில் தனவணிகர் செய்கின்ற வட்டித் தொழிலை இடைக் காலத்திலேதான் கைக்கொண்டார்கள். லேவாதேவித் தொழில் முறையில் தனவணிகர் பொருளீட்டப் புகுந்ததெல்லாம் இற்றைக்கு ஏறக்குறைய முன்னூறு ஆண்டுகட்கு இடையிலே என்பது எனது கருத்து. பரம்பரையாகத் தனவணிகரது வாணிபம் வெளிநாட்டுப் பொருளை வேண்டுவதிலும், உள்நாட்டுப் பொருளை அந்நாட்டவர்க்கு ஈவதிலுமே நிலவி நின்றது. முற்காலத்திலே நிகழ்ந்த அரசியற் கலகங்களால், வெளிநாடு போந்து விளைந்த

பொருளைக் கொண்டுவந்த வணிகரின் வாணிப முறை யும் மாற்றமடைந்தது. 'திரைகடலோடியும் திரவி யம் தேடு' என்பது வணிகர் வர்த்தக இலட்சியமா யும், 'வைசியர்க்கழகு வளர் பொருளீட்டல்' என் பது அவர்களின் தொழில் முறைக் கடமையாயுமிருக் கிறது.

இலங்கை போந்த நாட்டுக் கோட்டை நகரத்தார்.

அன்பர்களே! தனவணிகர் பால் அமைந்துள்ள எல்லா கலங்களையும் இதுகாறும் இந்த வானொலியில் வழங்கினேன். இனி, முன்னுரையில் மொழிந்த வாறு, இலங்கைமா நகரில் வாழுகின்ற நாட்டுக் கோட்டை நகரத்தார் தன்மைகளைச் சற்று சொல்லு கின்றேன். இடைக்கால ஆரம்பத்தில்—அதாவது இற்றைக்கு சற்றேறக்குறைய 200 ஆண்டுகட்கு முன்னர், தனவணிகர் பொருளீட்டுதற் பொருட்டு இலங்கை போந்தனர் என்று சொல்லப்படுகிறது. முதன்முதலாக லேவாதேவித் தொழில் செய்யப் புகுந்த நாடு இலங்கைதானென்றும் கூறப்படுகிறது. பின்னர்தான் பர்மா, மலாயா, சைகோன் போன்ற ஏனைய நாடுகளில் தனவணிக மரபினர் குடியேறி வட் டித் தொழில் செய்யத் தொடங்கினர்கள் என்று அறி யப்படுகிறது.

இலங்கையின் செழிப்பிற்குத் தனவணிகரே காரணர்.

இலங்கை போந்த நாட்டுக்கோட்டை நகரத் தார்கள் பண லேவாதேவித் தொழில்(Money lending

business) செய்யத் தொடங்கியது முதல், இலங்கையின் வளத்திற்கான எல்லா உதவிகளையும் இயன்றவரை செய்து வந்தார்கள். இலங்கைமா நகருக்குச் செட்டியார் மரபினர் புரிந்துள்ள நலனைக் குறித்து, இது போது இந்தஒலிபரப்பு நிலையத்திலே விரிவுசொல்ல நேரமில்லை ; என்றாலும் சுருங்கச் சொல்லுதல் நன்றாகும். இலங்கை நகர் எழிலுறுதற்கு எல்லா வகையிலும் துணை செய்தவர் தமிழரே என்பதை என்னால் பேசப் பெற்ற ' இலங்கை இந்தியத் தொடர்பு ' என்னும் வான வசனி உரையிலே விளங்கியிருக்கிறேன் ; இலங்கையின் செழிப்பிற்குப் பொருள் வளமுடைய தனவணிகரே காரணராய் இருந்தனர் என்று ஐயமறக் கூறலாம். இலங்கையை எழிலுறச் செய்தவர்கள் தமிழ் நாட்டுத் தொழிலாளர்கள் ; அதற்குப் பொருளுதவி புரிந்தவர்கள் இந்திய முதலாளிமார்கள்.

நன்றி மறந்த இலங்கை மக்கள்.

தனவணிகரின் வட்டித் தொழில் இதுபோது வெளிநாட்டு மக்கள் சிலர்களுக்குப் பிடிக்கவில்லை. உண்மையைக் கூறினால் வணிகர் செய்கின்ற வட்டித் தொழிலால், வெளிநாட்டு மக்களிடையே பணத்தை இழந்து, கணக்கைத் தான் பார்க்க வேண்டியதிருக்கிறது. கொண்ட முதலுக்கு மோசம் வராதபடி, வட்டித் தொழில் செய்யப் புகுந்த வணிகர், இப்பொழுது பணமிழந்து அவதிப்படுகிறார். இலங்கையிலே தனவணிகர் பணம் பத்துக் கோடிக்கு மேல் பரவிக் கிடக்கிறது. இத்தனை கோடியும் இலங்கையின்

வளத்திற்கே பயனுக்கப்பட்டிருக்கிற தென்பதை நடு நிலையாளர் எவரும் அறிவர். செட்டியார்களின் வட்டித் தொழில் முறையினாலேயே இலங்கை, மலாயா பர்மா—இன்னும் ஏனைய நாடுகள் எழிலுற்று வளம் பெருக ஏதுவாயின என்பதைப் பிற்போக்காளர் அறிய அறிவுறுத்தல் வேண்டும். ஒரு நாட்டின் வளத்திற்கு இன்றியமையாது வேண்டுவது பொருட் செழிப்பாகும்; பொருட் செழிப்பின்றேல் அந் நாட்டுத் தொழில் பாழ்பட்டு அந்நாடு காடாகும். இலங்கையின் இயற்கைவளம், மூலப் பொருளுற்பத்தி, கைத்தொழில் வளர்ச்சி பெருகுதற்குத் தனவணிகர் தந்த பணமே பேருதவி செய்த தென்பதை இலங்கை மக்கள் நன்றியுடன் உணரல் வேண்டும்.

தர்மப் பணி புரியும் தனவணிகர் பெற்றி.

தனவணிக மரபினர் எங்கு செல்கினும் தங்கட்கியல்பான அருட்பணியையும், அறத் தொண்டினையும் மறப்பவர் அல்லர். இற்றைஞான்று, இம் மரபு மக்கள் பொருளீட்டும் பொருட்டுப் போந்துள்ள எல்லா நாட்டினிலும், இறைவழிபாட்டிற்குரிய ஆலயங்களும், தர்மச்சாலைகளும் அமைத்துள்ளதை அனைவரும் அறியலாகும். தனவணிகர் தமிழகத்திலே தர்மப் பணி புரிந்ததோடு நின்றுவிடவில்லை; பாரத நாட்டின் மற்றொரு பகுதியான வட நாட்டிலும் தனவணிகர் தர்மம் நிலவியிருக்கிறது. சுருங்கச் சாற்றின், இந்தியாவில் இமயம் முதல் கன்னியாகுமரி வரை, தனவணிகர் தருமப்பணி—அவர்தம் அறவழி பற்றிய

பொதுப்பணி யாண்டும் பரவிப் பயனுறுகிறதென்று பீடுடன் புகலலாம்.

இலங்கையில் நிகழும் சன்மார்க்கத் திருவிழா.

குறிஞ்சி நிலக் கடவுளாகிய முருகபிரானிடத்துத் தனவணிகர் பெரும் பக்தி மிக்கவர்கள் என்று முன்னரே மொழிந்துள்ளேன். இலங்கையில் செட்டியார் மரபினரால் தோற்றுவிக்க பெற்ற ஆலயங்கள் பலவிருக்கின்றன. எனினும், சிந்தையிலே அன்பு கொள்ளும் சிவபிரான் மைந்தன் முருகனுக்குமட்டும் இலங்கைமா நகரின் தலைநகரான கொழும்பில் இரு ஆலயங்கள் (The old Kathiresan Temple and The new Kathiresan Temple) அமைத்திருக்கிறார்கள். இந்தக் கோயில்கள் இரண்டும் செட்டியார்கள் வசிக்கின்ற கடற்கரை (Sea Street) தெருவிலே அடுத்தடுத்து அமைந்திருக்கிறது. முருகனுக்கு வழங்குகின்ற பல பெயர்களில் ஒரு பெயரான, ஸ்ரீ கதிர் வேலாயுதர், கதிரேசர் தனவணிகர் உள்ளத்திலே கோயில்கொண்டு விளங்குவதால்,

> " வருவாய் மயில் மீதினிலே
> வடிவே லுடனே வருவாய்
> தருவாய் நலமுந் தகவும் புகழுந்
> தவமுந் திறமுந் தனமும் கனமும் "

என்று எல்லா நலமும் அருளுமாறு வேலவனிடம் வேண்டுகின்றார்கள். வேல் முருகனுக்கு ஆண்டு தோறும் ஆயிரக்கணக்கில் பொருள் செலவிட்டு ஆடி வேல் விழா நடத்துகிறார்கள், நகரத்தார்கள்; சாதி

சமய பாகுபாடின்றி, சன்மார்க்கத் திருவிழாவாக ஆடிவேல் விழா நிகழுகின்றது. இலங்கையின்கண் நிகழும் கதிர்காம க்ஷேத்திரத்திலும் நாட்டுக் கோட்டை நகரத்தார்களால் சத்திரம் கட்டப்பட்டுத் தர்மப்பணி புரியப்படுகிறது. ஆங்குறும் அடியார் கட்குத் தனவணிகர் பெரும்பணி செய்து அன்னதானம் அளிக்கின்றார்கள். இலங்கையில் இலங்கும் கதிர்காமத்தின், கந்தக் கடவுள், கதிர்வேலாயுதம், இந்தத் தெய்வப் பெயர்களின் ஞாபகார்த்தமாக, தனவணிகர் தம் மக்கட்குக் கதிரேசன், கந்தசுவாமி என்று பெயரிட்டு அழைக்கின்றார்கள். இலங்கையில் நிகழுகின்றவாறே தனவணிகர் பொருளீட்டப் போந்துள்ள எல்ல நாடுகளிலும் ' முருகன் ' தோன்றி, அவர்கட்கு அருட்டன்மை யளித்துப் பெருநிதியும் பெருகப் பேரருள் வழங்குகின்றான்.

அடிகள் அருளும் அரிய கருத்துரை.

தமிழன்பர்களே! தனவணிக மரபின் தன்மை பற்றி அதிகம் யான் இயம்ப வேண்டுவதில்லை. தென் னிந்தியாவிலே செல்வப் பேற்றில் இணைத்து, அன்பும், பண்பும் மிக்காராய் வாழும் இயல்பினர் தனவணிகர் என்று அம்மரபு அறிந்த அறிஞரெல்லாம் நவிலுவர். நமது நகரத்தார் திருக்கூட்டத்தை நன்கறிந்த தமிழகப் பெரியார் ஒருவரின் கருத்துரையை இதுபோழ்து உங்கட்குச் சொல்லுகின்றேன். தனவணிகரின் தன்மை குறித்து கருத்துரை வழங்கிய பேரறிவாளர் சுவாமி சுத்தானந்த பாரதியார் அவர்களாவர்; தமிழன் னையின் கண்மணியனைய சேய்களில் சுவாமிகளும் ஒரு

வர். சுவாமி சுத்தானந்தர் புதுவையில் நிலவும் அரவிந்தர் நிலயத்தில் அமர்ந்து, யோக வாழ்வில் திளைத்து, தவமும் கலேயும் வளர்த்துத் தமிழும், தமிழர் கூட்டமும், தமிழகமும் சிறப்புறப் பொதுப்பணி புரிகிருர்கள்; சமரச நெறியை யாண்டும் துலக்கித் தமிழ்ப்பணி ஆற்றுகிருர்கள். அல்லும் பகலும் அயராது உழைக்கும் அன்புப் பெரியார் பாரதியார் நகரத்தார் மரபின் நல்லியல்புகளே நன்கு அறிவர். ஆதலினல், அடிகளிடத்துத் தனவணிகர் இயல்பு சான்ற கருத்துரை வழங்குமாறு வேண்டினேன். அடிகளும் அன்புடன் இசைந்து கருத்துரை தந்தனர். அடிகளாற் அருளிய அரிய கருத்துரையால், தமிழ் நாட்டார் தனவணிகர் தன்மையை இனிது அறியலாகும்.

சுவாமி சுத்தானந்தர் சொல்லுகின்ருர் :

தனவணிகர் தமிழன்னேயின் செல்வத் திருக்கரங்கள். இன்று நமது அருமைத் தாய் மொழியாகிய தமிழும், சைவமும் உயிர்த்திருப்பதே தனவணிகரின் அறச் செழிப்பினுல்தான். தனவணிகர் நமது பாரத நாட்டின் பழங்குடி மக்கள். சங்ககாலந் தொட்டே தனவணிகர் புகழ்பெற்று விளங்கினர். சோழ மன்னருக்கு முடிசூட்டும் உரிமை பெற்றிருந்தனர் தனவணிகர். முற்காலத் தமிழ்நாடு ரோம், கிரீஸ், எகிப்து, சீனம், பர்மா, மலாயா, தென்னுப்பிரிகா முதலிய நாடுகளுடன் கப்பல்வாணிபஞ் செய்து நாட்டில் ஏராளமான செல்வத்திரளைக் கொண்டுவந்து குவித்தது. தமது தேக்குமரக்கலத்தில் தனவணிகர் உலகெங்கும்



சுவாமி சுத்தானந்த பாரதியார்

சென்று தமிழகத்தில் உற்பத்தியாகும் கைந் நூலாடைகளையும், வாசனைச் சாமான்களையும், முத்து, பவளம் முதலிய அலங்காரச் சாமான்களையும் விற்று வந்தனர். சேர, சோழ, பாண்டியர் நாட்களில் தனவணிகரே நமது நாட்டின் தரை வாணிபத்தையும் கப்பல் வாணிபத்தையும் ஆண்டனர்.

தனவணிக குலமணிகளில் மூவர்.

வள்ளுவர் சீடர் ஏலேல சிங்கர் தனவணிகரே. அவர் கைராட்டினத்தில் நூற்ற நூலையும், கைத்தறியில் நெய்த ஆடையையும் கப்பலேற்றித் தொலையில் கொண்டுபோய் விற்று வந்து ஏராளமான செல்வஞ் சேர்த்தார். இந்தியாவின் ஒப்பற்ற துறவியான பட்டினத்தடிகள் தனவணிகரே. அவரும் முத்து மணிகளைக் கப்பலேற்றி உலகெங்கும் வாணிபஞ் செய்து குபேரரானார். நமது பாரத தேசத்தின் ஒப்பற்ற ஞானப் பெண்மணியான காரைக்காலம்மையார் தனவணிகர் குலமே. "காலனையும் வென்றோம்; கடு நரகுங் கை கழன்றோம்; மேலை யிருவினையும் வேரறுத்தோம்" என்று பாடும் தகுதியும், அருளும், அமரநிலையும் பெற்றாள் அந்த அம்மை. முற்காலத்தில் நமது நாடு பெற்ற பெருமையில் தனவணிகருக்குப் பெரும் பங்கு உண்டு.

திருவின் வீறுபெற்ற செல்வத் தனவணிகர்.

இக் காலத்திலும் அவ்வாறே. தனவணிகர் ஈட்டுவது போலவே ஈவதிலும் சளியாதவர்கள். எக்காலத்திலும் தனவணிகர் செல்வமே சமுதாயத்தின் செழிப்

பிற்குக் காரணமாயிருந் திருக்கிறது. முற்காலத்தில் ஏலேல சிங்கன் வள்ளுவரின் வேண்டுகோட் கிணங்கித் தான் குவித்த நெல்லைப் பஞ்சகாலத்தில் மிகவும் குறைந்த விலைக்குத் தந்து ஏழைகள் வயிரா உண்ணும் படி செய்தான். பட்டினத்தாரோ தமது செல்வத் திரளை எல்லாம் ஏழைகள் வாரிச் செல்லும்படி செய்து உலகைத் துறந்தார். சிலப்பதிகாரக் காதை தனவணிகர் நாகரிகக் கண்ணாடியே. உற்றார் உறவினரைப் பேணி, விருந்தோம்பி, அறம் போற்றி அன்புடன் இல்லறங் காப்பர் தனவணிகர் என்று அதிற் காண்கின்றோம். தனவணிகர் " திருவின் வீறு " பெற்றவர் என்று கூறுகிறது சிலப்பதிகாரம்.

சிரேஷ்டிகளான சேட்டிமார்கள் இயல்பு.

தனவணிகரைச் செட்டிகள் என்பர்; வட நாட்டில் சேட்டுகள் என்பர். சிரேஷ்டி என்ற பதம் இவ்வாறு திரிந்து வழங்குகிறது. தனவணிகரின் ஒழுக்கத்தையும், முயற்சித் திறனையும், செல்வச் செழிப்பினால் அவர்கள் நமது சமுதாயத்திற்குச் செய்யும் பலவிதமான அறப்பணிகளையும் போற்றியே முற்காலப் பெரியார் அவர்களை சிரேஷ்டிகள் அல்லது உத்தமர்கள்—சிறந்தவர், மேலோர், பெருந்தகையாளர் என்று அழைத்தனர். தமிழ் நாகரிகத்தை இன்றும் அழியாது காத்து வருபவர் இந்தச் செட்டிமார்களே யாவர். முற்காலம் போலவே, இவர்கள் தமது குலத் தொழிலை விடாது காப்பாற்றி வருகிறார்கள். பிராமணர் தமது குலத் தொழிலைக் கைவிடுத்துப் பல தொழில் புரிந்து வருகின்றனர். க்ஷத்திரியர் குன்றிப்

போயினர். வைசியரும் வேளாளருமே இப்போது தமிழர் நாகரிகத்தைக் காத்து வருகின்றனர்.

விடுதலைக்குப் பாடுபடும் வீரர் திருக்கூட்டம்.

முற்காலத் தமிழரிடையே சாதி வேறுபாடு கிடையாது. தொழில் பற்றியும், சமுதாயப்பணி முறையாக நடக்கவேண்டியது பற்றியும் தமிழரிடையே நான்கு தொழிற் பகுதி யிருந்தது. அந்தணர், வீரர், வணிகர், வேளாளர் என்னும் இப்பகுதிகள் எல்லாம் ஒரே சரிசமனாகவே சமூகத்தின் பணியிற் பங்கு கொண்டன. உயர்வு தாழ்வு என்பதில்லை. தனவணிகரிடையே இன்னும் அந்தண்மை காணலாம். இப்போது தமிழ் நாட்டின் சுதந்திர வீரர் பலர் தனவணிகரிடையே யுள்ளனர். செட்டி நாட்டிலேதான் நமது நாட்டின் விடுதலைக்குப் பாடுபடும் காங்கிரஸிற்குப் பெரும்பாலான அங்கத்தினர் உள்ளனர் என்பதைப் பெருமையுடன் காண்க.

தனவணிகர் தருமமில்லாத கோயிலில்லை.

இன்று தமிழுக்கும், கல்விக்கும், தொழிலுக்கும், சமய வளர்ச்சிக்கும் பணிபுரிவதில் தனவணிக சமுதாயமே முன்னணியில் நிற்கின்றது. காசி முதல் இராமேசுவரம் வரையில் தனவணிகர் தருமமில்லாத கோயிலில்லை. நமது இந்து தர்மத்தின் முக்கியமான ஸ்தாபனமாகிய ஆலயங்கள் இன்று நிலைத்து நிற்பதே தனவணிகர் திருப்பணியாலேதான், என்று அனைவரும் அறிவர். தனவணிகர் பழைய ஆலயங்களைப் புதுக்கி யமைக்கின்றனர், நல்ல இடங்களில் புதிய

கோயில்களைக் கட்டுகின்றனர். கோயில் வழிபாடு கள் சரிவர நடக்க மானியங்கள் விடுகின்றனர். சேம நிதி ஏராளமாகத் தருகின்றனர். ஒரு கோயில் கட்டு வதென்றால், எத்தனையோ சிற்பிகள், கூலிகள், ஏழை கள், தொழிலாளருக்குப் பிழைப்புத் தருவதாகும். கோயில்களே நமதுநாட்டின் சிற்பச் செல்வங்களுக்கு நிலைக்களன். இவ்வாறு தனவணிகர் சிற்பச் செல் வத்தைப் பாதுகாக்கின்றனர். கோயில்களை யொட்டி தரும சத்திரங்கள் கட்டி ஏராளமான ஜீவகாருண்யப் பணி நடத்துவது தனவணிகரே. நமது நாடெங்கும் செட்டியார் சத்திரங்கள் உள்ளன. நமது திராவிட வேதமாகிய தேவார திருவாசகங்களை ஓதவும், ஓது விக்கவும் தனவணிகர் தரும பாடசாலைகள் ஆங்காங்கு அமைத்துள்ளனர். ஆரிய வேதத்தை ஓதவும் பாட சாலைகள் அமைத்துள்ளனர். இப்பாடசாலைகளில் மாணவர் எக்கவலையும் இன்றி உண்டு, இருந்து சமய நூல்களைப் பயிலுகின்றனர்.

சர்வமத சமரஸம் பேணும் தனவணிகர் சித்தாந்தம்.

நமது பாரத பூமியின் இரண்டு மகத்தான சமய தத்துவங்கள் வேதாந்தமும், சித்தாந்தமும். வேதாந்தத் திற்கே இப்போது பெரும்பாலான விளம்பரம் உள் ளது. சித்தாந்தம் சர்வமத சமரஸத்தின் அருளூற்று. 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்னும் உண் மையை உலகிற் கீந்து உலகவொற்றுமைக்கே வழி காட்டும் இந்த சித்தாந்த சமயத்தை வாழவைத்தவர் தனவணிகரே யாவர். ஆங்காங்கு சித்தாந்த பாட சாலைகள் கட்டித் தக்க புலவர்களைக் கொண்டு

சிவாத்துவித நெறியைப் பரப்புகின்றனர், தனவணிகர். இது தனவணிகருக்கே ஒரு தனிப் பெருமையாகும்.

சமயநெறி பரப்புகின்ற சால்புடைய தனவணிகர்.

சித்தாந்த நூல்களை ஏராளமாகத் தனவணிகர் வெளியிட்டுதவி யுள்ளனர். அருட்பாபோன்ற சர்வ சமரசப் பாடல்களை ஆயிரக்கணக்காக அச்சிட்டு இலவசமாகவும் தனவணிகர் வழங்குகின்றனர். பசு மடங்கள் கட்டி நமது நாட்டின் பசுச் செல்வத்தைக் காக்கின்றனர். குழந்தைகளுக்கு இலவசமாகப் பசும்பால் உதவுகின்றனர். ஊர்தோறும் தனவணிகர் குளங்கள் வெட்டியும், கிணறுகள் தோண்டியும், வைத்தியசாலைகள் அமைத்தும், சுகாதார நிலையங்கள் நிறுவியும், மக்களின் உடல் நலத்திற்கு எல்லையற்ற பணிபுரிகின்றனர். கோடைகாலத்தில் தனவணிகர் தண்ணீர்ப் பந்தல்கள் வைக்கின்றனர். கோயில்களில் சிறப்பாகத் திருநாட்கள் நடாத்தி அதன் சார்பில் ஏராளமான அன்னதானம் செய்கின்றனர். தமிழ் வேதமும், ஆரிய வேதமும் முழங்கச் செய்கின்றனர். தகுந்த வித்துவான்களை வரவழைத்து சங்கீதம், சதுர், சமய சம்பந்தமான சொற்பொழிவுகளை நடத்தி, சுதேசக் கலைகளையும், தத்துவ ஞானத்தையும், வேதாந்த-சித்தாந்த சமயநெறிகளையும் பரப்புகின்றனர். உதாரணமாகக் காளையார் கோயில் திருநாளில் ஏராளமான வித்துவான்கள் சன்மானம் பெறுகின்றனர். ஏராளமான தொழிலாளிகளுக்கு வேலை கிடைக்கிறது. ஏராளமான மக்கள் பத்து நாட்கள் எக்கவலையும் இல்லாமல்

இறைவனை அன்பு செய்து சமய அறிவு பெற்றுக் கலைச்சுவை யுண்கின்றனர். தென்னாட்டில் செட்டியார்கள் செய்து வரும் ஆலயப்பணியின் பயன் மிகப் பெரிது.

அறிவுப்பணி ஆற்றும் அண்ணாமலை சர்வகலாசாலை.

இவ்வாறு நமது முற்காலத்தின் சாத்திரங்களையும், கலைகளையும், அறவினைகளையும் போற்றும் தனவணிகர், தற்காலத்திற்கேற்ற அறப்பணி, அறிவுப்பணி நாட்டுப்பணி, சமுதாயப்பணிகளையும் புதுமுறை பற்றி ஏராளமாக நடத்துகின்றனர். இப்பணிகளின் சிகரம் அண்ணாமலைச் சர்வகலாசாலை. ஒரு தனி மனிதர் 50 லட்சம் கொடுத்து, இன்னும் எவ்வளவோ பொருள் செலவிட்டு ஒரு ஒப்பற்ற சர்வகலாசாலையை நிறுவியது உலக சரித்திரத்திலேயே நமது செட்டிநாட்டு ராஜாதான் என்பதை அனைவரும் அறிய வேண்டும். நாட்டிற் சிறந்த புலவர்களை எல்லாம் அந்தக் கலாசாலை நன்கு ஆதரிக்கிறது. இந்த ஒப்பற்ற கலாநிலையமே தனவணிகர் புகழுக்கு அழியா ஒளி வீசி நிற்கிறது. பல ஊர்களில் தனவணிகர் பள்ளிக்கூடங்கள் கட்டி சாப்பாடுபோட்டு மாணவருக்கு இனமாகக் கல்வி புகட்டுகின்றனர். அக்கல்வி நிலயங்களால் நாட்டில் பல ஏழைப்பிள்ளைகள் அறிவைப் பெறுகின்றனர். முதன்மையாகத் தமிழ் வளர்ச்சிக்குத் தனவணிகர் ஒப்பற்ற பணி செய்திருக்கின்றனர்.

சமுதாய முற்போக்கிற்குத் தனவணிகர் தொண்டு.

இன்று தனவணிகரிடையே பண்டித மணிகள் இருக்கின்றனர். கவிகள் உள்ளனர். கலைப்புலவர் உள்ளனர். சீகரற்ற பத்திராதிபர் உள்ளனர். பெண் கல்விக்காக முறையாகக் கல்வி நிலயம் வைத்து நடத்தும் அறிவாளர் உள்ளனர். சமூக சீர்திருத்தத்தை வீரமுடன் காரியத்திற் கொண்டுவரும் பொதுநல ஊழியர் உள்ளனர். மகாத்மா காந்தியின் சத்தியாக்கிரக வீரரில் பலர் செட்டிநாட்டில் உள்ளனர். "குமரன்" "ஊழியன்" "தனவணிகன்," "செட்டிநாடு" "வீரகேசரி" "சக்தி" போன்ற அரிய பத்திரிகைகள் தனவணிகரால் நடத்தப்படுகின்றன. நமது சமுதாயத்தின் தீமைகளான தீண்டாமை, பெண்ணடிமை இரண்டையும் ஒழிக்க தனவணிகவீரர் அரும்பாடு பட்டு வருகின்றனர். "மாதர் மறுமணம்" என்ற பத்திரிகை பெண்ணின் கண்ணீர் துடைக்க நாட்டில் ஒரு புதிய விழிப்பைத் தந்திருக்கிறது. மறுமணமும் தனவணிக சமுதாயத்தில் நடந்துள்ளது.

காந்தி இயக்கத்திற்கு முன்பே தனவணிகர் கதர் அணிந்தனர்.

இவ்வாறு பழைய நன்மையும் புதிய நன்மைகளும் சேர்ந்து இன்றுள்ள தனவணிக சமுதாயம் தமிழுலகிற்கே ஒப்பற்ற வழிகாட்டியாயுள்ளது. நமது நாட்டின் முன்னேற்றத்திற்கும், விடுதலைக்கும் சாதனங்களாகிய பல நன்மைகள் தொன்று

தொட்டே தனவணிகரிடையே இருந்து வருகின்றன உதாரணமாக இன்று மகாத்மா காந்தி யியக்கத்தின் உயிர் நிலையான கதர் தனவணிக மாதரிடையே தொன்று தொட்டு இருந்ததே. ஆய்ச்சிமார்கள் நீண்டகாலமாகக் கை ராட்டினம் சுழற்றி வந்தனர். சில வீடுகளில் இன்னும் முன்னே நூற்று நெய்த ஆடைகளைக் காணலாம். பெண்ணுக்கு இராட்டினத்தையும், பஞ்சுக்கொட்டும் கருவியையும் வில்லையும் தனவணிகர் சீதனமாகத் தருகின்றனர். சில வீடுகளில் பழைய இராட்டினங்களை இன்றும் இருக்கக் காணலாம். காந்தி இயக்கத்திற்கு முன்பே தனவணிகர் கதர் அணிந்தனர்; நூல் நூற்றனர்.

தமிழர் நாகரிகத்தைத் தனவணிகரே பரப்பினர்.

தொழில் முயற்சியில் தனவணிகர் ஒப்பற்று விளங்குகின்றனர். பர்மாவில் ஏராளமான முதல் போட்டு காட்டைப் பயிர் நிலமாக்கியது தனவணிகரே. பர்மிய வாணிபத்திற்கு இன்னும் இவர்கள் உயிர் நாடியாயிருக்கிறார்கள். இராஜ ராஜ சோழன் காலம் முதலே தனவணிகர் வெளி நாடுகளுக்குச் சென்று முதல் போட்டு வாணிபம் செய்து வந்தனர். மலேயாவில் தனவணிகர் ரப்பர் தோட்டத்திலும் வேலாதேவியிலும் ஏராளமான முதல் போட்டுள்ளனர். சைகோன், சையாம், கீழிந்தியத் தீவுகள், இலங்கை முதலிய விடங்களிலும் தனவணிகர் குடியேறி வியாபாரம் செய்கின்றனர். தமிழும்

தமிழரும், தமிழ் நாகரிகமும் கடல்கடந்து பரவத் தனவணிகர் இவ்வாறு துணை செய்கின்றனர்.

தனவணிகரே தமிழ்நாட்டின் உயிர்நாடி.

இவ்வாறு தனவணிகர் இன்று தாய்மொழி, தாய்நாடு, சமயம், கல்வி, கலை, தொழில், பெண்விடுதலை, தேச சுதந்திரம், சுகாதாரம், சமூக முன்னேற்றம் அனைத்திற்கும் ஓயாது பணிபுரியும் பொது நல வீரர்களாகத் திகழ்கின்றனர். தமிழர் முன்னேற்றத்தின் விசை தனவணிகரிடம் உளது. இன்று தனவணிக வாலிபரிடையே ஒரு புதிய வுணர்ச்சி பிறந்திருக்கிறது. தாம் நெடுநாளாகச் செய்துவந்த வட்டித் தொழிலை மட்டும் இனி அவர்கள் நம்பி இருக்க மாட்டார்கள். பிற நாடுகளிற் குடியேறித் தொழில் செய்வதுடன் நிற்கமாட்டார்கள். தமது அருமைத் தாய் நிலம் செல்வச் செழிப்புறவே இனித் தனவணிகர் ஓயாது முயற்சி செய்வர். இப்போது தனவணிகர் ஐரோப்பியரின் கூட்டுறவு முறையில் நாகரிகமான பாங்குகளை நடத்துகின்றனர். இனித் தமது பணத்தை நாட்டிற்கு வேண்டிய ஒரு தொழில் முயற்சியிற் போடுவர். உதாரணமாகத் தமிழ் நாட்டில் விளையும் மூங்கில்களைக் குத்தகை யெடுத்துக் காயிதத்தொழில் நடத்தலாம்.

வருங்காலத் தனவணிகர் தன்மை.

தனவணிகர் செல்வம் இனி இரும்புப் பெட்டிகளில் உறங்காது. ஆயிரக்கணக்கான ஏழைகளுக்கு

உழைப்பும் பிழைப்பும் நல்கும். ஒரு கையில் திருவாசகமும், மறுகையில் ஏழைகளுக்குக் கஞ்சிக்கலயமும் பிடிப்பர் தனவணிகர். வருங்காலத் தனவணிகர் குண்டூசி முதல் ஆகாயக்கப்பல் வரையிற் செய்வர்; உப்பு முதற் கற்பூரம் வரையில் விளைவிப்பர். அதற்கேற்ற ஆற்றல் தனவணிகருக்கு இயல்பிலேயே அமைந்துள்ளது.

தமிழ் நாட்டு வணிக மன்னராகத் தனவணிகர் விளங்குக.

தனவணிகர் தமக்கு இயல்பாயுள்ள தொழில் முயற்சியால் தமிழ் நாடு செல்வமும், கலையும், கல்வியும், அழகும் பொலிவும் எய்துக! தனவணிகரின் சமயத் தொண்டுகளால் தமிழகம் அருளழகுக் கோயிலாகுக! தனவணிகர் நீடூழி வாழ்க! தனவணிகர் ராக்பெல்லராகவும், போர்டுகளாகவும், எடிசன்களாகவும் விளங்குக! அன்பர்களே, அருந்தவப் பெரியார் சுவாமி சுத்தானந்த பாரதியாரவர்களின் சொல்லழகும், கருத்தழகும் நிறைந்த அருமையான கருத்துரை இது. அடிகள் அருளிய அரிய உரையால் உலகினர் தனவணிகர் தன்மையை அறியலாம்; அவர்தம் மாண்பினை உணரலாம்; பண்பினைக் காணலாம்.

செந்தண்மை வாய்ந்த தனவணிகர் சிறப்பு.

தமிழன்பர்களே! இனி, நான் நவிலுகின்றேன். பொதுவாகத் தனவணிகர் தன்மை குறித்துச் சொல்லின், குல தருமம் பேணும் பெருமக்கள் தனவைசி

யர் என்று இயம்புதல் வேண்டும். ஈகைமிக்கப் பெருந்தகையாளர் தனவணிகர் என்று சாற்றுகின்றேன்; சிவ பக்தியுடைய சிவநேசச் செல்வர்களெனக் கழறுகின்றேன். சைவசமயப் பற்றுடைய அறப்பெரு மக்களென்று வழுத்துகின்றேன். சீல முறுஞ் செல்வர்களான செட்டியார் மரபினர் அன்பும் அறமும் காக்கும் இயல்பினர் என்று சுருக்கத்தில் சொல்லுதலே மிகவும் சாலும். நவயுகத் தமிழகத்தில் புத்துணர்வு பெற்றுப் பேராக்க முற்றுப் பொதுநலப் பணி புரியும் ஸமரச சன்மார்க்கச் சுடர்களான தனவணிகச் சிங்கங்களை இளம் வீரர்களை அடியேன் வாழ்த்துகிறேன். அவர்கட்குச் சில சில கருத்துக்களையும் சொல்ல விரும்புகின்றேன்.

தமிழ் நாட்டு வணிக மன்னர்களாகத் தனவணிகர் விளங்கினர்.

பைந்தமிழ் நாட்டுத் தனவணிக வீரர்களே! பழந் தமிழகத்தில் தனவணிகர் சிறந்து நிலவிய தன்மையை நினையுங்கள். நமது முன்னோர்கள் தங்களின் திருக்கரங்களினாலே மன்னர்களுக்கு மகுடஞ் சூட்டினார்கள்; அரசரினும் சிறந்த தன்மை பெற்றுப் பெருவாழ்வு நிகழ்த்தினார்கள். தமிழ் நாட்டு வணிக மன்னர்களாக வளமை செறிந்து விளங்கியவர்கள் நமது மரபினர்களன்றோ! அறத்தை—அன்பை—அருளை அடிப்படையாகக் கொண்டு அக்காலத் தனவணிகர் செம்மை நெறியில் சிறந்து விளங்கினர். நமது மரபினிலே அருமறை அறிந்த அந்தணர் பலர் வாழ்ந்தனர்; மெய்யறிவு பெற்ற மேலோர் பலர் திகழ்ந்தனர், சிற்

தையை அடக்கிய சித்தர் பலர் இருந்தனர். தன வணிக மரபின் தொன்மையின் தன்மையை இன்றுள்ள இளைஞர்கள் ஊன்றி உணர்ந்தால்—அவர்களின் பண்டையகாலப் பண்பும் உயர்வும் பலவாறாகப் புலனாகும். புதுயுகத் தமிழகத்தில் மலர்ந்து வரும் வாடா மலர்களான வணிக குலமணிகளே! மீண்டும் வேண்டுகின்றேன், நமது மரபினரின் தொன்மையின் சிறப்புக்களை நினையுங்கள். அறத்தில் அமர்ந்து, இன்பத்தை நுகர்ந்து, ஈகையிற் சிறந்து, அருளைப் பரப்பினர் அக்காலத் தனவணிகர் என்பதை உணருங்கள். எனவே, இற்றை ஞான்றுள்ள இளைஞர்கள் கடமை என்ன? இயம்புகின்றேன்; கேளுங்கள்.

தாயின் மணிக்கொடி பிடித்துத் தனவணிகரே எழுக!

நமது தனவணிகத் தாயான தமிழம்மை மீண்டும் அழகு பொலிய அரியாசனம் ஏறவேண்டும்! பழங் காலப் பண்பு போல வீரத் தமிழம்மையாய் விளங்கி, ஆண்மையிலும் அருளிலும் தலைசிறந்து சிங்காதனம் அமர வேண்டும். அன்புத்தாய் தனவணிக அரசி புன்னகை புரிய—இளமை எழில் ததும்பப் பெருமாண்புடன் செங்கோல் செலுத்துதல் வேண்டும். நமது தனவணிக அன்னை முடியணிந்து, கலையணிந்து, செங்கோலோச்சி, அரியாசனத்தில் வீற்றிருந்து அரசு செலுத்துகின்ற போழ்து தான் நமது வாழ்வில் அன்பும் அருளும் ஆறாக ஓடி இன்பம் பயக்கும். எனவே, தனவணிக இளம் வாலிப வீரர்களெல்லாம் தாயின் மணிக்கொடி தாங்கி, 'எந்தாய் வாழ்க' என்று யாண்டும், பேரொலி பரவ முழங்கவேண்டும்;

"வந்தே மாதரம்" என்று கம்பீரத் தொனியுடன் கர்ஜிக்க வேண்டும். ஆண்மையும், அஞ்சாமையும், உண்மையும், உறுதியும், வீரமும் விழுமிய விழுப்பமும் தனவணிக இளைஞர் குழுவிற்குத் தழைத் தோங்குதல் வேண்டும். தனவணிக குல மணிகளெல்லாம் "ஞானவீரர், தர்மவீரர், கர்மவீரர் என்று உலகத்தவர் உவந்து உரைப்பதற்கு இலக்காதல் வேண்டும்.

சமரச சன்மார்க்கங் காண வணிகர்குல வாலிபர்களே வருக!

வணிகர்குல வாலிபத் தோழர்களே, ஒரு நாட்டிற்கு உயிர்நாடி இனிய மக்களேபோல் ஒரு சமுதாயத்திற்கு உயிர்நாடி ஆண்மைக் குருதி செறிந் தோடும் வீர வாலிபர்களேயாவர். வாலிப வீறு சுதந்தர இயக்கத்திற்கு—உரிமை உணர்வுக்குத் துணை போதல் வேண்டும்; சமூக சீர்திருத்தத்திற்கு ஆக்கந் தருதல் வேண்டும்; முற்போக்குக் கொள்கைகளுக்கு முனைந்து நிற்றல் வேண்டும். தமிழரெல்லாம் ஒருகுல மக்களென்னும் உண்மையை உணர்ந்து, பழந்தமிழரின் சமரஸ சன்மார்க்க நெறிக்கு வழிகோடல் வேண்டும். எழிலுந் திருவும், இளமையும் நிரம்பப் பெற்ற ஆண்மைக்கனவாய வாலிப வீறின் கடமை—செயல் இஃது.

தமிழ்த்தாய் வாழ்க வென்று தனவணிகர் வழுத்துக!

என்னருமைத் தனவணிக இளம் வீரர்களே! உலகம் புத்துயிர் பெற்று வருகிறது. நாடு நவயுகங் காண விழைகிறது. மனித சமுதாயம் சமதர்ம உணர்

வில் வீறிட்டு நிற்கிறது. மக்களெல்லாம்சன்மார்க்க வாழ்வுற சகோதரத்துவம் வேண்டுகிறார்கள். "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்று அறிஞர் குழாம் சாற்றுகிறது. இதுபோது தனவணிக இளைஞர் கடமை என்ன? வீரத் தமிழர் குலத்தில்—தனவணிக மரபினர் ஒருமைத் தொடர்புக் கொண்டு நாட்டு நலனுக்குத் தொண்டு புரிய இன்னே முயல வேண்டுவதே இன்றியமையாத தாகும். எனவே, தனவணிக வாலிப வீரர்களைத் தமிழகத்தும், தமிழர் குழுவிற்கும், தமிழ் நாட்டிற்கும் தொண்டு செய்ய வருமாறு ஆர்வத்துடன் அழைக்கின்றேன். வீறுபெற்ற தனவணிக இளமணிகளே! 'வருவது வருக புரிகுவம் நன்மை' என்று எண்ணித் திண்ணிய மனத்துடன் துணிந்து வருக! விழித்தோ மெழுந்தோம், வீரராய் நின்றோ மென்று உலகு உணர விளம்புங்கள். உடலுறுதி கொள்ளுங்கள்; உள்ளுறுதி அடையுங்கள். அரசியல் உணர்ச்சியை அகத்திலே கிளர்த்துங்கள்; தமிழக உரிமையைப் பெற்றே தீருங்கள். தொழிலாக்க முயற்சியில் முனைந்து நில்லுங்கள்; செழுந்தமிழ் செழிக்கத் திட்டங் கோலுங்கள்; கலைவளம் காண இன்றே முயலுங்கள், ஆராய்ச்சித் திறன் பெற ஆர்வங் காட்டுங்கள். சமுகத் தொண்டு செய்ய வீறிட்டு நில்லுங்கள். சன்மார்க்க சமயமே தமிழர் சமயம் என்பதை உலகினர் உணர யாண்டும் முழக்குங்கள். விதியை மதியால் வெல்லலாமென்று விடா முயற்சி கொண்டு செயலிற் காட்டுங்கள். தமிழகத்தைத் திருக்கோயிலாக்கச் சித்தம் கொள்ளுங்கள். தாயிழாலயம் சென்று, தமிழம்மைபால் நின்று தேவி,

"எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே யெண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்
பண்ணிய பாவ மெல்லாம்
பரிதி முன் பனியே போல
நண்ணிய நின்முனிங்கு
நசித்திடல் வேண்டு மன்னாய்"

என்று விண்ணப்பஞ் செய்யுங்கள். தனவணிக இளம் ஏறுகளே! தாயின் மணிக்கொடி ஏந்தி, 'தமிழ்த்தாய் வாழ்க' என்று வாழ்த்தி வந்தேமாதரம் முழங்கி வெற்றி முரசடித்து, ஆர்ப்பொலி பரவ, அருமைத் தமிழகம் ஆண்மையும், சுதந்தரக் கேண்மையும் ஒருங்கே யடைந்து உயர்வுறுதற்கு ஒல்லும் வகை தொண்டு புரிய இன்னே தலைநிமிர்ந்து வாருங்கள்!

என்னருமைத் தனவணிக மரபினரே யினிது வாரீர்;
எல்லோரும் ஒருதலமா யிணைந்து வாழ்வோம்.

தனவணிகர் தன்மை

இரண்டாவது சொற்பெருக்கு

பிரமாதி, ஆடி, மீசுடை
1-8-39

அன்புத் தமிழர்களே!

இது போழ்து இலங்கை ஆகாயவசனிக் கருவி முன்பு அமர்ந்திருக்கின்றேன். ஏண்டு யான் எப் பொருளுரையில் பேசுவேன் என்பதை நிகழ்ச்சி சொல்லும் தோழர் (Announcer) நுங்கட்குச் சொல்லினர். என் கரத்திலே "தனவணிகர் தன்மை" என்னும் கையெழுத்துப் பிரதி காட்சியளிக்கிறது. கட்புலனே அதனைப் பார்த்து உள்ளிற்கு உணர்த்தி, பேச்சொலி எழுப்ப முனைந்து நிற்கின்றது. வாய் வணிகர் தன்மையைச்-சொல்ல வானொலிக் கருவியை எதிர் நோக்கிப் பார்க்கிறது. ரொம்பச் சரி; இனி யான் பேச்சுரை வழங்குதலன்றோ நன்று.

தமிழ் நாட்டுத் தனவணிகர் தன்மையைப் பைந் தமிழர் கேட்கட்டும்.

இந்த வானொலிக் கருவி வழியாக இதற்கு முன் ஒருமுறை தனவணிக மரபின் இனிய இயல்பு குறித்து ஒரு பேச்சு நிகழ்த்தினேன், அஃது தனவணிகர்

சரித்திர நிகழ்ச்சி அமைந்ததாய் இருந்த தென்பதை அவ்வுரை கேட்டிருந்தார் அறிந்திருப்பர். இதுபோழ் தும் தமிழ் நாட்டுத் தனவணிகர் தன்மையைக் குறித்து ஒரு விரிவுரை நிகழ்த்துமாறு இந்த அசரீரி நிலய அமைச்சர் வேண்டினர். தனவணிக மரபினை உலகினர் உணர்தற்கு உரியதான ஒலிபரப்புரை பகர் தல் இன்றியமையாத சிறந்த வாய்ப்பென நினைந்து உவகையுடன் இசைந்தேன். எனவே, இயம்புகின் றேன் தனவணிகர் தன்மையை. செந்தமிழ் நாட் டவர் கேட்கட்டும்.

பழந்தமிழர் பரம்பரை மரபினரே தனவணிகர்.

தனவணிக ரென்னும் மரபினர் ஆதித் தமிழகத்து அருந் தமிழ்ப் புதல்வர்களாவர். சங்க காலத்தில் தமிழரசியின் செங்கோலும், அரியணையும், பொன் முடியும், தனவணிகரின் செல்வ வளத்தாலே, சீரி செறிந்து, அழகு பொலிந்து, அற்புதமான தெய்வ வொளியினை வீசிச் சிறந்து விளங்குவதாயிற்று. பழந் தமிழ்நாடு கப்பல் வாணிபத்தில் முதன்மை பெற் றிருந்த காலத்திலிருந்தே தனவணிகர் தமக்கியல்பான வாணிப முயற்சியில் முனைந்து, வடமலையிற் பிறந்த மணியும் பொன்னும், குடமலையிற் பிறந்த ஆரமும் அகிலும், தென்கடல் தந்த முத்தும், குணகடல் தந்த துகிரும் ஒருங்கே பெற்று வெளி நாட்டவரோடு வர்த் தகம் செய்தனர். இத்தகைய அரும்பொருள் வாணி பப் பெருக்கினால் தனவணிகர் கரைகாணு வளங் கண்டு, செல்வம் மல்கப் பெரும் பேறெய்திப் பெரு

மாண்புடைய பெருங்குடி மக்களாகச் சிறந்திருந்தனர். சுருங்கச் சொல்லின், ஆதித் தமிழகத்திலே அருங்கலைச்செல்வி தமிழம்மையின் செல்வத் திருக்கரங்களாக விளங்கியவர் தனவணிகர் என்றே சாற்றுதல் சாலும்.

தனவணிகர் உதித்த தமிழகத்தின் பெருமை.

அருமைத் தமிழீர்! நந்தமிழ் நாட்டிலே எத்தனையோ சமய வகுப்புகளிருக்கலாம்; பலதிற மக்களிடையே பன்மை யுணர்வுடன் வேற்றுமை நிலவலாம்; ஆனால் தமிழகத்திற் பிறந்த ஒவ்வொருவர்க்கும், தமிழ் மண்ணில் பிறந்த மனித மாபினராகிய எவரனையார்க்கும் தமிழன்னை பொது; தமிழ் பொது; தமிழ்ப்பணி பொது; தமிழகம் பொது என்பதில் எள்ளளவும் எவர்க்கும் ஐயமில்லை எனலாம். அமுதச் செல்வி தமிழரசியின் ஒருகுல மைந்தராகவே பண்படைத் தமிழர் ஒன்றி வாழ்ந்தனர். 'தமிழர் உலகின் தொல் பெருமக்கள்; தமிழர் நாகரிகம் ஒரு காலத்தில் பரத கண்டம் முழுவதும் பரவியிருந்தது. திபேத்து, பர்மா, பெலுசிஸ்தானம், மலயா, காந்தகம், பூநியா, நடுக்கடல் நாடுகள் இவற்றிலெல்லாம் தமிழர், நாகரிகம் பரவியிருந்ததற்குப் புறச்சான்றுகள் உள்ளன; தமிழர் கப்பல் செல்லாத்துறை கிடையாது; தமிழர் வாணிபம் மேற்கிலும், கிழக்கிலும் தழைத்தோங்கியதற்கு ஏராளமான அகச்சான்றுகளும், புறச்சான்றுகளும் உள்ளன. கைத்தொழில், கப்பல் வாணிபம் ஆகியவற்றால், தமிழர் பெயர் உலகெங்கும் தெரிந்தது.

இங்கே பல *ஏலேல சிங்கர்கள் இருந்தனர். அரபியர் எகிப்தியர், யவனர் முதலியோருடன் பாண்டியநாடு வியாபாரம் செய்தது' என்று முக்காலத் தமிழர் பண்பைச் செப்பமுறத் துலக்குகின்ற சுவாமி சுத்தா னந்தர், தமிழ் மரபின் பழம் புகழைப் பின்வருமாறு பாடுகின்றார் :

"முன்னாளில் உலகமெலாங் கப்ப லூர்ந்தோம்
முச்சங்கக் கலைவளர்த்தோம் ; தொழில்வ ளத்தாற்
பொன்னொளு நாட்டினிலே பொங்க வைத்தோம் ;
புவியரசர் கவியரசர் புலனை வென்ற
தன்மயமாந் தவத்தரசர், தறுகண் வீரர்,
தனைலுங்கற் பரசிகளுந் தழைக்க வாழ்ந்தோம் ;
அன்னபுகழ் இந்நாளும் அடைய வல்லோம் ;
அயராம லெழுந்திருமின் அருட் பணிக்கே.

என்று இற்றையத் தமிழகத்தார்க்குப் பழந்தமிழ் நாட்டின் சீர்மையைச் சித்தரித்துத் துலக்கி அறிவுறுத்து கின்றார் சுவாமிஜீ சுத்தானந்தர். இத்தகைய சீலம் வாய்ந்து சிறப்பினில் திகழ்ந்த செந்தமிழ் நாட்டிலே— செம்மை செறிந்து நிலவிய பைந்தமிழ் நாட்டிலே பெருமை வாழ்ந்த பெருங்குடி மக்களாகிய தனவணிக மரபினரும் தோன்றினர் என்னும்போது என்னனை யார் உள்ளம் எல்லைகாணு உவகை யுறுகிறது. முற் காலத்தில் எங்கள் முன்னோர்களே தமிழ்நாட்டு வணிக மன்னர்களாக உலகெங்கும் தமிழ்க் கொடியை உயர்த்தி, தொழில் வளம் பெருக்கி, தமிழகத்தைத்

---

*ஏலேல சிங்கர் = என்பது தனவணிக மரபினைச் சேர்ந்த தகைமையாளர் ஒருவரின் பெயர். பெருநிதிச் செல்வர், வள்ளுவரின் சீடர்.

தங்கமலே யாங்கினர் என்னும் நினைவுறும்போது மீட்டும் எங்கள் உள்ளத்திலே தமிழர் என்ற பேருணர்ச்சி வீறு பொங்கி எழுகிறது. கன்னித் தமிழ் நாட்டின் மண்ணில் யாங்கள் (தனவணிகர்) பிறந்தது எங்களின் பெறற்கரிய பெரும் பாக்கியமன்றோ!

மூவேந்தர் ஆட்சியின்போது தனவணிகர் சிறந்தனர்.

சங்ககாலத் தமிழகத்தில் தனவணிக மரபினர் எத்தன்மையராய் வாழ்ந்து வந்தனர் என்பதை இக்காலத்தவர் அறிந்துணர்தல் மிகவும் நன்று. முடியுடை மன்னராய் முற்காலத்தில் தமிழகத்தை ஆண்டுவந்த மூவேந்தர் ஆட்சியின்போது, அதாவது முன்னர் நிகழ்ந்த முதற்சங்கம், இடைச்சங்க காலத்தின் போதும் பின்னர் கி. பி. இரண்டாவது நூற்றூண்டாகிய கடைச்சங்க காலத்தில், செந்தமிழ்ச் சாம்ராஜ்யத்தைத் திறம்படச் செங்கோலோச்சி வந்த சேரன் செங்குட்டுவன், திருமாவளவன், நெடுஞ்செழியன் ஆகிய முத்தமிழ் மன்னர் ஆட்சியின்போதும் தனவணிக மரபினர் கல்வியில் வல்லராகிக் கலைவளங் கண்டு, தொழிலுலக ஆட்சிபெற்று, வாணிப வளமை எய்திச் சிறந்து விளங்கினர் என்றே சொல்லலாகும். தனித் தமிழரசை உரிமைகாத்துச் செங்கோல் கோடாது செந்தண்மை நெறியில் குடிதழுவிக் கோலோச்சிவந்த சேர, சோழ, பாண்டியர் காலத்தில் தனவணிகர் செல்வச் செழிப்படைந்து வாணிப வளத்தில் முதன்மை பெற்றிருந்த பெற்றியை இது போது நாம் நினைத்தல் வேண்டும். மூவேந்தரின்

முடிகவிழ்ந்த பின்னர் தமிழகத்தில் அந்நியர் போந்து அரசுரிமை கவர்ந்து, உரிமையில் வாழ்ந்த தமிழர்களை அடிமைப்படுத்தினர்; தமிழகம் அடிமைப்பட்டு அவதியுற்ற சிறுமைநிலை நேர்ந்த காரணமாகப் பின்னைய தனவணிகர் பெருவாழ்வும் சீர்குலையலாயிற்று.

தனவணிகரைக் குறித்துத் தமிழ்ப் பெரியார் கருத்து.

இன்னமுதத் தமிழர்களே! தமிழ் நாட்டுத் தனவணிகரின் முன்னைய தன்மையினை விளக்கித் தமிழகத்துப் பெரியாரான மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் ஒரு கட்டுரை எழுதியுள்ளார்கள். அவற்றில் சிலவற்றை ஈண்டு சொல்லுகின்றேன்; கேளுங்கள்.

வணிகர் வகுப்பில் பலவகைப் பிரிவுகள்

வாணிகத்தை பரம்பரையாகச் செய்துவரும் மரபினர் வணிகர், வைசிய ரெனப்படுவார். அவர்களிற் பலவகையினர் உண்டு. தனவைசியர், கோவைசியர், பூவைசியர் என்பார் ஒருவகைப் பிரிவினர். இப்பர், கவிப்பர், பெருங்குடி வணிகரென்பார் வேறொரு வகைப் பிரிவினர். இப்பிரிவினர் தாம் கொண்ட பொருளளவாற் பெயர் பெற்றனர். தாம் செய்யும் வியாபாரத்தாற் பிரிக்கப்பட்ட கூலவாணிகர், பொன் வாணிகர், அறுவை வாணிகர், மணி வாணிகர் முதலிய பிரிவினரும் உண்டு. சேனை வாணிகர் என்பவரைப் போன்ற உத்தியோகப் பிரிவினரும் உண்டு.

வணிகருக்குரிய ஐந்து தொழில்கள்.

தமக்குரிய நூல்களை ஓதுதல், தமக்குரிய யாகங்களைச் செய்தல், தாம் பெற்ற பொருள்களை நல்வழியில் ஈதல், உழவு செய்வித்தல், பசுக்களைக் காத்தலென்னும் ஐந்தும் வணிகருக்குரிய தொழில்களென்று தொல்காப்பியத்தால் கூறப்பட்டிருக்கிறது. அவர் அரசர்களால் பெரிதும் மதித்துப் பாராட்டப் பெற்றனர். தமிழரசர்கள் தங்களுக்குள் போர் நேர்ந்த காலங்களில் தூதாக அனுப்புதற்கு உரியவர்களுள் வணிகரும் ஒருவகையினர். அரசர்களது நிலையை உணர்ந்து சினமின்றித் தாம் கூறுவதைச் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் ஆற்றலுடைமையால் அவர் அத்தொழிற்கு உரியராயினர்.

அரசரும் வணிகரும் அன்பில் ஒன்றினர்.

அரசர்களும் வணிகர்களும் கலந்து பழகினார்கள். அதனால் வணிகர்கள் இளங்கோக்களெனக் கூறப்படுவார்கள். காவிரிப்பூம் பட்டினத்தில் வீதியில், 'அரசகுமரரும் வணிக குமரரும் குதிரைகளின் மேலும் களிற்றின் மேலும் ஏறி ஒருங்கே சென்றனர்' (சிலப்பதிகாரம் இந்திர விழவூரெடுத்த காதை 158–60) என்று சொல்லப்பட்ட பகுதியால் அரசருக்கும் வணிகருக்கும் இருந்த நட்பு விளங்குகின்றது. அரசர்களால் அவர்கள் பலவகையான சிறப்புக்களைப் பெற்றார்கள். எட்டி யென்னும் பட்டமும் அதற்குரியதாகிய பொற்பூ வொன்றும் அவர்களுக்கு அளிக்கப்பெற்றன. சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி,

குண்டலகேசி முதலிய நூல்களில் வணிகரைப் பற்றிய பல செய்திகள் காணப்படும்.

வணிக மரபினர் இருநகரிலும் இருந்தனர்.

காவிரிப்பூம் பட்டினத்திலும் மதுரையிலும் வணிகர்கள் மிகுதியாக இருந்தனர். அவ்விரு நகரிலும் நாளங்காடி என்னும் காலைக் கடைத்தெருவும் அல்லங்காடி என்னும் மாலைக் கடைத்தெருவும் இருந்தன. இவற்றிற் பண்டம் விற்போர் தம்மிடம் உள்ள பண்டங்கள் இன்ன வென்பதை காட்டுவதற்கு அறிகுறியாகச் சிலவகைக் கொடிகளை நாட்டி வைப்பர். இரவிற் கொடியினைப் புலப்படுத்த இயலாதாகையால் பலவகை விளக்குகளால் அதனைப் புலப்படுத்தினார்கள். இச் செய்திகள் சிலப்பதிகாரத்தாலும் பட்டினப்பாலையாலும் விளங்கும். ஊணுண்போர் இயல்பையும் களவு செய்வோர் இயல்பையும் மாற்றும் திறமை வணிகர்பால் இருந்தமை அவர்களுடை சிறந்த தன்மையை விளக்குகின்றது. நல்லுரையினாலும் அறச் செயலாலுமே அத்தகைய செயல்களை அவர்கள் செய்து வந்தார்கள்.

இருநிதி வழங்கிய பெருநிதி மரபினர்.

வணிகர் தனது ஈகைச் சிறப்பைப் பாராட்டி ஒருபழைய செய்யுள்,

> " ஈட்டிய தெல்லாம் இதன்பொருட் டென்பதே
> காட்டிய கைவண்மை காட்டினார்—வேட்டொறும்
> காமருதார்ச் சென்னி கடல்சூழ் புகார் வணிகர்
> தாமரையும் சங்கும்போல் தந்து "

என்று கூறுகிறது. 'சோழ அரசனுக்குரிய காவிரிப் பூம் பட்டினத்திலுள்ள வணிகர்கள் பதும நிதியை யும் சங்க நிதியையும் போலப் பொருள்களை வழங்கி, தாம் ஈட்டிய செல்வமெல்லாம் அறம்புரிவதற்கேயா மென்பதை விளக்கும் கொடைத் திறத்தைக் காட்டி னார்கள்' என்பது இதன் கருத்து. ஆலயத் திருப் பணி முதலியவைகளிலும் வித்தியா தருமங்களிலும் இக் காலத்தில் ஒப்பற்று விளங்கும் தனவணிகர்க ளுடைய கைவண்மைக்கும் இச் செய்யுள் பொருத்த மாகத் தோற்றுகின்றது.

வணிகர் குழுவிற்கு வர்த்தகத் தலைவனாய சாத்து.

தமிழ் நாட்டு வணிகர்கள் பிற நாட்டாரோடும் வாணிகம் புரிந்து வந்தனர். பிற நாட்டு வணிகர்கள் இந் நாட்டுக்கு வந்து பல பண்டங்களைப் பெற்றுச் சென்றார்கள். தமிழ் நாட்டு வணிகர்கள் ஈழம், காழ கம், கடாரம் (பர்மா), சீனம், சோனகம், யவனம் முதலிய நாட்டு வணிகர்களுடன் வியாபாரம் செய் தனர். கப்பல் வியாபாரம் மலிந்திருந்தது. யானை களும், குதிரைகளும் கப்பல்களில் வந்து இறங்கின. உள் நாட்டில் வியாபாரம் செய்யச் செல்லும் வணி கர், கூட்டம் கூட்டமாகச் சென்றார்கள். அக் கூட் டத்துக்குச் சாத்து என்று பெயர். வணிகர்களுள், சாத்தன், சாத்தப்பன் என வழங்கும் பெயர்கள் பழைய காலத்தில் சாத்துக்குத் தலைவனாக இருந்தவர் களது பெயரிலிருந்து வந்தனவாகத் தோற்றுகின் றன. வேறு நாட்டுக்குச் செல்ல விரும்பியவர்கள்

அந்த வணிகர் கூட்டத்தையே துணையாகக் கொண்டு சென்று வந்தார்கள்.

பலமொழி பயின்றிருந்தனர் வணிகர் பெருமக்கள்.

பல நாட்டு வணிகர்களோடு பழகுவதனாலும் பலநாடுகளுக்குச் சென்று வருதலாலும் அவர்களுக்குப் பல தேசத்து மொழிகள் தெரிந்திருந்தன. மணிமேகலையில், சாதுவனென்னும் வணிகன் ஒருவனுக்கு நாக சாதியினருடைய பாஷை தெரிந்திருந்ததென்றும், தன்னைக் கொல்ல வந்த நாகர்களிடம் அவன் அப்பாஷையிற் பேசி அவர்களாற் போறறப் பட்டானென்றும் ஒரு செய்தி கூறப்பட்டுள்ளது. பல தேச சஞ்சாரத்தால் அவர்கள் உலக அநுபவமும் கூரிய அறிவும் வாய்ந்தவர்களாக இருந்தார்கள். கணக்கு முதலிய கலைகளில் அவர்கள் சிறந்த ஆற்றலுள்ளவர்கள்.

வணிக மரபின் வளமார்ந்த புலவர்கள்.

வணிகர்களுள், பழைய காலத்திலும் பிற்காலத்திலும் பல புலவர்கள் இருந்தார்கள். பொன் வாணிகனார், மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார், மதுரைப் பண்ட வாணிகன் இளந்தேவனார் என்பவர்கள் சங்க நூல்களால் அறியப்படுபவர்கள். ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றாகிய மணிமேகலையைச் செய்த சீத்தலைச் சாத்தனாரும், வேறொன்றாகிய குண்டலகேசியை இயற்றிய நாதகுத்தனாரும் வணிக மரபினரே.

அரசருக்கு அமைச்சராய் அமைந்த வணிகர் பெருமான்.

செங்கற்பட்டுக்கு அருகிலுள்ள திருக்கச்சூ ரென்னும் ஸ்தலத்திலுள்ள சாஸனமொன்றில், சாத்த ஞர் வழி வந்த ஒருவரைப் பற்றிய செய்தி காணப்படு கிறது. அவருக்குப் பெருநம்பி யென்னும் பட்டம் உண்டென்றும் தெரிகிறது. பாண்டிய அரசனுக்கு மந்திரியாக இருந்த குலச்சிறை நாயனர் அப் பட்டம் உடையவர். தக்கயாகப் பரணி யென்னும் நூல் உரையில் பெருநம்பி யென்னும் பட்டம் அரசனுடைய மந்திரிகளுக்கும் அவர்களைப் போன்ற பெரிய அதி காரிகளுக்கும் வழங்கப் படுவதென்று தெரிகின்றது. ஆதலின், சாத்தனூர் வழிவந்த பெருநம்பி ஒரு பெரிய அதிகாரி யென்று கொள்ளலாம். அதனல் வணிக மரபினர் அரசர்களுக்கு மந்திரிகளாகவும் பெரிய அதி காரிகளாகவும் இருந்தமை பெறப்படும்.

வணிக மரபினில் வந்த நாயன்மார் ஐவர்.

பெரிய புராணத்திற் சொல்லப்படும் நாயன்மார் களில் இயற்பகையார், அமர்நீதியார், மூர்த்தியார், காரைக்கா லம்மையார், கலிக்கம்பர் என்னும் ஐவரும் வணிக மரபினர். இவருள் மூர்த்தி நாயனர் சிவபெரு மான் திருவருளால் அரசராக இருந்து ஆண்டு வந் தார். அச் செயலால் வணிகர் அரசுரிமையைப் பெறு வது முண்டென்று தோற்றுகின்றது. பதினோராந் திருமுறையிலுள்ள நூல்களை இயற்றிய பலருள் ஒரு வரும் பெருந் துறவினருமாகிய பட்டினத்தடிகளின் பெருமையை அறியாதார் யாவர்? அவர், வணிக மர

பிற் பிறந்து என்றும் குன்றுத பெரும் புகழை அம் மரபிற்கு உண்டாக்கினர்.

தனவணிகர் சீர்மையைச் சிலம்பு மணியிலே காண லாம்.

அருமைத் தமிழர்களே! பழந்தமிழ் நாட்டு வணி கர் நேர்மையும், சீர்மையும், இன்ன பிற பெருமைகளும் எத்தகைய பெற்றியதாய் நிலவிய தென்பதை இது போழ்து தெளிவாக அறியலாகுமன்றே? இன்னும் தனவணிக மரபின் சீரிய தன்மைகளையெல்லாம் செம் பொருள் மிக்க சிலப்பதிகார மணியில் ஒளிர்வதைக் காணலாகும். மன்னன் இமயவரம்பன் நெடுஞ் சேர லாதனின் இன்னுயிரனைய இளையமைந்தன் இளங்கோ அடிகளென்னும் கவியரசர், தமிழரசியின் பொன்முடி அணியாக அற்புதமான சிலப்பதிகாரச் செய்யுளை காவி யச் சுவையும், வீரச்சுவையும் விளங்க முத்தமிழ்த் தேனில் குழைத்து, இயற்றிப் போந்திருக்கிறார். இளங்கோ தந்த சிலம்புச் செல்வத்திலே பழந்தமிழ ரின் நாகரிகப் பண்பும் வணிக மரபின் வளமை செறிந்த மாண்பும் இனிதாக இலங்கித் தோன்றும் இயல்பினை இற்றை ஞான்றுள்ளார் உணரல் வேண்டும்.

பூம்புகார் நகரிலே தனவணிகர் சிறந்து வாழ்ந்தனர்.

வணிகர் பண்பினை வளமுற வுரைக்கும் சிலப்பதி காரக் கதையின் கதாநாயகர்கள் மாசற்ற கோவல னும், மாண்புடைக் கண்ணகியும் ஆவர். கண்ணி

னுள் அமைந்த கருமணி போன்ற கண்மணிக் காதல ராய இவ்விருவரும் வணிக மரபின் வழித்தோன்றிய வர்க ளென்பதைச் சரித்திர ஆராய்ச்சி மிக்கார் அறிந் திருப்பர். சிலப்பதிகாரக் காதைக்குப் பிறப்பிடம் பூம்புகார் என்னும் காவிரிப்பூம் பட்டினமாகும். பழங் காலத் தமிழகத்தில் காவிரிப்பூம் பட்டினம் சோழ னது செங்கோன்மை ஆட்சியில் அமைந்த தலைநகராய் விளங்கிச் சிறந்தது. காவிரி நாட்டிற்குத் தலைநகராய் அமைந்த பூம்புகார் (காவிரிப்பூம் பட்டினம்) புலவர் பாடும் புகழமைந்ததாய், பொன்னியாற்றின் வளத் தினைப் பெற்றதாய், நிலவளம், மலைவளம், குடிவளம் ஏனைய இயற்கை வளங்கள் யாவும் செறிந்து, எழிலெணி மிக்கதாய் இலங்கித் தோன்றிற்று. இத்தகைய இன்ப வளம் மலர்ந்து, இயற்கை நலம் செறிந்து, மாண்புற விளங்கிய இப் பூம்புகார் நகரிலேதான் தொன்மைத் தமிழகத்தின் பெருங்குடி மக்களாகிய தனவணிக மரபினர் கல்வி, கேள்வி, அறம், அன்பு, தொழில், வாணிபம், சீர், செல்வம் அனைத்திலும் சிறந்தோங்கி வாழ்ந்து வரலாயினர்.

சிலம்புச் செல்வம் இயற்றித் தந்த சுவாமி சுத்தானந்தர்.

என்னருமைத் தமிழர்களே! தனவணிகர் தன்மை பற்றிப் பேசுகின்ற இப்பொழுது சிலப்பதி காரத்தி லமைந்த சில சில கருத்தினையும் இயம்புதற் கான வாய்ப்பு நேர்ந்தமைக்கு மிக மகிழ்வெய்துகின் றேன். பழந்தமிழர் பெருமையினையும், தமிழரசர் செங் கோன்மைச் சிறப்பினையும், தமிழ் நாட்டுத் தனவணி

கர் நேர்மையின் உயர்வினையும், இன்ன பிற முற்கால நாகரிக நலங்களையும் அமுதத் தமிழிலே பாட்டுடைச் செய்யுளாகச் சித்தரித்துப் போந்த இளங்கோ அடிகளின் சிலப்பதிகாரக் காதைக்கு, அருட் பெரியார் சுவாமி சுத்தானந்த பாரதியார் அரிய பெரிய ஆராய்ச்சியுரை அருளியுள்ளார்கள். அவ்விழுமிய நூலின் பெயர் "சிலம்புச் செல்வம்" என்பது. சிலம்புச் செல்வத்திலே செறிந்து விளங்கும் அற்புதமான கருத்துகள் சொல்லழகும் பொருளழகும் ஒன்றி அருமணி வடம் போல் செப்பமுற்று,—அமுதத் தமிழ்த் தென்றல் பரவ இலக்கியத் தேன் பிலிற்றுகிறது. சுவாமிஜீ இயற்றித் தந்த சிலம்புச் செல்வம் சிந்தைக்கும் செவிக்கும் இன்பம் பயப்பதாய், நவில்தொறும் நயம் பெருகும் நூலாய் மிளிர்கின்றது. இவ்விழுமிய நூலினை அன்பு நிலயத்தார் அச்சகமேற்றி பைந்தமிழ் நாட்டவர் பயனுறுதற்காக வழங்கியுள்ளனர். இவ்வரிய சிலம்புச் செல்வத்திலே முன்னைய தனவணிகர் தன்மை புலனுதல் தெரியலாகும். செட்டியார் மரபின் சீர்மை நிறைந்த செயலுக்கு ஒரு சான்றாகவே சிலப்பதிகாரக் காதை தோன்றிற்றென்பதை நாம் மறத்தலாகாது.

பண்டைத் தமிழ்நாட்டுத் தனவணிக மரபின் மங்கல மனையற வாழ்வு எத்தகையனவாய் இருந்தன என்பதற்குப் பொற்பின் செல்வி கண்ணகியின் திருமண முறையே போதிய சான்றாக நிலவுகின்றது. 'சிலம்புச் செல்வ'த்தில் மிளிரும் கற்புத்தேவி கண்ணகியாரின் திருமணப் பகுதியை ஈண்டு இயம்புதல் மிக மிகச் சாலும்.

"காவிரிப்பூம் பட்டினம் வணிகர் செழித்த யாகக ராகும். பரதர், கடலோடிகள், மன்னர் பின்னவர், இளங்கோக்கள், தருமக்கிழவர், ஆள்காவலர், உழவர், வணிகர், முத்தொழிலாளர், செட்டியார், சிரேட்டிகள் என்று வைசியர் பெயர் பெறுவர். இவர், கலத்திலும் காலிலும் (கால் = வண்டி) பெரும் பொருளீட்டுவர். இவர், புகழ் சிறந்த அரசனும் விரும்பும் திருவினர். இவர் வாணிபத்தை வளர்க்கப் பரதேச வர்த்தகர் பலர் புகாரில் வந்து ஈண்டியிருந்தனர். இதனை,

"நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்*கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும், பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்தும், குணகடல் †துகிரும்
கங்கை ‡வாரியும், காவிரிப் பயனும்
ஈழத் துணவும், §காழகத் தாக்கமும்,
அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி"

எனவரும் பட்டினப்பாலைச் செய்யுளிற் காண்க.

"கொள்வதும் மிகைகொளாது, கொடுப்பதும் குறை கொடாது, பல்பண்டம் பகர்ந்து வீசுவர்" இவ்வூர் வணிகர். இவர்களால், இவ்வூர், ஆர்கலியுலகம் அனைத்தும் வந்தாலும் வேண்டிய அரும்பொருளை வழங்கத்தக்க வளஞ் சிறந்தது. இவ்வூரைப் போக பூமிபோல இன்புறச் செய்தவர் இரண்டு தனவணிகர்: ஒருவன் பெயர் மாநாய்கன்; மற்றொருவன்

---

* கறி = மிளகு. † துகிர் = பவளம்.
‡ வாரி = பொருள். § காழகம் = பர்மா.

பெயர் மாசாத்துவான். "நாய்கன்" என்றால் செட்டியார். 'மாநாய்கன்' என்றால் பெரிய செட்டியார். "சாத்து" என்றால் வணிகக்கூட்டம். 'மாசாத்துவான்' என்றால் வணிகர் கூட்டத் தலைவன். இருவரும் அரசன் அன்பை நிறைவாகப் பெற்றவர். பொருளை ஏராளமாக ஈட்டி ஏராளமாக ஈந்து, குபேரனும் கர்ணனும் ஒருங்கே சேர்ந்ததுபோல இவர் வாழ்ந்தனர்.

மாநாய்கன் 'ஈகையில் வான்மேகம்' எனப் புகழ் பெற்றவன். அவனது குலக்கொம்பே நமது கதாநாயகியான கண்ணகி. பன்னிரண்டு வயதுள்ள கண்ணகி, பொன்னொளிர் மின்னலைப் போலப் பொலிவுற்றிருந்தாள். மலர்மகள் போன்ற சிறந்த வடிவழகி கண்ணகி. 'மாசற்ற அருந்ததி—கற்பை யொத்தது இவளது கற்புத் திறம்' என்று பிறமாதர் தொழுதேத்தும்—பெருங்குணச் செல்வி கண்ணகி.

"போதிலார் திருவினாள் புகழுடை வடிவென்றும்
தீதிலா *வடமீன் திறமிவள் திறமென்றும்,
மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங்குணத்துக்
காதலாள்; பெயர் மன்னும் கண்ணகி யென்பாள் மாதோ"

மாசாத்துவான் பெருநில முழுதும் ஆளும், திருமாவளவனைத் தலைமையாக வைத்துப் போற்றும் ஒப்பற்ற குடிகளுடன் உயர்ந்தோங்கும் செல்வச் சீமானாயிருந்தான். கப்பல் வாணிபத்தாலும், தரை வாணிபத்தாலும், அவன் பெருநிதி யீட்டினான். அதைக் கொண்டு இல்லாதார்க்கு நல்லுதவி செய்தான், இத் தருமவான்.

* அருந்ததி.

இவ்வாறு ஈட்டலும் ஈதலுமே தனது அறமாகக் கொண்ட இந்த இருநிதிக் கிழவன் மகனே நமது கதா நாயகனான, பதினாறு வயதுள்ள †கோவலன். கோவலன், அறிவு, அழகு, தொழில், செல்வம் அனைத்திலும் சிறந்து, உலகமும் சிறிதெனு ஓங்கும் புகழ் பெற்றான். பண்ணினும் இனிய தீஞ்சொற் பாவையர், இவனைக் கண்டு வியந்து, 'இவ்வழகனே செவ்வேள்' என்று தமது ஆயத்திற் பாராட்டிப் போற்றுவர். (ஆயம் = தோழியர் கூட்டம்.)

"மண் தேய்த்த புகழினான், மதிமுக மடவார் தம்
பண் தேய்த்த மொழியினார் ஆயத்துப் பாராட்டிக்
'கண்டேத்துஞ் செவ்வேள்' என்று, இசை போக்கிக் [காதலாற்
கொண்டேத்துங் கிழமையான் கோவல னென்பான் மாதோ"

இத்தகைய இனிய தன்மையும், தகைமையும் பெற்ற கோவலனைக் கண்டு கண்ணகி காதலித்தாள். இருவர் கண்ணும் கருத்தும் கூடின. பெருங்குணக் காதலியாகிய கண்ணகி, செவ்வேள் போன்ற கோவலனை மனத்துட் கொண்டேத்தினள். இருவர் காதலையும் பெற்றோர் அறிந்தனர். இரு தனவணிகப் பெரியாரும் ஒரு நன்னாளைக் குறித்து, அன்று, தமது அருமை மக்களது திருமணக் காட்சியைக் காண விரும்பினர்.

முரசுகள் இயம்பின; முருடுகள் (மத்தளங்கள்) அதிர்ந்தன; சங்குகள் முழங்கின; அரசன் பவனியெழுந்ததுபோல வெண்குடைகள் எழுந்தன; பெண்

† கோவலன் = கோபாலன்.

கள் யானைமேல் ஏறி ஊரில் உள்ளவருக்குத் திருமணச் செய்தியை அறிவித்தனர். ஊரில் *மங்கல அணி யெழுந்தது.

மாலை தாங்கிய வைரமணித்தூண் மண்டபத்தில், நீல விதானங் கட்டிய அழகான முத்துப் பந்தலின் கீழ், வதுவரர் அமர்ந்தனர். அப்போது, சந்திரன் ரோகிணியைச் சேருந் தருணம். அதாவது, ரோகிணி நட்சத்திரம். அனுபவத்தில் முதிர்ந்த அந்தணர் வேத வழிகாட்டிச் சடங்கை நடத்தினர். அருந்ததி போன்ற கற்பரசியான கண்ணகியும், கோவலனும் தீயை வலஞ் செய்த காட்சியைக் கண்டவர் முற்பவத்தில் என்ன நோன்பாற்றினரோ! திருமணங் காண வந்தோர் வாசமும், மலரும் கொண்ட மேனியராய், தம்பதிகளை ஒசிந்து நோக்கி, புகழ்ந்துரைத்து, மங்கலம் பாடினர். முகிழ்த்த முறுவலும், ஏந்திளமுலையும், விரிமலர்க் கூந்தலும் கொண்ட மலர்க்கொடி போன்ற அழகிய மாதர், சாந்து, நறும்புகை மாலை, சுண்ணம், விளக்கு, நன்கலம், முளை கிளம்பிய பாலிகை, நிறை குடம் ஆகிய மங்கலங்களை யேந்தி

* மாங்கல்ய சூத்திரம் யானைமேல் ஏற்றி ஊர்வலஞ் செய்யப் பெற்றது என்பார் அரும்பத வுரையார். "மங்கல அணி யெழுந்தது" என்றால் 'ஊரெங்கும் மங்கல விழா அணி யெழுந்தது' என்பார் அடியார்க்கு நல்லார். இதைக் கொண்டு சிலப்பதிகாரக் காலத்தில் தமிழர் திருமணத்தில் தாலிகட்டும் வழக்கமில்லை யென்று கொள்வாருமுண்டு. திருமணச் சடங்கு கூறுமிடத்திலாயினும், பிற்காலம், மதுரையை எரியூட்டி வளையை உடைத் தெறிந்து கண்ணகி செல்லும் போதாயினும், தாலியைப்பற்றியே பேச்சில்லை யாதலால் மேற்சொன்ன உண்மை கொள்ளத் தக்கது என்பர்.

னர். "மணமகள் கண்ணகி, தனது காவலனை எக்காலும் பிரியாமல், கைநெகிழாமல் கூடிவாழ்க! தீதுஅக! நலம் பொங்குக!" என்று வாழ்த் தெடுத்துச் சில மலர்களைத் தூவினர்; பிறகு உலகிற்கு அருந்ததி போன்ற கற்புடைய கண்ணகியைக் கணவனுடன் மங்கல நல்ல மனை யேற்றினர்.

முற்காலத் தனவணிகர் காதல் மணங் கண்டனர்.

கண்ணகியும், கோவலனும் அறம் பொருளின்பம் நிறைந்த இல்லறம் நடாத்தினர். 'காதற் கொழுநனை கோவலன் தடமலர்க் கண்ணியான கண்ணகியுடன் இல்லறத்தில் அன்றிலைப்போலக் கூடி வாழ்ந்தான்'—என்பதாக மிகப் பழைய காலத் தனவணிகர் தன்மையை—அம் மரபார் திருமணச் சிறப்பியல்புகளைக் கருத்தழகு நிரம்பச் 'சிலம்புச் செல்வத்'திலே சிறப்பிக்கப் பெற்றிருக்கிறது. இதினின்றும், இற்றை ஞான்றுள்ள தனவணிகர் இன்றியமையாத கடமையென அறிந்துணர வேண்டுவது யாது? சங்க காலத்திலே தனவணிக மரபினர் காதல் மணவினையே நிகழ்த்தி வந்தன ரென்பது மிக நன்றாகப் புலனாகின்ற தன்றோ? கண்ணகி—கோவலன் இவ்விரு காதலரின் திருமணக் காட்சியில் நிகழ்ந்த நிகழ்ச்சியை நினைந்து பார்த்தாலே என்போன்றார் இதயத்தில் மகிழ்ச்சி மலருகிறது; காதலுணர்வு தளிர்விட்டு அரும்புகிறது. இன்று காதல் மண வாழ்வினைப் பெறுதற்காக ஏங்கி நிற்கும் தனவணிக இளைஞரெல்லாம் ஏன் சிலப்பதிகாரக் காலத்திலே பிறந்து, கருத்தொத்த காதற் செல்

வியைக் காணுதிருந்தனரென்று கற்பனு சக்தி நீனே விட்டுக் கொண்டு செல்கிறது.

வள்ளுவரும் வாசுகியும் போல வணிக மரபினர் வாழ்ந்தனர்.

தோழர்களே! ஈண்டு இந்தப் பேச்சோடு தனவணிகர் திருமணம் குறித்துச் சில செய்தி சொல்லுதல் நலமென் றெண்ணுகிறேன். பண்டைத் தமிழகத்திலே வாழ்ந்துற்ற தனவணிகர், இல்வாழ்வுத்துறையினும் இயல்பாக முகிழும் காதலைப் போற்றி, அவ்வழி கருத்தொத்த காதலர்கட்கு மணம் நிகழ்த்தி வந்த பண்பை இக் காலத் தனவணிகர் சிந்தித்துத் தெளிதல் மிகவும் இன்றியமையாததாகும்.

"அன்பு மறனு முடைத்தாயின் இல்வாழ்க்கை,
பண்பும் பயனு மது"

என்று திருவள்ளுவ நாயனர் புகன்று போந்த வண்ணம் முற்காலத் தனவணிகர் அன்பும் அறமும் சேர்ந்த நல்வாழ்வில் வள்ளுவரும் - வாசுகியும் போல, இல்லறப் பண்பில் நனி சிறந்து நல்லறங் காத்தனர்; காதல் நலம் பேணினர்; இனிய இல்லற இன்பம் துய்த்தனர், வீடுபேற்றை அடைந்தனர்.

முற்காலப் பெற்ருேர் மக்கள் மனமறிந்து மணமுடிக்கலாயினர்.

திருமண வாழ்வு நலம் பெற்ருேளிர்வதற்குப் பெண் - ஆண் இருவர் இதயத்திலும் காதலுணர்வு பூரணம் பெறல் வேண்டும்; இருவர் மனமும், காத

லால் கலந்து குழைந்து ஒன்றுதல் வேண்டும். இத் தகைய பூரணமான உண்மைக் காதலால் மனமொன்றி, கண் கவர்ந்து, கருத்தைப் பிணைத்து, இருவரும் ஒருவ ராகி, ஆருயிர்க் கலப்புடன் காதற் புனலாட விரும் பும் காதலரைப் பெற்றோர் குறிப்பறிந்து திருமணம் செய்வித்தலே சீரிய கடமையாகும். இக் கடமையை முற்காலத்திலிருந்த அறிவு சான்ற முதியோராகிய பெற்றோர், உற்றோர் நன்கு உணர்ந்து செயலாற்றி வந் தனரெனச் சில பழஞ் சான்றுகளால்—பழந்தமிழர் காலச் சரித்திர நிகழ்ச்சிகளால் தெரியப் பெறுகிற தன்றோ! சங்க காலத்தில் வாழ்ந்து வந்த தனவணிக மரபினர் வாழ்வாங்கு வாழும் வகையறிந்து, இல் வாழ்வை இயல்பான காதல் மண வழியே இயக்கிச் சிறந்தனர். தனவணிக மணிகளான கண்ணகியும் கோவலனும் காதற் கனவில் தோன்றி, காதலுறவு வழி இல்வாழ்வுற எண்ணின ரென்றும், அஃதறிந்த அவர் தம் பெற்றோர், மக்கள் காதலின் மாண்புணர்ந்து, மனமகிழ்ந்து மணமுடிக்கலாயின ரென்றும் சிலப் பதிகாரக் காதையால் அறியலாகும்.

கண்ணகியார் திருமணப் பண்பு.

முற்காலத் தமிழகத்தில் தமிழரெல்லாம் எவரானை யாரின் எவ்விதமான வற்புறுத்தலுக்கும் இலக்காகாது சுயேச்சையாகக் காதல் சுதந்தரம் பெற்று, காதல் உணர்வு படர்ந்து இன்பம் எய்தினர் என்பதற்குக் கோவலன், காதற் செல்வி கண்ணகியாரை விளித்து, காதலுரை பகர்வதே நல்ல சான்றெனை அறியலாகும். கற்பின் செல்வி கண்ணகியின் பாற் உயிரனைய காதலை

உரிமையாக்கிய கோவலன், காதலியின் திருமுகத்தை நோக்கி, புன்னகை அரும்ப, நலம் பாராட்டுரைகளை நவிலுகின்றான் :

" தாழ்ந்தடர்ந்த கூந்தலையுடைய தையலே ! தூய பொன்னிறப் பாவாய், முத்தனைய மூரலாய், குற்ற மற்ற நறுமண வுயிர்ப்பினை, கரும்பனைய இனிமை யாய், தேனனைய இன் சொல்லாய், பெறற்கரிய பாவையே, என் ஆருயிர்க்கு மருந்தே, பெரிய தன வணிகக் குடிச் செம்மலான மாநாய்கன் பெருமை விளங்க வந்த அழகிளம் பெண்ணே ! உன்னை என் னென்றிசைப்பேன் ? மலை பெறுதற்கரிய மணியே என்பேனா ! பாற்கடல் பெறவொண்ணாத அமுதே என் பேனா ! யாழிற் பிறத்தற்கரிய இசை யின்பமே என்பேனா !

" மாசறு பொன்னே, வலம்புரி முத்தே,
காசறு விரையே, கரும்பே, தேனே,
அரும்பெறற் பாவாய், ஆருயிர் மருந்தே,
பெருங்குடி வாணிபன் பெருமட மகளே,
மலையிடைப் பிறவா மணியே யென்கோ !
அலையிடைப் பிறவா அமிழ்தே யென்கோ !
யாழிடைப் பிறவா இசையே யென்கோ !
தாழிருங் கூந்தல் தையால் நின்னை......... ! "

இவ்வாறு இடைவிடாமல் இன்னுரை கூறி, நலம் பாராட்டினன் கோவலன். நமது பழந்தமிழர் பெண் ணைப் பெருமைப்படுத்திய வகை இதனால் இனிது விளங்கும். இந்நூலைப் படிக்கும் ஒவ்வொருவரும், தமது மனைவியை இவ்வாறு நேசித்து இனிமை கூற

வேண்டும்" என்று 'சிலம்புச் செல்வ'த்திலே சொல்லப் பெற்றிருக்கிறது.

காதற்கலையின் தத்துவத்தைத் தனவணிகர் உணர்ந்தனர்.

நண்பர்களே! இதனால் நமக்கு விளங்குவதென்ன? பண்டைத் தமிழக மரபினரான தனவணிகரும் காதல் வாழ்வின் தன்மை யறிந்து, காதற்கலையின் தத்துவ முணர்ந்து, மலரும், மணமும், விளக்கும், சுடரும் போன்று ஒருமையில் உயிரொன்றும் அன்புடையாரை மங்கல மனையறம் நலம்பெற இல்லறங் காத்து, இன்பப் பேறெய்துதற்கு இணைத்து வைத்தனரென்றே சொல்லலாகும் சக்தி வடிவங்களான பெண் தெய்வங்களின் பெற்றி யறிந்த பழந்தமிழர், (தனவணிகரும்) அவர்கட்குப் பெரிதும் உரிமை ஈந்து, அன்பும், அறமும், அருளும் பொருந்திய சிவ—சக்தி வாழ்வினமைப்பில் செழித்திருக்கச் செய்தன ரென்பது (பழந்தமிழர் சரித்திரச் சான்றால்) இனிது தெரியலாகும். முன்னைய நாளில் வாழ்வாங்கு வாழும் வகையறிந்து வணிக மரபினர் சிறந்து திலகியதுபோல, இற்றை நாளிலும் இல்லறக் கற்பகம் இனிது வளர்ந்து, பசுமை பொலிந்து, அன்பு அரும்பி, காதல் மலர்ந்து, உள்ளக் கலப்பில் உயிர்க்கனி பழுத்து, உலகம் செழிக்க— உயிர்க் குலம் ஓங்க வாழ்வின்பம் சுவைத்து,

> 'குலமோங்குஞ் சக்திக் கொழுந்தோங்குங் காதல்
> நலமோங்க நாடோங்கு நாள்'

என்றவாறு காதல் நலம் மிளிர்ந்து, கருத்தொத்த காதல

ராக மாசற்று வாழவேண்டுவதே தனவணிக மரபின் வாழ்க்கை இலட்சியமாகும்.

பழமைநாளில் பாங்குற வாழ்ந்த பண்புள்ள தன வணிகர்.

புதுயுகத் தமிழர்களே! தனவணிகரைப் பற்றிய பழைய தன்மைகளையும் சிறப்புகளையும் இதுவரை ஈண்டு இயம்பப் பெற்றேன். இனி, இக்காலத் தன வணிகர் தன்மையைச் சொல்லுதல் எனது கடமை யாகும். பழந்தமிழ் நாட்டில் பாங்குற வாழ்ந்த தன வணிக மரபினர் இதுகால் எந்நிலை யுற்றிருக்கின்றார்? பழமையே பேசிப் பொழுதைப் போக்கும் சிலர் பழமை நெறிவழி வாழ்கின்றார்களா? தமிழக மரபிலே தகவுற வாழ்ந்து வந்த தனவணிக சமூகத்தில் இடைக் காலத்தில் தோன்றியவர்கள் இயல்புமாறி இன்ன லுற்று, பழமைப் பண்பிழந்து, அயலூக் கடியாராய் ஆனதை நினைப்பின் என்னனைய இளைஞருள்ளம் எல்லை யில்லா வருத்த முறுகின்றது. கடைச் சங்க காலத் திற்குப் பின்னர் படிப்படியாகத் தனவணிகரின் வாழ்வு பழமை நெறியில் செல்லவில்லை யென்றே நான் நினைக்கின்றேன். எனவே, இடைக் காலத்தில் தன வணிகர் எத்தன்மையராய் இருந்து போந்தனர் என் பதை குறித்து இதுபோழ்து இந்த வாழ்நெறி நிலயத்தி லிருந்து விரிவு செய்ய வேண்டுவதில்லை. இந்த இரு பதாம் நூற்றாண்டில் வாழுகின்ற தற்போதைய தன வணிகர் தன்மையைச் சாற்றலே நிரம்பவும் சாலும்.

தமிழ்வீறு பெற்ற தற்காலத் தனவணிகர்.

இற்றைய தனவணிக மரபு புதுயுக மலர்ச்சியில் நவயுகங் காண விரைந்து நிற்கின்றது; புதுமை யுலகிற் பெருமையுறப் பேரார்வ முறுகிறது. தமிழ்வீறு பெற்ற தனவணிக மரபினர் பழம் பெருமை யுணர்ந்து மீண்டும் சுதந்தர வாழ்வுறத் தலைநிமிர்ந்து வருகின்றனர். காலத்திற்கு வேண்டாத பழக்கங்களையும், முன்னேற்றத்திற்கு முரணான மூடக் கொள்கைகளையும் தனவணிக வாலிப வீரர்களானப் புதுயுக இளைஞர்கள் தகைத்தெறிய முற்பட்டிருக்கின்றனர். ஒரு சில அர்த்தமில்லாக் கொள்கையில் பற்றுடையாரும் படிப்படியாகச் சீர்திருத்த உணர்வு பெற்று வருகின்றனர். செல்வர் சிலரின் இல்லத்திலே அர்த்தமற்ற சடங்குகளுக்காக வரையரை யின்றிப் பணம் செலவுசெய்யப்படுகிறது. பணச் செழுமை யுள்ளாரும் இல்லாரும் திருமண விஷயத்தில் தேவையற்ற செலவுசெய்து, சிக்கலின்றி நடக்கின்றனர்கள். இவைகளெல்லாம் இக்கால நிலைமைக் குதவாத செயல்களாகும். எனவே, எதிர்காலப் புதுயுகத்தில் இந்த மாசுபடிந்த மனப்போக்கெல்லாம் மாறி, வீண் ஆடம்பரம் குறைந்து, பொதுநல தர்மத்திற்கே செல்வர் செலவு செய்தல் வேண்டுமென்னும் நியதி ஏற்படுதல் நன்று.

பலகலைமிக்கார் பலரும் உள்ளனர்.

இப்போதைய இந்த தனவணிக சமூகத்தில் பலகலை பயின்றாரும், பல தொழில் மிக்காரும் இருக்கின்றார் என்ற செய்தியை எவரும் அறியலாகும். தற்

போதைய தனவணிக மரபினிலே புலவர்மணிகள் உள்ளனர்; பன்மொழிப் புலவர் உள்ளனர்; பண்டித மணியார் உள்ளனர்; அரியஞானிகள், ஆராய்ச்சியாளர்கள் உள்ளனர். இனிய கவிகள், இயற் புலமையாளர்கள் உள்ளனர்; திறமை செறிந்த எழுத்தாளர், சொற்பெருக்காளர், பத்திராதிபர் உள்ளனர்; நாவலரும், பாவலரும் உள்ளனர்; நல்ல போதுநல ஊழியரும் உள்ளனர். உடலுறுதியாளர் (Sandow) பலர் உள்ளனர். நாடகத் தமிழை நயமுற வளர்க்கும் நடிகர்கள் உள்ளனர். தியாகக் கனல் வளர்க்கும் தேசியப் பற்றுடையார் உள்ளனர். வழக்கறிஞராய்ச் சிலர் வாழ்கிறார்; பட்டதாரியாய்ப் பலர் திகழ்கிறார். விண்ணூர்தி (Aeroplane) விமானியாக ஒரு தோழர் இருக்கிறார்; சீர்திருத்தப் புரட்சியுடையாரும், சமதர்மநெறி மிக்காரும் வேறு பல கொள்கை சான்றோரும் பலப் பலர் உள்ளனர்.

தேசபக்தி மிக்க செட்டிமார் நாடு.

அரசியல் துறையில் தற்காலத் தனவணிகர் பெரிதும் ஈடுபட்டிருத்தல் வெள்ளிடைமலை. தேசநலம் காக்கும் காங்கிரஸ் மகா சபைக்குத் தனவணிக வாலிப வீரர்கள் பேராதரவு அளித்துவருகின்றனர். தென்னிந்திய காங்கிரஸ் காரியக் கூட்டத்தார் அரசினர் பதவியை ஏற்பதற்குரிய (In the election to the Madras Legislature) அங்கத்தவர் தேர்தலில் தனவணிகர் நாடு முதன்மையான வெற்றியை யளித்தது. செட்டிமார் நாடு போந்த தேசத் தலைவர்களெல்லாம்

தனவணிகர் தேசபக்தி கண்டு பாராட்டுரை பகர்ந்திருக்கின்றனர்.

சென்னைநகரின் முதன் மேயரான தனவணிகச் செல்வர்.

தனவணிகர்கள் அரசியலார் அளிக்கின்ற பதவிகளிலும் அமர்ந்து, திறமை செறிந்த நிர்வாகம் செய்திருத்தலைத் தமிழ் நாட்டார் அறிவர். முன்னையகாலத் தனவணிக மரபினர் அரசர்களுக்கு அமைச்சர்களாகவும், அதிகாரிகளாகவும் இருந்தமைபோல, இப்போதைய அரசியலில் வாய்ப்பு நேரவில்லை யெனினும் இயன்ற அளவு அதிகாரத்துவத்தைத் தனவணிகர் பெற்றே வருகின்றனர். சென்னைமா நகரின் முதன் மேயராகவும் (The first Mayor of the Madras Corporation) சென்னை மாகாண மந்திரிகளில் ஒருவராகவும் (One of the Ministers of the Madras Presidency) குமாரராஜா முத்தையாச் செட்டியார் தேர்ந்தெடுக்கப் பெற்றிருந்ததை யாவரும் அறிவர். தற்போது திருவாளர் M. சுப்பையாச் செட்டியார், கொழும்புமா நகர் நகரசபையின் உப மேயராக (The Deputy-Mayor of the Corporation of Colombo) அங்கம் பெற்றுள்ளார் என்பதையும் அனைவரும் அறிந்திருப்பர்.

எல்லா உரிமைகளும் இருபாலார்க்கும் உண்டு.

தனவணிக மரபு ஆண்பாலாரைப் போலவே பெண்பாலாரும் சரிநிகர் சமானமாக உரிமை பெற்றுப் பெருமையடைந்து வருகின்றனர். ஆணும் பெண்ணும்

நிகரெனக் கொள்ளும் தன்மையை இன்றுள்ள இளந் தமிழரெல்லாம் உணர்ந்து, எல்லா உரிமைகளும் இரு பாலார்க்கும் உண்டு என்பதை யாண்டும் சொல்லி அறிவுறுத்தி வருகின்றார்கள். மகாகவி பாரதியார் பகர்வதுபோல,

> "பட்டங்க ளாள்வதுஞ் சட்டங்கள் செய்வதும்
> பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்
> எட்டு மறிவினி லாணுக்கிங்கே பெண்
> இளைப் பில்லை காணென்று கும்மியடி."

என்று, தனவணிகப் பெண் தெய்வங்க ளெல்லாம் உரிமை வேண்டிக் கும்மி முழக்குகின்றார்கள். தனவணிக, சகோதரிகள் சிலர் அரசியலார் அளிக்கும் கௌரவ பதவிகளையும், தேர்தல் பதவிகளையும் பெற்றுப் பெருமை எய்துகிறார்கள். இச் சமூகப் பெண் மணிகளைக் குறித்து ஈண்டு சொல்ல வேண்டுமென நினைத்தபோது, சகோதரியார் திருமதி திருநெல்லை தண்ணீர்மலையின் பொதுநல ஆர்வம் நினைவுக்கு வருகின்றது. திருமதி திருநெல்லை ஆய்ச்சியர்க்கு அரசினர் அளித்த கௌரவ நீதிபதி (Honorary Magistrate) பதவியின் உயர்விலிருந்தே அச் சகோதரியார் பெருமை தெரியவரும். தனவணிகப் பெண்களிலே பலர் வெளிநாடு போந்துள்ள தங்கள் கணவருடன், உடனுறைந்து, காதல் வாழ்வுப் பேற்றைப் பெற்று வருகிறார்கள். இவ்வாறு நாடு சுற்றிப் பார்க்கும் நல்ல ஆர்வத்தை இளம் பெண்கட்கெல்லாம் உண்டாக்கி, செயலில் காட்டிய திறமை, நமது ராஜா ஸர் அண்ணாமலை செட்டியார் அவர்களின் அருமை

மனைவி, திருமதி சீதை ஆய்ச்சியர்க்கே உரியதா யமைந்திருக்கிறது. திருமதி சீதை ஆய்ச்சி ராஜா ஸர் அவர்களுடன் மேல்நாடு சென்று, சுற்றுப் பிரயாணம் செய்துவந்த செய்தி யாவர்க்கும் தெரியலாமென்றே நினைக்கின்றேன்.

நாயகனைத் தேர்ந்தெடுப்பது நங்கைமார் பொறுப் பன்றோ ?

தற்காலத் தனவணிக மரபிலுள்ள இளம் மகளி ரெல்லாம் அறியாமை இருளை அகற்றி, அறிவுச் சுடர் பரப்பும் திருவிளக்குகளாகத் திகழக் கலைமகளார் கல்லூரியை நாடுகின்றார்கள். இதுபொழுது தனவணிகர் நாட்டிலே பெண்பாலார் அனைவரும் கல்வி யறிவு பெற்றாக வேண்டுமென்ற உணர்ச்சி முகிழ்ந்து வருகிறது. 'எட்டையும் பெண்கள் தொடுவது தீமை யென்றெண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டார்' என்னும் உண்மையை இப்போது எங்கும் எவருங் காணலாகும். எதிர்காலத் தமிழகத்திலே, தனவணிகப் பெண்களெல்லாம், கவியரசி சரோஜனி தேவிகளாகவும், கற்புத் தேவி கண்ணகிச் செல்விகளாகவும், தேசியச் செல்வி இந்திராநேருகளாகவும் கல்வியிற் சிறந்து, கற்பில் மிளிர்ந்து, தேசபற்றில் சிறந்து விளங்குவர் என்பதில் ஐயமில்லை. ஆயினும் தற்கால ஆணுலகுக்கு அடியேன் சொல்ல வேண்டுவதும் ஒன்றுண்டு. தெய்வ வடிவாகத் திகழுகின்ற தன்மை பெற்ற பெண் தெய்வங்களைச் சிறுமைப்படுத்திய கொடுமையினாலேயே நாடு நலமிழந்து அவதியுறுகின்றது. தமிழர் சமுதாயமும் தமக்கியல்பான பெருமை குன்றிச்

சிறுமைப்படுகின்றது. ஆகவே, தமிழர்களே! தன வணிகர்களே! அன்புக்கு நிலைக்களனாக நிலவும் பெண் மையின் பெற்றியை நினையுங்கள்; நினைந்து சக்தி தேவி களின் ஆற்றலை உணருங்கள். புலவர் மணி பாரதி யார் புகன்று போந்ததுபோல,

> " காத லொருவனைக் கைப்பிடித்தே யவன்
> காரியம் யாவினுங் கை கொடுத்து
> மாதர றங்கள் பழமையைக் காட்டிலும்
> மாட்சி பெறச் செய்து வாழ்வமடி "

என்று மங்கையர்க்குரிய மாண்புகளைப் பெற்று, அறி வுச் செல்விகளாக அமையச் செய்யுங்கள். வருங் காலப் புதுயுகத் தமிழகத்தில் தனவணிகப் பெண் பாலார் மூத்த பொய்மைகள் யாதுக்கும் அஞ்சாது, புதுமை உணர்வுடன் வீரப் பெண்களாக வெளிவர வேண்டும். மகளிரை ஈன்ற பெற்றோர்களே! தங் கள் இயல்புக் கேற்ற வாழ்க்கைத் துணைவரைத் தேர்ந் தெடுக்கும் உரிமையை அவர்கட்கு அளியுங்கள். இனிய இல்லறத்தை இன்புற நடாத்துதல் நங்கைமார் பொறுப்பன்றோ? கண்ணும் கருத்தும் ஒன்றி, அன் பில் விளையும் இணையில்லாக் காதற் கற்பகத்தை இத யத்தில் ஊன்றி அன்பு நீர் வார்த்தலும், அதனால் மல ரும் இல்லற விருக்ஷத்தை இனிது வளர்த்துச் செழிக் கச் செய்ய வேண்டுவதும் பெண்மணிகளின் பெருங் கடமையே யன்றோ?

தனவணிக மகளிரெல்லாம் தமிழம்மைக ளாகட்டும்.

தகைமிகு தமிழர்களே! பெண்ணினம் முற் போக்குக் குரியதான சில கருத்துகளைத் தனவணிக

மரபினர்கட்குச் சொல்லுகின்றேன். தற்போதைய தமிழ் நாட்டிலே பெண்ணினத்தார் பெரிதும் முன்னேற்ற மடைந்து வருகின்றார்கள்; நாகரிக நலத்தில் வளம் பெறுகிறார்கள். தனவணிகப் பெண்களும் ஏனைய நாட்டு மகளிரைப் போல் எல்லாத் துறையிலும் ஏமுற வேண்டுவது இன்றியமையாததாகும். முற்காலத் தமிழம்மைகளான—சந்திரவதியின் உறுதியையும், சீதையின் குணத்தையும், சாவித்திரியின் கற்பையும், தமயந்தியின் அறிவையும், ஆதிரையார் ஆசிலாச் சிறப்பையும், கண்ணகியின் வீரத்தையும், மணிமேகலையின் ஒழுக்கத்தையும், மங்கையர்க் கரசியார் மனதிடப்பத்தையும், காரைக்காலம்மையின் கடவுளன்பையும், திலகவதியார் சிவநெறி உயர்வினையும் இந்நாளிலுள்ள பைந்தமிழ்ச் செல்விகள், தனவணிக மகளிர்கள் ஏன் அடையலாகாது?

பெண்கள் பெருமையுற்றால் நாடு நலமடையும்.

தமிழர்களே! பெண்ணினம் பெருமையும் உரிமையும் பெற ஆணினம் என் செய்தல் வேண்டும். இந்தக் கடமையை நான் சொல்ல முன்வரவில்லை. பாரத நாட்டின் பண்பை உலகுக்கு உணர்த்திப் போந்த, சுவாமி விவேகானந்தர் சொல்லுகிறார்: "உங்கள் பெண்மக்களின் நிலைமையை உங்களால் உயர்த்த முடியுமா? முடியுமென்றால், வருங்காலத்தில் நீங்கள் க்ஷேம மடைவீர்களென்று நம்புதற் கிடமுண்டு. இன்றேல் இப்போதுள்ள கீழ் நிலையிலேயே இருக்க வேண்டியதுதான்."

பெண்ணினத்தின் பெற்றியை விவேகானந்தர் விளம்பு கிறார்.

தனவணிகர்களே! சிந்தியுங்கள்; சுவாமிஜீ விவே கானந்தர் விளம்பிப் போந்த இப் பொன்மொழியின் கருத்தினை உணருங்கள். 'உங்கள் பெண்மக் களுக்குக் கல்வி யளியுங்கள்; பின்னர் அவர்கள் போக்கில் விட்டு விடுங்கள். தங்களுக்கு என்னென்ன சீர்திருத்தங்கள் வேண்டுமென்று அவர்களே சொல் வார்கள். அவர்களைப் பொறுத்த விஷயங்களில் தீர்ப் புச் சொல்ல உங்களுக்கென்ன அதிகாரம்?' என்று சுவாமிஜீ உங்கள் போன்றுரை நோக்கிக் கேட்கிறார். கால மாறுபாட்டை உணர்ந்து, உலக முன்னேற்றத் திற் கியைந்தாற் போல திருந்தி செப்பமுற வேண்டு மென்று மட்டும் தனவணிகர்கட்கு நான் நவிலுகின் றேன். நேயர்களே! தனவணிக மரபு மங்கையர்க ளெல்லாம் பெண் தெய்வங்களாகவும், அறிவுச் செல்வி களாகவும், அழகு நங்கைகளாகவும், சுதந்தர தேவிக ளாகவும் இலங்குதல் வேண்டுமென்னும் ஆசை கொண்டு இவ்வளவு தூரம் இங்கு சொல்ல நேர்ந்தது. இனி, தனவணிகர் தன்மையின் தொடர்பான பேச் சுரையைக் கேளுங்கள்.

வணிகர் செய்த வர்த்தகத்தால் தமிழ்நாடு தழைத் தோங்கியது.

வானொலி நேயர்களே! முற்காலத் தனவணிகர் திருமண முறையையும், காதல் வாழ்விலே இகழ்ந்து நலம்பெற்ற இயல்பையும், இக்காலத்தவரும் பழமை

யின் பண்புணர்ந்து காதல் திருமணம் ஆற்றவேண்டிய கடமையையும் இதுகாறும் ஈண்டு சொன்னேன். தற்காலத் தனவணிகர் தன்மையை விளக்கியும், பெண்பாலார் பெற்றியைத் துலக்கியும், முன்னேற்ற வகையினை வகுத்தும், ஒல்லும் வகையில் உங்கள் முன்பு பேசினேன். இனி, பழங்காலத்தில் தனவணிகர் வர்த்தகத் துறையில் வளமுற்ற வகையினை வழங்குகின்றேன்.

ஒரு நாட்டின் நாகரிகத்திற்கும், நல்லாட்சிக்கும், பொருட் பெருக்கிற்கும் இன்றியமையாது வேண்டுவது செல்வ வளமாகும். நல்ல வாழ்வே நாகரிகம்; நாகரிக வாழ்வினில் நாடு நலம்பெற பொருட் செழிப்புப் பொங்கி, இயற்கை வளம் இலங்கவேண்டும். உலகைச் செழிப்பிக்கும் பொருள்வளம் ஒரு நாட்டின்கண் மலிந்தால், அந்நாடு திருவும் ஈகையும் செழித்த பொன்னாடாகப் பொலியுமன்றோ? நாட்டிற்குயிரான பொருட் பெருக்கிற்கு இன்றியமையாத துணைபுரிவது வர்த்தகமென்று சொல்ல வேண்டுவதில்லை. உலகில் உற்பத்தியாகும் பல பொருள்களும் பல நாட்டினர்க்கும் பயன்படும்படி வர்த்தகம் செய்தலே வாணிகத்தின் தன்மை என்னலாம். மனித வாழ்வுக்கு வேண்டிய பொருள்கள் யாவும் பல தேசத்தினருடன் செய்யும் வர்த்தகத் தொடர்பின் முயற்சியினாலே கிடைக்கப் பெறுவதாகும். ஆதலின், வளம் பொருந்திய ஒரு நாட்டிற்கு உயிர்நாடி வாணிகமென்பது நன்கு புலனாகிறது.

வர்த்தகத் துறையில் வணிகர் சிறந்த வரலாறு.

நம்முடைய தமிழ்நாடு முற்காலத்தில் கைத் தொழில் வளர்ச்சியிலும், வேளாண்மை விளைவிப் பிலும், வாணிகத் துறையிலும் வேறு பிறவற்றிலும் உயர்நிலை எய்திச் சிறந்திருந்த செய்தியைப் பழந்தமிழ் நூல்களில் காணலாகும். பாண்டியர், சோழர், மௌரிய அரசரின் நாட்களில் நம் நாடு கடல் அரசி யாயும், வியாபார உலகின் இதயமாயும் விளங்கிற்று. யூதர், அஸீரியர், கிரேக்கர், எகிப்தியர், உரோமர் முதலியவர்களுடன் பலமான வியாபாரஞ் செய்தது. கைத்தொழில், கப்பல் வாணிபம் ஆகியவற்றால் தமிழர் பெயர் உலகெங்கும் தெரிந்தது. இத்தனை வாணிபச் செழிப்பிற்கும், பொருட் செல்வத்திற்கும் மூலகார ணர் (அற்றை நாளில் வாழ்ந்துற்ற) தனவணிக மரபி னரே யாவர் என்று பழந்தமிழகச் சரித்திரம் பகர்வதே போதிய சான்றாகும்.

தனவணிகர் வாணிபப் பண்பினை ‘தமிழுணர்ச்சி’ பின்வருமாறு குறிப்பிடுகிறது: “மகரவாரி வளந்தந் தோங்கிய நகரவீதி”—அதாவது, கடலில் நாவா யூர்ந்து, அந்தக் கப்பல் வாணிபத்தாலும், கடல் தரும் முத்துக்கள், அரதனங்கள் முதலியவற்றா லும் விளங்குமென, நமது தமிழ்நாட்டு வீதிகள் புக ழுப் பெறுகின்றன. “கலந்தரு திருவிற்புலம் பெயர் மாக்கள்” (வியாபாரத்திற்காகத் தம் நாட்டைவிட்டு வெளிநாடு சென்று, தமது கப்பல்களிற் செல்வங் கொணர்ந்து, அச் செல்வத்தாற் பெருகிய மக்கள்) என்று நமது தனவணிகர் போற்றப் பெறுவர். இந்தச்

சான்றிலிருந்து முன்னைய காலத்துத் தனவணிகர் வெளிநாடு போந்து வாணிபம் செய்தற்காகச் சொந்தத்தில் கப்பல் வைத்திருந்தன ரென்பது நன்கு புலனாகின்றது.

தமிழரசியின் வாணிபச் சிறப்பிற்குத் தனவணிகரே காரணர்.

பழந்தமிழக காலத்தில் தனவணிகர் எத்தொழின் முறை நின்று வர்த்தகம் புரிந்தனர் என்று எவரும் கேட்கலாகும். இந்த சமுதாயத்திலே நான்குவித தொழிற் பாகுபாடுகளை வகுத்து, வேளாண்மை, பசு வளர்த்தல், வாணிபம் முதலியன வைசியத் தொழில்களெனக் குறிப்பிட்டிருக்கின்றனர். வணிகரின் வாணிப முறைபற்றி முற்பகுதியில் ஒருமுறை மொழிந்துள்ளமை நேயர்களின் நினைவிலிருக்கலாம்; மீண்டுமொருமுறை வணிகர் செய்து வந்த வர்த்தகப் பொருளினை எடுத்துக் கூறுகின்றேன். வடமலை (இமயமலை) பிறந்த மணியும் பொன்னும், குடமலைப் பிறந்த சந்தனமும், அகிலும், தென்கடல் முத்தும், குணகடல் பவளமும், கங்கை காவேரி தீரங்களின் விளைவும், ஈழநாட்டு உணவுகளும், பர்மாவில் உண்டாகும் வாசனைச் சாமான்களும் வணிகர் வாணிபச் சரக்குகளெனச் சரித்திரம் சாற்றுகின்றது. தனவணிகர் காவிரிப்பூம் பட்டினத்தில் வாழ்ந்த காலத்தில் பூம்புகார் நகரை வளங்கொழிக்கச் செய்த வண்மை கண்டு, அந் நகரினுள்ளார், வணிகர் வசித்த பதியை 'பயன் கெழுவீதி' எனச் சொல்லினர். சுருங்கச் சொல்லின், பண்டைய காலத்தில், கடலரசியாக விளங்கி, உலக முழுதும்

கப்பலோட்டி, நாட்டில் பொன்னுறு பாய்ச்சிய தமிழரசியின் வாணிபச் சிறப்பினைத் தனவணிகரே தாங்கி, தமிழ்ப்பணி செய்தனரென்று சொல்லுதல் வேண்டும்.

தனவணிகர் தன்மை குறித்துத் தமிழறிஞர் கருத்து.

தனவணிக மரபின் மாண்பு குறித்துப் புலவர் பெருமக்களாய பேரறிஞர் பலர் கருத்துரை வழங்கியுள்ளார்கள். தனவணிகர் புரிகின்ற தமிழ்ப்பணி—தருமப்பணி—தேசப்பணி—இன்னபிற அறப்பணி முதலியனவற்றின் பண்பினை உணர்ந்த நற்றமிழறிஞர் சிலரிடம், தனவணிகர் இயல்பினைத் தமிழகத்தார்க்கு உணர்த்துகின்ற கருத்துரை வழங்குமாறு வேண்டினேன். பைந்தமிழறிஞர்கள் இன்புடன் இசைந்து தந்தனர்.

சிதம்பர நாதரின் சீரிய கருத்துரை.

செந்தமிழ்ச் செல்வர் திருவாளர் டி. கே. சிதம்பரநாத முதலியாரவர்கள் தனவணிகர் எத்தகைய இயல்பினர் என்பதை அமுதச் சொற்களால் அழகுற இயம்புகிறார். திருவாளர் டி. கே. சி. அவர்களின் கருத்துரை :

பல நூற்றுண்டுகளாக இரண்டு சிறந்த குணங்கள் தனவணிகர்களிடம் வளர்ந்திருக்கின்றன. ஒன்று—எளிமையான வாழ்க்கை, இரண்டு நாணயமாய் நடந்து கொள்வது. இந்த இரண்டு காரணங்கள்

பற்றியே இவர்கள் தமிழ்நாட்டில் சிறந்த லேவாதேவி முதலாளிகளாய், இருந்து வந்திருக்கிறார்கள். தமிழ் நாட்டில் எந்த ஊரானாலும் சரி, மலைப்பிரதேசமான ஊராயிருந்தாலும சகல ஜனங்களும் இவர்கள் வைத்த கடையிலேயே நம்பிக்கை வைப்பார்கள். பணத்தைப் போடுவார்கள். கடைவைத்தவர் தனவணிகர் குலத்தைச் சேர்ந்தவர் என்று தெரிந்தால் போதும். வேறொரு விபரமும் அவர்களைப் பற்றித் தெரிய வேண்டியதில்லை. பரம்பரையாய் உள்ளூரிலேயே பிறந்து வளர்ந்த மனுஷர்போல நம்பிக்கைக்கு ஆளாவார்கள்.

மேல்நாட்டுத் தொழிலை மேற்கொண்ட தனவணிகர்.

இந்த விதமாகத் தமிழ் நாடெங்கும் லேவாதேவி நடத்தியதிலிருந்து இதர நாடுகளுக்கும் சென்று லேவாதேவித் தொழில் நடத்தவும், அதில் முன்னேறவும் ஆரம்பித்தார்கள். இப்படி அவர்கள் தொழில் விரிவு அடையவும் மேல் நாட்டாருடைய பாங்கிகளுக்கு எந்த விதத்திலும் குறைவில்லை என்று ஆய்விட்டது. தனவணிகர்களுடைய லேவாதேவித் தொழில் இல்லாமல் போயிருந்தால் அந்தத் தொழிலுக்கு இந்தியர் லாயக்கில்லை, மேல்நாட்டார்தான் உரியவர்கள் என்று தப்பாக எண்ண நேர்ந்திருக்கும்.

சிற்பக் கலையைச் சிறப்பிக்கும் செல்வத் தனவணிகர்.

தனவணிகர்களுடைய சமய சம்பந்தமான பக்தி மிகவும் பாராட்டத்தக்கது, வியக்கத்தக்கது. கோயில் கோபுரம் கட்டுகிற சிற்பக் கலையில் தமிழ்நாடு சிறந்திருப்பதுபோல் உலகத்தில் வேறு எந்த நாடுமே

இல்லை. சிற்ப நூலின் நயந்தெரிந்த மேல்நாட்டாரும், இந்தியருமே இந்த உண்மையை ஒப்புக்கொண்டு பாராட்டிப் புகழ்ந்து எழுதியிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் இது ஆதியாக உள்ள கலை. சிற்பிகள் இன்றைக்கும் அருமையான கலை ஒன்றை மறவாது வளர்த்து வந்திருக்கிறார்கள் என்றால், அதற்குக் காரண பூதமாய் இருப்பது கோடி கோடியாகப் பணம் செலவழித்துத் திருப்பணி செய்து வருகிற தனவணிக குலமே ஒழிய வேறில்லை.

தமிழைக் காக்கும் தனவணிக இளைஞர்கள்.

மேலே சொன்ன எளிமையான வாழ்க்கை, நாணயமான தொழில், சமய பக்தி, எல்லாம் சேர்ந்து வந்து தனவணிகர்களுக்குச் சகல விதத்திலும் சித்தி கிடைத்திருக்கிறது. தமிழ் பாஷையானது மிகச் சிறந்த நாகரிகத்தையும் (Culture) பண்பாட்டையும் தன்னுள் பொதிந்து வைத்திருக்கிறது. ஆயிரக் கணக்கான வருஷங்களில் பழுத்த செல்வம் அது. சமயமோ, தத்துவமோ, கவியோ எதைப் பார்த்தாலும் தமிழ் மிகச் சிறந்த பாஷையாய் இருக்கிறது. சில நூற்றாண்டுகளாக எப்படியோ தமிழிலுள்ள பண்பாட்டை யாரும் கவனியாமல், போலித் தமிழ் நூல்களிலேயே மோகம் கொண்டவர்களாய்ப் போய்விட்டார்கள், நம்மவர்கள். இப்போது தனவணிக இளைஞர்கள், பூர்வத்திலுள்ள பண்பாட்டை நம்முடைய வாழ்க்கைக்குக் கொண்டுவந்து, வாழ்க்கையை வளம்படுத்த வேண்டும் என்ற முறையில் முயன்று வருகிறார்கள். இது நல்ல சகுனமாகவேஇருக்கிறது. அவர்களுடைய

பயிற்சி எல்லாம், பக்கத்தில் நின்று துணை செய்யும்; சித்தி அடைவார்கள். 'தமிழ்நாடு அவர்களையே எதிர் பார்த்த வண்ணமாக இருக்கிறது' என்று முத்தமிழ்ச் செல்வி தமிழம்மை இற்றை நாளிலும் ஏற்றம் பெற்று செங்கோ லோச்சுகின்ற சீரிய பண்பினை உறுதற்கு இலக்காக நிற்பவர் தனவணிகரே என்று பேரறிஞர் டி. கே. சி. அவர்கள் புகல்வதைத் தமிழ் நாட்டவர் அறிதல் மிக நன்றாகும்.

அடிகள் அமைச்சர் தந்த அழகிய கருத்துரை.

நண்பர்களே! தனவணிகர்களுக்குத் தேசியக் கடமையை உணர்த்துகின்ற செய்தி தருமாறு மகாத்மா காந்தியடிகளுக்கு விண்ணப்பித்திருந்தேன். காந்தி அடிகளார் கருத்துரை தருதற்கு இதுபோழ்து வாய்ப்பு நேராமையால், அடிகள் சார்பாக அவர் தம் அமைச்சர் ஸ்ரீஜத் மகாதேவ தேசாய், கருத்து நிறைந்த சுருங்கிய செய்தியை வழங்கியுள்ளார். ஸ்ரீஜத் மகாதேவ தேசாய் பின்வருமாறு எழுதுகிறார்: "ஏழைகளுக்கு நன்மை பயப்பதற்கே தங்களிடம், தங்களுடைய செல்வம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்று செல்வந்தர்கள் கருதவேண்டும்" என்று செட்டியார் சமூகத்தினர்க்கு, சமதர்ம எண்ணத்தின் ஈட்டத்தையும், செல்வந்தராயுள்ளார் கடமையையும் நுட்பமாக நுவலுகின்ற தன்மையை அறிதல் வேண்டும்.

பண்டித ஜவஹர் பகர்ந்த கருத்துரை.

தனவணிக மரபினர்க்குப் பாரதத் தாயின் தியாகப் புதல்வன் பண்டித ஜவஹர்லால் நேரு சாற்றிப்



போந்த கருத்து மிக அருமையானதாகும். அதனை இங்கு சொல்ல வேண்டுவது ரொம்பவும் அவசிய மென் றெண்ணுகின்றேன். இலங்கை இந்தியப் பிரச்னை சம்பந்தமாக இவண் (இலங்கை) போந்த பண்டித ஜவஹர்லால் நேருஜீயை—இலங்கை நாட்டுக் கோட்டை நகரத்தார் மரபினர், தங்கள் சங்கச் சார்பாக (19-7-39-ல்) வரவேற்று நன்றியுரை பகர்ந்தனர். இலங்கையில் தங்கள் தொழிலுக் குற்றுவரும் இடர்களைச் சொல்லினர். அதுபோது செட்டியார்கள் சங்கத்திலே ஜவஹர்லால் நேருஜீ, இவ்வாறு பேசினர்:—

"நண்பர்களே! செட்டியார் சமூகத்தின் தொழில் ஆர்வம் எனக்கு நன்கு தெரிந்திருக்கிறது. இந் நாட்டின் (இலங்கையின்) அபிவிருத்திக்கு நீங்கள் பேருதவி செய்திருப்பதை நான் அறிவேன்.............. இலங்கையில் உங்கள் மரபினர் பத்துக் கோடி ரூபாய் முடக்கியிருப்பதாக நீங்கள் சொல்லி யிருக்கிறீர்கள். இது பெரிதல்ல; பணத்தைவிட ஒழுக்கந்தான் பிரதானமானது. பணத்தினுலான மூலதனத்தைவிட ஒழுக்கத்தினுலான மூலதனத்தையே பெரிதாக நீங்கள் மதிக்க வேண்டும். நீங்கள் இந்தியர்கள்; பராக்கிரமம் வாய்ந்த பாரதநாட்டின் புதல்வர்கள். தன் மதிப்புள்ள இந்தியரென்ற உணர்ச்சியில் நீங்கள் பெருமையும், கர்வமும் அடையவேண்டும். இந்திய சமூதாயத்தின்

> பெருந் தன்மைக்கும், ஒழுக்கத்திற்கும் நீங்கள் உதாரணமாகத் திகழவேண்டும். பணத்தைவிட இதுதான் பிரதானமானது. வாழ்க்கையின் உயிர் நாடியான இலட்சியம் ஒழுங்கும், ஒழுக்கமுந்தான் "...........

என்று தனவணிகர் நிரம்பியிருந்த கூட்டத்திலே, ஜவஹர் கர்ஜித்தார். ஜவஹர்லால் நேருஜீயின் இவ்வரிய கருத்துரையைத் தனவணிகரும், ஏனைய இந்தியரும் ஊன்றி உணர்தல் இன்றியமையாத கடமையாகுமன்றோ ?

தனவணிகர் வர்த்தகத்தால் தமிழ்நாடு சீர்மையுறும்.

இனி, தனவணிகரின் தற்காலக் கடமை குறித்துச் சில கருத்துக்களைச் சொல்லுகிறேன். தனவணிக மரபினர் பழந்தமிழ் நாட்டின் பெருமைக்கு இலக்காக ஆன்ற அன்பும், அறிவுப் பெருக்கமும், தொழிற் புலமையும், ஈகைக்குணமும், பொதுநலப் பணியும், அமைந்து, மேன்மேலும் சிறந்த இலட்சிய முள்ளவர்களாய் வாழ்தல் வேண்டும். சங்க காலத்தில் வாழ்ந்துவந்த தனவணிகர், வர்த்தகத்துறை அனைத்திலும் வளமை பெற்று வாணிபம் செய்ததுபோல, இக்கால வணிக மரபினரும் எல்லாத் தொழில்களினும் ஈடுபட்டு, ஏமமுற்று நாட்டுவளம் கொழிக்கச்செய்ய வேண்டுமென்பதே என்னனையார் கருத்தாகும். தனவணிகர் காலத்திற்கேற்ற தொழிலில் முன்னேற்ற முற்றால் அதனால் தமிழகம் செம்மை வாய்ந்த சீர்மையடையும் என்பதில் ஐயமின்று. எனவே, தனவணிகர்

வட்டித்தொழில் மட்டுமின்றி, தமிழ்நாட்டு வாணிபத் துறைகள் அனைத்தையும் கைப்பற்ற வேண்டுவது மிகவும் இன்றியமையாததென்று வற்புறுத்திச் சொல்லுகின்றேன்.

தனவணிகர் தொழிலாக்க வகையினை சுவாமிஜீ சொல்லுகின்றார்.

தனவணிகர் எவ்வத்துறைகளில் தொழிலாக்க முறைமையென்னும் கருத்தினை விளக்கி, "தமிழுணர்ச்சி" யில் தனவணிகர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கின்றார் சுவாமி சுத்தானந்த பாரதியார். அப் பகுதி ரொம்பவும் சிறந்த உயர்வினை உடையதாய், தனவணிகர்கட்கு மிகப் பயனுள்ளதாய் அமைந்திருக்கின்றது. அக் கருத்துக்களை இந்த வானவசனி உரையோடு (Radio Talk) இணைத்துச் சொல்லுதல் அதி அவசியமென்று அடியேன் உள்ளம் கிளர்ந்து உணர்த்துகின்றது. இயம்புகின்றேன்; கேளுங்கள் :—

மேனாட்டில் கலை, இலக்கியம், அரசியல் வளமை அனைத்தையும் வளர்த்தது வாணிபச் செல்வமே. ஒரு நாட்டின் புகழ் முடிக்குப் பாதுகாப்பு, வீரரல்லர்; தொழிலாளரேயாவர். தொழிற் செல்வம் பெருகப் பெருகக் கலைச் செல்வமும் பெருகும். தொழிலும், வாணிபமும் இல்லாவிட்டால், கலையும், வீரமும், அரசும் வறுமையால் வற்றிப்போம். நமது முன்னேற்றப் பணிகளுக்கெல்லாம் பொருளாதாரம் தொழிலையும், வாணிபத்தையும் பெருக்குவதேயாம்.

இந்தப் பெரிய காரியங்களை நிறைவேற்றப் பொருட் செழிப்பு வேண்டுமல்லவா? அதற்கும் வழி காண்பாம்: மனிதசக்தியை உழைப்பாக மாற்றவேண்டும்—அதுவே பொருளாதார வழி. நமது தனவணிகப் பெருமக்கள், பர்மா, மலாய் முதலிய நாடுகளில் ஏராளமான முதலைப் போட்டிருக்கின்றனர். அவர் தமது வாணிபத் திறனைக் கொண்டு, அந்நாடுகளுக்கே தொண்டு செய்கின்றனர். அந்நாடுகள் ஒரு நாள் அவர்களை அன்னியராகவே மதிக்கத் தொடங்கும். உடனே தங்கை தோழியாகித் தோழி எசமானியாகி நம்மை வெருட்டுவாள்; அவள் மனங் கோணாது ஆட்பட்டு நடந்தால்தான் நம்மைத் தனது நாட்டில் குடியிருக்க விடுவாள்; இல்லையேல், "ஓடு வெளியே" என்பாள். தனவணிகர் கோடிக்கணக்கான பணத்தைப் பர்மாவில் போட்டு, பர்மா செழிப்புற உழைத்தனர். ராஜ ராஜ சோழன், பர்மா, மலேயா முதலிய நாடுகளை வென்றான். அன்று முதல் தமிழர் இந்நாடுகளிற் குடியேறி வாழ்ந்தனர். பர்மாப் பிரிவினை மணி யடித்த பின், ஆங்கே தமிழர் நிலைமை எப்படியிருக்கிறது பாருங்கள். இதைத் தமிழ்த்தாயின் எச்சரிக்கையாகக் கொள்ளவேண்டும்.

தனவணிகருக்கு ஒரு வேண்டுகோள்: உங்கள் கவனம் முழுவதையும் இனித் தாய் நாட்டிற் செலுத்துங்கள். நமது தமிழகம் செல்வச் செழிப்புற்றுப் பண்டை நாளைப்போலக் கல்வியும், தொழிலும், கலையும் விளங்கச் செய்யுங்கள். எப்படியும் ஒருவனுக்குத் தனது தாய் வீடுதான் உதவும்; மற்றதெல்லாம்

அன்னியனாகத்தான் அவன் இருக்க முடியும். தன வணிகருக்கு இயல்பாக வாணிபத்திறனும், காரியத் திறனும் உள்ளன. தாய் நாட்டில் விளையும் பருத்தி, நெல், மூங்கில், உணவுப் பொருள்கள், தொழிற் பொருள்களைக் கொண்டு கைத்தொழில்களைப் பெருக் குங்கள். நீங்கள் ஏன் மற்றொரு போர்டாகவும் ராக்ஃ பெல்லராகவும் ஆக முடியாது? நீங்கள் குபேரனது சந்ததிகளில்லையா? நீங்கள் மன்னருக்கு முடிசூட் டும் உரிமை பெற்றிருக்கவில்லையா? இன்றும் உங்க ளால்தான் தமிழும், தமிழ்நாடும் தழைத்தோங்குகின் றன. உங்களால்தான் கோயில் திருப்பணிகள் ஏராள மாக நடக்கின்றன. உங்களால்தான் எத்தனையோ அறச்சாலைகளும், திருமடங்களும் நாட்டில் விளங்கு கின்றன. நீங்கள் பெண்டு பிள்ளைகளை விட்டுக் கப்ப லேறிச் சென்று, அன்னிய நாடுகளில் பல்லாண்டுகள் இருந்து வருந்திப் பொருளீட்டுகிறீர்கள். இனி, நீங் கள் உங்கள் வாணிபத் திறனைத் தாய் நாட்டின் பணி யாக மாற்றவேண்டும்.

தனவணிகச் சகோதரர்களே! தமிழ் நிலத்தைச் சுற்றிப் பாருங்கள். தமிழ் நாட்டின் வாணிபம் யார் கையில் இருக்கிறது என்று பாருங்கள். தமிழ் நாட் டிற்கு வேண்டிய உப்பு முதல் கற்பூரம் வரை உள்ள பொருள்களை நீங்களேன் உற்பத்தி செய்யக்கூடாது? வட்டித் தொழில் போதாது. அதில் இனித் தக்க லாபம் இல்லை. நாகரிகமான பாங்குகளும் கூட்டுற வுச் சாலைகளும் எங்கும் ஏற்படுகின்றன. மக்கள் குறைந்த வட்டிக்கு எளிதாகக் கடன் வாங்குகிறார்கள்.

நீங்களும் சிலர் சேர்ந்து தமிழ் நாட்டுக் கூட்டுறவு பாங்கு ஒன்று ஏற்படுத்தலாகாதா? தமிழர் தேவைக்கு வேண்டிய பணத்தை அதனின்றுந் தரலாகாதா? மேனாட்டைப் பார்த்து இந்த விஷயத்தையும் நாம் கற்றுக் கொள்ளவேண்டும்.

தனவணிகர்களே! இனி, நீங்கள் பெட்டியடியிலே காலம் போக்கக்கூடாது. உங்களுக்குள்ள காரிய வீரத்தைக் கொண்டு, தாய் நாட்டிற்கு வேண்டிய தொழில்களை வளருங்கள். உதாரணம் வேண்டுமா? கேளுங்கள்; சிந்தியுங்கள்; தமிழ் நாட்டில் ஏராளமான மூங்கில்கள் உள்ளன. அவைகளைக் கொண்டு காயிதத் தொழில் ஏன் செய்யலாகாது? வங்கம் காயிதத் தொழில் செய்கிறது. தமிழர் தமிழருக்கு வேண்டிய காயிதத்தை ஏன் செய்துகொள்ளக் கூடாது? அதற்காகச் சில வாலியரை, ஜப்பான், அமெரிக்கா, நார்வே முதலிய நாடுகளுக்குப் பணந் தந்து அனுப்ப வேண்டும்; தொழில் கற்றபின் அவர் நம்மிடமே வேலை செய்வதாக ஒப்பந்தம் பேசிக் கொள்ளவேண்டும். குற்றாலம், பாபநாசம், பாண தீர்த்தம் முதலிய நீர்வீழ்ச்சிகளால் யந்திரங்களை ஓட்டலாம். ஒரு வெள்ளைக்காரனுக்கு இத்தகைய நாடு கிடைத்தால், அவன் அதை அளகாபுரி யாக்குவான்.

தனவணிகப் பெருமக்களே! மற்றோர் உதாரணம் வேண்டுமா? நமது பருத்தியும் மணிலாக்கொட்டையும் ஏன் கப்பலேற வேண்டும்? அவற்றைக் கிராமத்தில் ஏழைகளுக்குத் தந்து, சிறு சிறு குடிசைத் தொழில்களை வளர்க்கக் கூடாதா? பஞ்சடித்தல், நூற்

றல், நெய்தல், சாயம் போடல், நூல் திரித்தல், சமக்காளம் நெய்தல் முதலிய எத்தனையோ தொழிலுக்குப் பருத்தி பயனுகும். அத்தொழில்களால் ஆயிரக்கணக்கான ஏழைகள் பிழைக்க வழியாகும். அதை யேன் நீங்கள் கைக்கொள்ளலாகாது? மணிலாக்கொட்டை எண்ணெய் யந்திரங்களுக்குப் பயனுகிறது. பிண்ணுக்குச் சோப்பாகிறது. ஒரு காசு பெருத பிண்ணுக்கைக் காஸ்டிக் சோடா சேர்த்து, எதாயினும் பியூடி சோப் என்று பேர் கொடுத்து, பளபளப்பான பெட்டிகளில் விற்ருல், அதிசயமாக வாங்கி, முகத்தில் தடவிக் குளிக்கிறீர்கள். தமிழ் நாட்டில் விளையும் அற்புதமான வாசனைச் சாமான்களைச் சேர்த்து ஸ்நானப் பொடிகள் தயாரித்து ஏன் விற்கலாகாது? தமிழ் நாட்டில் உள்ள தென்னையால் ஏராளமான தொழில்களை வளர்க்கலாம். மலையாளத்தைப் பாருங்கள். ஒரு நாடுமுழுதும் தேங்காயாலும் மரிச்சீனிக் கிழங்காலும் பிழைக்கிறது. ஒவ்வொருவரும் அவரவர் ஊரைச் சுற்றிப் பாருங்கள். எவ்வளவு நிலங்கள் தரிசாகக் கிடக்கின்றன. அவை மலட்டு நிலங்களா? சகாரா வனாந்திரத்தில், பிரெஞ்சுக்காரர்கள் பௌதிக அறிவால் பயிர்களை வளர்க்கின்றன ரென்ருல், நீங்கள் நீர், நிலவளம் செழித்த தமிழ் நாட்டை யேன் செல்வச் சித்திரச் சோலையாக்கக் கூடாது? தண்ணீரில்லாத இடங்களில் ஆழமாக ஏற்றக் கேணிகளைத் தோண்டுங்கள். சேலம், கோயம்புத்தூர் கவுண்டர்கள் ஏத்தச் சால் பிடித்துத்தானே பயிர் விளைவிக்கின்றனர். தமிழ் நாட்டின் காடுகளை நன்ருகப் பயன்படுத்துங்கள். மரங்களைக் கொண்டு பல புதிய தொழில்களைச் செய்

யுங்கள். இரும்புத் தொழில்களைப் பெருக்குங்கள்.

தனவணிகர்காள்! இனிப் பல தொழில் முயற்சி களிற் புகுங்கள்; உடலில் அணிகளாக விளங்கும் தங்கக் கட்டிகளை யெல்லாம் கழற்றிப் புதிய புதிய தொழில் முயற்சிகளிற் போட்டு மேன்மேலும் உங் கள் கவனத்தைத் தமிழ் நாட்டிலேயே ஊன்றுங்கள்; தமிழ் நாட்டிற் செய்யும் தொழிற் பொருள்களைப் பிற நாடுகளில் பரப்பவே கப்பலேறுங்கள்; பல நாடுகளுக் கும் வாலிபர்களை அனுப்பித் தொழிலனுபவத்தைப் பெருக்குங்கள். ஏலேல சிங்கத்தின் இரத்தம் உங்க ளுடைய நரம்புகளில் ஓடவில்லையா? கொற்கை, பூம்புகார் போன்ற பட்டினங்களை மீண்டுங் கட்டுங்கள். கரிகாலன் திருமாவளவனாக விளங்கியது யாதால்? தனவணிகரின் வாணிபச் செல்வத்தாலன்றோ? மன் னர்க்குப் பின்னர்களே, காலத்திற்கேற்ற தொழிலைப் பெருக்குங்கள். தமிழ் நாட்டை அமெரிக்கா போன்று குபேர நாடாக்குங்கள்; தமிழ் நாட்டுக் கைத்தொழிற் பொருள்களைக் கப்பல் கப்பலாகக் கொண்டு சென்று, பொன்னும் மணியும் நிரம்பத் திரும்புங்கள்.

தனவைசியர்களே! தமிழ் நாட்டின் செல்வச் செழிப்பு உங்கள் கையில் உள்ளது. முயன்றால் அற்புதங்கள் செய்யலாம். யேனாட்டில் பரமஏழையாக இருந்தவர்கள் தம் முயற்சியால் ராக்ஃபெல்லர்களா கின்றனர். நாம் ஏன் அப்படியாகக் கூடாது? விழித் தெழுங்கள். பர்மாப் பிரிவினை உங்களுக்கு நல்ல உணர்ச்சியைத் தூட்டும். இதனால் உங்கள் மனம்

மேன்மேலும் தாய் நிலத்தின்பாற் செல்லட்டும். வட்டித் தொழில் வேண்டியதுதான்; எல்லோரும் அதிற் புகக்கூடாது. தனவணிகர் கூடி ஜில்லாவிற்கு ஒரு நல்ல பாங்கு மேனாட்டுக் கூட்டுறவு முறையில் ஏற்படுத்தலாம். அதற்கு வேண்டிய சிப்பந்திகள், முதலாளிகள் தவிர மற்றவர்கள் வேறு பல தொழில்களில் முதற் போட வேண்டும். தொழில் என்றால் உங்களை மண் வெட்டச் சொல்லவில்லை; கொத்தச் சொல்லவில்லை. அதற்கு ஏற்ற தொழிலாளி யிருக்கிறான். அவனுக்குப் பிழைப்பு உண்டுபண்ணச் சொல்கிறேன். உதாரணமாக நம் நாட்டில் ஏராளமான சோற்றுக் கற்றாழைகள் உள்ளன. குத்தகை யெடுங்கள். ஏழைகளைக் கொண்டு நார் உரியுங்கள். அதைக் கொண்டு தொழில் நடத்தி மேற்பார்வை பாருங்கள். அதனால் எத்தனையோ ஏழைகளுக்கு உழைப்பும் பிழைப்பும் உண்டாகும். உங்கள் பணமும் வளரும். லாபமும் கிடைக்கும். ஏழைகளுக்குக் கஞ்சி யூட்டும் புண்ணியமும் வரும். நாடும் செழிக்கும். இவ்வாறு கிராமம் கிராமமாகப் பாருங்கள். இயன்ற தொழிலில் முதல் போட்டுத் தமிழ் நாட்டில் பட்டினியால் சாகும் எளியவருக்கு உழைப்பும் பிழைப்பும் உண்டுபண்ணுங்கள். இதுதான் இப்போது நீங்கள் செய்யவேண்டிய பெரிய அறவினை. விழித்தெழுங்கள். அவரவர் தாய் நாடே அவரவருக்கு உரிய நிலமென உணருங்கள். நாட்டுப் பொருளைக் கொண்டு நாடு தழைக்கத் தொழில் செய்யுங்கள். ஒரு கையில் திருவாசகம் பிடியுங்கள்; மற்றொரு கையில் ஏழைகளுக்குக் கஞ்சிக் கலயம் பிடித்தெழுங்கள்! எழுந்திருங்கள்!

சிலப்பதிகாரத்தையும் பட்டினப் பாலையையும் படித்து அக் காலத் தனவணிகர் எப்படிக் குபேர சம்பத்துடன் வாழ்ந்து மன்னரின் நன் மதிப்பைப் பெற்றனர் என்று பாருங்கள்.

தமிழ் நாட்டை வளப்படுத்துதல் தனவணிகர் கடமை யாகும்.

வாணிப முன்னேற்றத்தில், தனவணிகர் வளம் பெற்று, அதனால் செந்தமிழ்நாடு செல்வக் கொடியை உயர்த்தி, தனித் தமிழ் ஆட்சியில் நந்தமிழ் நாடு வாழ வேண்டுமென்னும் வகையினை வகுத்துப் பின்வரும் பெற்றி மிக்க பைந்தமிழ்ப் பாட்டிலே விளங்க லாகிறது :

"தமிழ்நாட்டுக் கல்விமுறை தமிழர் கையில் ;
தாய்நாட்டுத் தொழில்களெலாந் தனயர் கையில் ;
தமிழர்வா ணிபமெல்லாந் தமிழர் கையில் ;
தமிழ்த்துறையி லியங்குவது தமிழர் கப்பல் ;
தமிழ்ச்சமு தாயப்பணியுந் தமிழர் கூட்டால்,
தமிழ்நாடு தமிழர்க்கே ; தமிழர் சேமந்
தமிழர்களின் ஒற்றுமையே ; தமிழர் உள்ளம்
தமிழுள்ள மெனில்வாழ்வு தழைப்ப தாமே"

தோழர்களே ! தமிழ்நாடு எதிர்காலத்திலே எத்தகைய இயல்பினில் இலங்க வேண்டுமென்பதற்கு இந்தப் பாட்டிலுள்ள பொருளில் விளங்குவதாயிருக்கின்ற தன்றோ ? எனவே, தனவணிகர் தங்கள் செல்வத்தைப் பல பயனுள்ள தொழில்களில் போட்டுத் தமிழ் நாட்டை வளம்படச் செய்தால், நாட்

டியுள்ள எல்லாத் தமிழனும் வறுமையின்றி—பசியால் வருந்தாது வாழலாம். தனவணிகரும் பயனுள்ள வாணிப வளர்ச்சியால் குபேரராகலாம். தமிழரெல்லாம் தகைமிகு தோழராய் ஒப்பில்லாக் கலைபயின்று தமிழ்ப்பணி செய்யலாம்.

ஆகவே, தற்காலத் தனவணிகர்கள் தங்கள் கடமையை நினைந்து பார்த்தல் வேண்டும். தமிழகத்தில் அன்பும், அறனும், அமைதியும், நேயமும் அரும்பி மலர்ந்து மாசறு சமரஸம் மல்க வேண்டுமானால் முன்னதாக மனிதனை வெறியனுக்கும் வறுமை, மடமை, சிறுமை தொலைந்து போதல் வேண்டும். இம் மூன்றும் தொலைதற்குப் பொருளுடையார் நாட்டுத் தேவையை நாட்டிலே அடைவதற்கு வழிதேடலன்றோ நன்று. நாடு செழிப்பதற் கேற்பவும், நாட்டு மக்கள் உழைப்பும் பிழைப்பும் பெற்று நலமுறுதற் கேற்பவும் அறிவுந் தொழிலும் முறையாய்ப் பெருக்கி,

'தமிழன் பசிக்கத் தமிழன் புசிக்கோம்
தமிழன் வருந்தத் தமிழர் சகியோம்'

என்னும் சால்பு நிறைந்த தன்மையைத் தமிழ் மரபிற்கு உண்டாக்க வேண்டுவது இன்றியமையாத தென்று தனவணிகர்களுக்கு மீட்டும் ஒரு முறை வலியுறுத்திச் சொல்லுகின்றேன்.

தனவணிக மரபினில் தோன்றிய இளந்தமிழர்களே எழுக!

இன்னமுதத் தமிழர்களே! இதுகாறும் தனவணிகர் தன்மை குறித்து ஒல்லும் வகையில் உரை

நிகழ்த்தலானேன்; கடமை பலவும் பகர்ந்தேன். இனி, முடிபுரை வழங்குகின்றேன். தனவணிக மர பிற் றோன்றிய வாலிப நண்பர்களே! உங்கட்கு ஒரு வார்த்தை. நாம் பழந் தமிழகப் பரம்பரை மரபினில் தோன்றியவர்கள்; வீரத் தமிழர் குழுவில் உதித்தவர் கள். எனவே, பழந்தமிழர் பெற்றிருந்த வீரமும், அஞ்சாமையும், ஆண்மையும் நமது இரத்தத்தில் செறிந் தோட வேண்டும்; அன்பும், அறமும், அருளும் பொலிந்து பெருகவேண்டும். 'நாம் வேண்டுவ தென்ன? இரத்தத்தில் பலம், நரம்புகளில் வலிவு, இரும்பு போன்ற தசைநார்கள், எஃகை யொத்த நரம் புகள்—இவையே நமக்கு வேண்டும். தளர்ச்சி தரும் கசிவுள்ள கொள்கைகள் நமக்குத் தேவையில்லை! என்று சுவாமி விவேகானந்தர் கர்ஜிக்கிறார். இத் தகைய உறுதியான உடல் உரம், திண்மையான திட சித்தக் கொள்கை இவைகளை நாம் அடைந்து வருவோ மாயின் நமது சமூகம் உலக வாழ்வின் இலட்சியங் களில் முன்னணி நிற்குமென்பதில் சந்தேகமில்லை. பண்டைய வீரத் தமிழர் போல இன்றுள்ளார் எழுந்து, வீறு பொலியும் இயல்புபெறின் பைந்தமிழ் நாடும் சுதந்தர வாழ்க்கையில் துலங்குதற்கு வீறிட்டு நிற்கும்; தமிழ்த் தாய் மைந்தரெல்லாம் நாட்டு நலங்காணக் கூட்டுணர்வு பெற்றுத் தலைநிமிர்ந்து வருவர்.

சால்பு நிறைந்த சமூகங்களைப்போல தனவணிகர் முன் னேறுக!

தமிழர் சமுதாயம் உலகிலுள்ள ஏனைய நாட்டின ரைப் போன்று எல்லா வகையினும் ஏமமுற வேண்டு

மென சுவாமி சுத்தானந்தர் சொல்லுகிறார். தமிழர் குழுவிற்குச் சாற்றுகின்ற அவற்றை தனவணிக மரபி னர்க்கு நான் நவிலுகின்றேன். தனவணிகர் வீறு பெற்ற வெற்றித் திருக்கூட்டமாக விளங்கவேண்டும். வங்கரின் அருங்கலைப் புலமையும், குஜராத்தியரின் உழைப்பும், பஞ்சாபியரின் உடலுறுதியும், ஆங்கிலே யரின் நாட்டன்பும், பிரெஞ்சுக்காரரின் இன வுணர் வும், ஜர்மனியாரின் வீரத்துணிவும், அமெரிக்கரின் கல்வி—தொழில் முன்னேற்றமும், ருஷ்யரின் சமதர்ம வுணர்வும், ஆந்திரரின் சாதிக் கட்டுப்பாடும், கேரள ரின் சுறுசுறுப்பும், தனவணிகருக்கு மேன்மேலும் பெருகி யோங்க வேண்டும். இந்தியாவின் பழம் பெருங்குடி மக்களாகிய தனவணிகர், புதுமை பெற் றெழுந்து, காலத்தை வெல்லும் வீரக்கனல் மைந்த ராக விளங்குக! எந்தாய் வாழ்க!

அருளைக் காக்கும் அன்பினையும்,
ஆன்ற வேதம் அத்தனையும்,
பொருளைக் காக்குந் தொழில்களையும்,
பூத வுலகிற் போதிந்தடரும்,
இருளைப் போக்கும் அறிவினையும்,
இனிய தமிழ்நா டெங்கிலுமே,
கருணை கொண்டு வளர்த்தார்கள்,
காக்குந் தகை வணிக ரம்மா!

மூவேந்தர் நாடுகளிலும்
தனவணிகர் செழித்தனர்

செட்டியார் மரபின் சிறப்பியல்புகள்

★ ★ ★

சுவாமி சுத்தானந்த பாரதியார் விடுத்த

அன்புக் கடிதம்

★

பழந்தமிழர் காலத் தனவணிகர் வாழ்வு குறித்த சில சில ஐயப்பாட்டினை அறிதற் பொருட்டு அறவோர் சுத்தானந்த அடிகளார்க்கு ஒரு கடிதம் விடுத்து, விளக்கம் அருளுமாறு வேண்டினேன். அன்பின் உருவான அடிகளார் அடியேன் ஐயப்பாட்டிற்கு விளக்கம் செய்து சிறந்த கருத்தமைந்த அரிய கடிதமொன்று தந்தனர். அவையே ஈண்டு காணப்படுவது. தமிழ் நாட்டார் தனவணிகரின் தகைமை சான்ற பெருமையை இனிது உணர இக் கடிதம் இன்றியமையாத துணை செய்யும்.—கதிர்.

★

அன்புக் கதிரேசனுக்கு,

மங்கலமாகுக.

"தனவணிகர் தன்மை" வெளிவரட்டும். தனவணிகரே தமிழ் நாட்டின் கடல், தரை வாணிபத்தை வகித்தனர். சிலம்புச் செல்வம் பூம்புகார் என்னும் பகுதியைப் பார்க்கவும். வணிகர் ஒரே வகுப்பார். பிற் காலம் பல இடங்களிற் குடியேறிப் பழக்க வழக்கங்கள் வேறுபட்டு பிரிவினைகள் உண்டாயின. இன்று காசிக்காரச் செட்டியார், நாட்டுக்கோட்டைச் செட்டியார் என்ற இரு பகுதியாகத் தனவணிகர் வாழ்கின்றனர். நாட்டுக் கோட்டையார் பெரும்பாலும் கடல் கடந்து சென்று தொழில் நடத்துகிறார்கள். காசிக்காரர் உள்நாட்டிலேயே பல தொழில்கள் நடத்துவர்.

அக்காலம் தனவணிகர் பணமே நகரச் செழிப்பிற்குக் காரணமாயிருந்தது. இன்று கூட அவ்வாறே. அதனால் அவர்களை 'நகரத்தார்' (நகரத்தில் முதன்மையானவர்) என்று அக்கால மக்கள் சிறப்பித்தார்கள். அக்காலம் நகரங்களுக்குக் கோட்டைகள் உண்டு. சிலம்பு மதுரைக் காட்சியைப் பார்க்கவும். இக் கோட்டைகளின் பாதுகாப்பிலிருந்து, தனவணிகர் தொழில் நடத்தினர். இவ்வாறு கோட்டை கட்டுவதற்கும் வணிகர் பணமே சிறப்பாக உதவியது. அதனால் அவர்களை அக்கால மன்னர் கோட்டையார், நாட்டுக் கோட்டையார் என்று அழைத்திருக்கலாம். இது ஊகத்தால் எழுதப்பெற்றது. எப்படியும பண்டைக் காலம் முதல் செட்டிமார்கள் தமிழர் கூட்டத்

8

திற்குச் செல்வக் கரம்போல உதவி செய்து புகழ் பெற்றோங்கினர் என்ப துண்மை. மூவேந்தர் நாடு களிலும் தனவணிகர் செழித்தனர்.

வாணிபம் சமுதாயத்திற்கு இன்றியமையாத சாதனம். வணிகரும் அவ்வாறே. சோழநாட்டு வணிகர் கரிகாலனுக்கு முடிசூட்டும் உரிமை பெற்றிருந்தனர் என்பர். அரசன் தனது நன்றியைக் காட்ட அவர்களுக்கு அவ்வுரிமை யளித்திருக்கலாம். ஏனெனில் அவர்களாலேயே பூம்புகார் செல்வச் செழிப்புற்றது. அவர்கள் தேக்குமரக் கப்பலில் நாட்டுச் சரக்கெடுத்துச் சென்று உலகமெல்லாம் விற்றுப் பணம் கொண்டு வந்தனர். பட்டினப்பாலையில் அக்கால வாணிபப் பெருக்கம் சொல்லப் பெற்றுள்ளது. பூம்புகாரைக் கடல் உண்டது. அப்போதே வணிகர் பல திசைகளுக்குச் சென்றிருக்க வேண்டும். சோழன் தமது வகுப்புப் பெண்ணொருத்தியை மணம் புரிய விரும்பியதாகவும், அதற்குச் சம்மதியாது வணிகர் வலசை போனதாகவும் கதை சொல்லுவர். ஆனால் பணத் தொழிலாளிகள் எங்கே தொழில் நடக்குமோ அங்கே குடியேறுவது இயல்புதானே. புதுக்கோட்டை, மதுரை முதலிய இடங்களில் கடைவைத்து சரக்கு விற்று லாபம் பெறவே தனவணிகர் சென்றனர் என்று கொள்ள வேண்டும். தனவணிகரைப் பற்றிப் புதுக்கோட்டை ஸ்டேட் 'எ ஜெனரல் ஹிஸ்டரி ஆப் புதுக்கோட்டா ஸ்டேட்' என்னும் நூலில் உள்ள (நாட்டுக்கோட்டைச் செட்டி என்ற) குறிப்பைக் காண்க. அவற்றையே "தமிழுணர்ச்சி"யில் எடுத்தாண்டது.

தமிழகம் தற்கால இங்கிலாந்தைப் போலவே கப்பல் வாணிபத்தில் அக்காலத்திற் கேற்றபடி சிறந்திருந்தது. ஆங்கிலேயர் பச்சை குத்திக்கொண்டு தழை கட்டிக்கொண்டு புதர்களில் வசித்த காலம், நமது தமிழர் உயர்ந்த கலைச்சிறப்புடன் அரசாண்டனர். தமிழ் வணிகர் தேக்குமரக் கப்பலில் கைத்தொழிற் சாமான்களைக் கொண்டு உலகெங்கும் விற்றனர். ஐரோப்பியரான கிரேக்கரும் ரோமரும் நமது நாட்டை எதிர்பார்த்து நின்றனர். வள்ளுவர் சீடரான ஏலேல சிங்கர் தனவணிகரே யாவர். பட்டினத்தாரும் அவ்வாறே. ஏலேல சிங்கர் கப்பல் கப்பலாகக் கதர் நூலும் ஆடையும் விற்றார். அவரிடம் நூல் வாங்கியே வள்ளுவர் தறி நெய்தார். இதைத் திருக்குற ளின்பத்திற் காண்க.

மணவினையில் அக்காலத் தமிழரெல்லாரும் காதல் முறையையே கைக்கொண்டனர். களவியலுக் கப்புறம் கற்பியல்....காதலர் ஒருவரை யொருவர் கண்டு உளங்கொண்டு, மனமொப்பி, அவர் காதல் பெரியார்களுக்குத் தெரிந்த பின்னரே திருமணம் நடக்கும். பிற்காலமே புரோகிதமும் ஈடற்ற மணங்களும் பல சிக்கல்களும் ஏற்பட்டு இயற்கை மணத்தைக் கெடுத்தன. திருக்குற ளின்பம் காமத்துப்பால் விளக்கத்தைப் படிக்கவும். அதில் தமிழர் காதல் வாழ்க்கை விளங்கும்.

இசை குடிமானம் நீண்ட காலமாகத் தனவணிகரிடை யுண்டு, ஏன், மற்ற வகுப்பினரிடையே கூடச் சீதனப் பொருள்களை ஒன்று விடாமல் ஜாப்தாப் பண்ணிப் பிள்ளை வீட்டார் கையெழுத்து வாங்கி வைத்துக்

கொள்வர். பெண்ணுக்கு ஏதாயினும் கேடு வந்தால், கணவன் தள்ளிவைத்தால், பெண் இறந்து போனால், படுத்த மெத்தையைக்கூட விடாது சுருட்டிச் செல்லும் சம்பந்திகளும் உண்டு. ஆனால் இவையெல்லாம் திருமணத்தை வியாபார மாக்குகின்றன. தொண்ணூற்றாறு குடும்பம், அந்தக் கோயில், இந்தக் கோயில் என்பதும் பழக்கத்தால் ஏற்பட்ட பிரிவினைகள். நமது நாட்டு முன்னேற்றத்தைத் தடுப்பன இந்தச் சாதி உணர்ச்சியும் பிரிவினைகளுமேயாம். இவையெல்லாம் மறைந்துபோகவேண்டும். எந்தச் சாதியானாலும் எக் குலமானாலும் "காதல் இருவர் கருத்தொருமித்து ஆதரவு பட்டதே இன்பம்" என்னும் ஔவை திருமொழியை மேற்கொண்டு மனமொப்பிய இருபாலார், வள்ளுவர் வகுத்த முறையே கற்பும், அன்பும், அறமும், பாத்தூணும் கொண்ட இல்லற வாழ்வு நடத்த வேண்டும். இனிச் சாதிமத வேறுபாடுகளெல்லாம் கால வெள்ளத்திற் கரைந்தொழியும். தமிழர் எல்லாரும் ஓரே குலமாகக் கொண்டு கொடுத்து சங்ககாலம் போலே வாழும் நாளை எதிர்பார்ப்போம்.

தனவணிகர் தமிழன்னையின் பொற்கோயிலை அமைக்கும் செல்வத் திருக்கைகளாக விளங்க வேண்டும். ஆனால் எப்போதும் தாம் தமிழர் என்பதையே நினைக்க வேண்டும். ஒரு குடும்பத்தில் மூத்தவன் இலக்கியப் புலவனாகி ஆசிரியனா யிருக்கலாம்; அடுத்தவன் வீட்டைப் பாதுகாத்து நிர்வகிக்கும் வீரனா யிருக்கலாம்; அடுத்தவன் வெளியே சென்று தொழில் செய்து குடும்பத்திற்கு வருவாய் தேடும் செல்வனா யிருக்கலாம்; அடுத்தவன் வீட்டுக்கு வேண்

டிய வேலைகளைச் செய்யும் தொண்டனா யிருக்கலாம். இன்னொருவன் வீட்டைச் சுத்தம் செய்யும் வேலையைச் செய்யலாம்; ஆனால் இவர்களை வெவ்வேறு சாதி யென்னலாமா? தாயார் சாணம் பிசைந்து தட்டுகிறார், ஆடை தவைக்கிறார். அவளை அக்காலம் தாழ்வாக நினைக்கலாமா? கூடாதல்லவா? ஆகையால் தொழில் வேறுபடலாம்..........ஆனால் எல்லாரும் தமிழர், தமிழ் நமது நாட்டின் முன்மொழி, தோன் மொழி. தமிழர் 10,000 ஆண்டுகளாக நாகரிகம் பெற்றோங்கும் ஒப்பற்ற திருக்கூட்டத்தார். அக் கூட்டத்திற்குச் செல்வத் தொண்டு புரிந்தவர் தன வணிகர் என்பதை மறக்கக் கூடாது.

அரவிந்த நிலயம்,
புதுவை,
1-11-39.

அன்பு, அன்பு, அன்பு,

சுத்தானந்த பாரதி

பிழை திருத்தம்

வானொலி விரிவுரையில் :

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
24	9	பெறறியை	பெற்றியை
40	10	விளங்கி	விளக்கி
51	3	நீகரற்ற	நிகரற்ற
62	14	பண்படைத்தமிழர்	பண்டைத்தமிழர்
63	3	முக்காலத்தமிழர்	முற்காலத்தமிழர்
63	20	பெருமை வாழ்ந்த	பெருமை வாய்ந்த